







டி. எஸ். ஆர். கோகுல் கூந்தல் தைலம் அதன் அரிய வாசனைக்கும் அபூர்வ குணத்திற்கும் பெயர்போனது. இது கூந்தலை கருகருவென்று நீண்டு வளரச் செய்வதோடன்றி, மூளைக்கு குளுகுளுப்பையும் அளாதி சுறுசுறுப்பையும் அளிக்கிறது.



டி.எஸ்.ஆர். & கோ.,
கும்பகோணம்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டு:
சூராஜ் ஏஜன்ஸீஸ்
157, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை சென்னை
கோவை, பாலக்காடு ஜில்லாவிற்கு
சோல் ஏஜண்டுகள்:
B. பாலபட்டாபி செட்டியார்
246, வைசியாள் தெரு, கோயமுத்தூர்
வட ஆற்காடு ஜில்லாவுக்கு:
சேகர்ஸ், திருப்பத்தூர் (N. A.)

ஆகாரத்திற்கு பின்

வயிற்று நோயா?

இதுதான்
நான் சிபாரிசு
செய்வது



கசிந்திய அதிக அமிலம்
பெருகுவதை அடக்கவு


அதிரான உணவுகளை உண்பதால் இந்த அதிக அமில சேர்ப்புகளும் ஏற்படும் எரிச்சல், வாயு, இதர உபாதைகள், அதிரமை ஆகாரத்திற்குப்பின் வயிற்று நோய முதலியவைகளுக்கு உகைய அதிக வேர ரணமாயிய ''பிஸ்மாக்'' கை போக செய்கிறேன் அப்பச் சோகமயரள் வயிற்று நோயால் தவிப்பவர்களுக்கு உடனேயே ''பிஸ்மாக்'' ஸ்வாரணமளிக்கும். இனிநே ஒருமுறை பரீக்ஷித்து உங்கள் வயிற்றை சகல உபாதையின் நிருந்தும் தடுத்தாட் கொள்ளுங்கள்

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

இந்தியாவிற்கு பூரண விநியோகஸ்தர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.
பம்பாய் • கல்கத்தா • டெல்லி • மதராஸ்



"கல்கி" ஆசிரியர் எழுதிய இருபெரு நவீனங்கள்

சிவகாமியின் சபதம்

பரிசுப் பதிப்பு ரூ. 15 மலிவுப் பதிப்பு ரூ. 9

•

பார்த்திபன் கனவு

விலை ரூ. 6-8-0

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் மகோன்னத காலத்தை இவ்விரு நவீனங்களும் அற்புதமாக விளக்குகின்றன

•

(தபால் செலவு பிரத்தியேகம்)

கிடைக்குமிடம்: கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை

கல்கி



KALKI மார்ச் 26, 1950 4 அணா

ஆரோக்கியமும் சந்துஷ்டியுமுள்ள குழந்தைகளுக்கு

அவர்கள் செலவழித்த சக்தியைத் திரும்பப் பெற அதிகப்படி உணவு அவசியம்.



குழந்தைகளின் விளையாட்டிலும், படிப்பு வேலையிலும் துரிதமாக ஜீவசக்தி விரயமாகி விடுவதால், ருசிமிகுந்த ஓவல்டின் இழந்த சக்தியை புதுப்பிக்க உதவும்.

ஓவல்டின் இளம் குழந்தைகளுக்கும் சுலபமாக ஜீரணமாகும். விவேகமுள்ள தாய்மார் அவர்களது குடும்பத்தினருக்கு காலையிலும், இரவில் படுப்பதற்கு முன்பும் ஓவல்டினைக் கொடுக்கின்றனர்.

குழந்தைகள் "ஓவல்டின்" மணத்தை விரும்புகின்றனர். அதில் பழுத்த பார்லி மால்டிலிருக்கும் புஷ்டி, ஜீவ சக்தியளிக்கும் குணங்களும், சுத்தமான கெட்டிப்பால், விசேஷமாகத் தயாரித்த கோகோ, மதிப்பு வாய்ந்த இயற்கை பாஸ்பேட்கள், விட்டமின்கள் முதலியவை நிறைந்த அளவில் அடங்கியுள்ளன.

இளம் உடல் வளரவும், எதிர்கால ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தவும் உங்கள் குழந்தைகளுக்கு "ஓவல்டின்" கொடுங்கள். இப்பெயர் கொண்டது இது ஒன்றுதான்.



'OVALTINE'

ஓவல்டின்

உலகில் மிகப் பிரசித்தி பெற்ற உணவு பானம்.

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்

OV. 503.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras


உருளைக் கிழங்குகளால் நீங்கள் சலவை செய்யமுடியுமா?



உருளைக் கிழங்கு அல்லது சாக்குக்கட்டியால், துணி கிழிந்து சின்னாபின்னமாகும்படி கெட்டியாக உறைத்தால், துணி சுத்தமாகலாம்! உருளைக்கிழங்குகளைச் சாப்பிடவும், சாக்குக்கட்டியைக் கரும் பலகையில் எழுதவும் உபயோகித்து, துணிகளை சுத்தமான ஸோப்பினால் வெளுத்தால் நாளாவட்டத்தில் செலவு மிச்சமாகும்.

சாக்கு அல்லது உருளைக்கிழங்கு மாவினால் நிரப்பப்பெற்ற போலி ஸோப்புகள், உங்களுக்கு தேக ஸ்ரமத்தையும் துணிகளைப் பாழாக்கு வதிலும் தான் உதவுகின்றன.

கேரளா
வாஷ்வெல்




சுத்தமான பார் ஸோப்

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமெர்ஸ்

க்ருஷன்

எனது ஒல்லியான பருமனற்ற தேகத்தைத் திருப்பி யளித்தது



கல்யாணமான புதிதில் சரளா அவளது அழகிய கொடிபோன்ற உருவத்திற்காகப் போற்றப்பட்டாள். ஆனால் வருஷங்கள் செல்லச் செல்ல மிகுந்த பருமனும் வளர்ந்து விட்டாள்.


"ஊளைச் சதையினால் ஏற்பட்ட எனது தொல்லைகள் அஜீரணத்தினாலும், மூச்சுத் திணறலினாலும் அதிகரித்தன. எனக்கு நடக்கவும் முடியாமல் என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பின்னர் ஒரு சிநேகிதி "க்ருஷன்" சால்ட் சிபாரிசு செய்தாள். அவள் புத்திமதிப் பிரகாரமே ஒரு பாட்டில் "க்ருஷன்" வாங்கினேன். இப்பொழுது நான்கு மாத க்ருஷன் சிகிச்சைக்குப் பிறகு தேகம் பருமன் குறைந்து மறுபடியும் சுறுசுறுப்பாக இருக்கிறேன். இருதயத் துடிப்பு, அஜீர்ணம் இவைகளினின்று விடுபட்டேன். நான் அவ்வாறிருப்பதை ஸ்திரப்படுத்திக் கொள்ளுவதற்காகப் பிரதி காலையிலும் சிறிதளவு க்ருஷன் உட்கொள்ளுகிறேன்."



ஊளைச்சதையும் அதனுல் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளும் மூச்சுத் திணறலும் உடம்பில் விஷத்தன்மையுள்ள கழிவுப் பொருள்களின் சேர்க்கையாலேயே உண்டாகின்றன. இவை, கழிவுகளை வெளியே தள்ளும் அவயவங்களின் வேலையைச் சரிவரச் செய்ய முடியாதபடி தடுக்கின்றன. க்ருஷனிலுள்ள ஜீவ தாதுக்கள் கொழுப்பை உண்டாக்கும் அசுத்தங்களை உடலினின்றும் விடுவிக்கின்றன. அவயவங்களை இயற்கையாகவே இயங்குமாறு செய்வதன்றி அபாயமற்றதும் இயற்கையானதுமாய் அமைந்திருக்கின்றது.

இன்றே க்ருஷன் வாங்குங்கள். எல்லாக் கெமிஸ்டுகளாலும், வியாபாரிகளாலும், மஞ்சள் பெட்டியில் ரூ. 1-10-0 க்கு விற்கப்படுகின்றது.

நீங்களும் அந்த க்ருஷன் உணர்ச்சியைப் பெறலாம்



வளர்ச்சி மிக அவசியமானது!

ஆரோக்கியமாயுள்ள குழந்தைக்கு எடை ஏறிக் கொண்டே போகிறது. கொழுப்பல்ல, உறுதியான எலும்பும் தசையும். நிறுப்பதைத் தவிர, உயரம் மார்பின் அளவு இவற்றை மாதா மாதம் எடுப்பதால் இதைப் பரிசோதனை செய்ய முடியும். உங்கள் குழந்தை வளர்ச்சியின்றியோ, கிரமத்துக்கு மேலாக வளரவோ செய்யாதபடி நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகாரத்தில் போதுமான வைடமின்கள்* இருந்தால் தான் சரியான வளர்ச்சி சாத்தியமாகும், தற்காலம் அகப்படும் உணவு போதுமான அளவு வைடமின்கள் இல்லாதபடியால், அதிகப்படியான வைடமின்கள்* கொடுப்பது அவசியமாகிறது. ஒவ்வொரு சாப்பாட்டுடனும் சில சொட்டு அடாமின் கொடுப்பதால், A, D *வைடமின்களின் முழு அளவும் கிடைக்கிறது. பழசத்திலோ, பாலிலோ அடாமின் கலந்தால் அதிகமாய் வாசனை தெரியாது. தவிர அது யாதொரு வயிற்றுக் கோளாறையும் உண்டு பண்ணாது.

அடாமின்

ஷார்க் லிவர் ஆயிலின் புதிய சத்து.

* வைடமின் A : உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சாதகமானது. ஜலதோஷம், சின்னம்மை, நீர்க்கோளுருவல், கக்கிருமல் முதலிய நோய்களைத் தடுக்கிறது - வெட்டுக்காயம், சிராய்ப்பு இவைகளிலிருந்து விஷம் பரவாமல் பாதுகாக்கிறது.
* வைடமின் D : எலும்புக்கூட்டுக்கு நலம் அளிக்கிறது. உறுதியான எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கும் சரியாக இன்றியமையாதது.

எம். ஜி. பி. ஷார்க் லிவர் ஆயில்

உங்களுக்கு காட் லிவர் ஆயில் பழக்கமாயிருந்தால், உங்களால் அடாமினை வாங்க வசதியில்லாவிட்டாலும் எம்.ஜி.பி. ஷார்க் லிவர் ஆயில் வைடமின் A, D இரண்டின் முழு சக்தியையும், நீங்கள் கேட்போன்றும் கொழுப்புச் சத்துள்ள நல்ல எண்ணெய்களையும் கொடுக்கிறது. விலை நடுத்தரமானவர்களுக்கு ஏற்றது.

தயாரிப்பாளர்கள்—


கவர்மெண்ட் ஆயில் பாக்டரி, [illegible]

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் & காமர்ஸ்.

கவர்மெண்ட் ஆப் [illegible]


தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்

பாரீ & கோ., லிட்., சென்னை.


நாவிதனால் க்ஷவரம் செய்யப் படுவது அதிகச் செலவும்— அதிருப்தியுமே
வாரத்திற்கு 6 அணுக்கள் நாவிதனுக்குக் கொடுத்து மூன்றே க்ஷவரங்களைப்பெறும் மனிதர்கள் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். மற்ற நாட்களில் சொரசொரப்பான முகத்துடனிருப்பதன்றியும் நன்கு கழுவப்படாத கத்திகளினால் ஏற்படும் ரணங்கள் முதலியவற்றைச் சுலபமாக அடையவும் ஏற்படலாம்.
நான் சொந்தமாகவே க்ஷவரம் செய்துகொண்டு பணமும் சிக்கனம் செய்கிறேன்
இந்த 7 ஓ'க்ளாக் பிளேடுகளின் விலையான ஏழு அணுக்களுக்கு தினந்தோறும் காலையில் சுத்தமான க்ஷவரத்தைப்பெறுவீர்கள். நாளும் நன்கு ஆவலுடன் நாள் முழுதும் நல்ல க்ஷவரத்தின் உணர்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருப்பீர்கள். ஒரே ஒரு ரூபாய்க்கு ஒரு 7 ஓ'க்ளாக் ரேஸரும் இரண்டு பிளேடுகளும் வாங்கி இன்றே இவ்வசதிகளை அனுபவிக்க ஆரம்பியுங்கள்.
தினமும் 7 ஓ'க்ளாக் ரேஸர் பிளேடுகளாலேயே க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்
7 o'clock
RAZOR & BLADES
இரண்டு பிளேடு களுடன் ரேஸர்
விலை ரூ. 1
7 O-CLOCK SLOTTED BLADE DOUBLE EDGED
SLOTTED BLADE
7 ஓ'க்ளாக் ரேஸர் பிளேடுகளினால், சீக்கிரமாகவும் சிக்கனமாகவும் க்ஷவரம் செய்துகொள்ளும் முறையை இன்றே ஆரம்பியுங்கள். அதிகம் கூர்மையுள்ள ஒவ்வொரு 7 ஓ'க்ளாக் பிளேடும் சுத்தமாக அநேக க்ஷவரங்களை அளிக்கும். 5 பிளேடுகள் கொண்ட பாக்கெட் ஒன்றுக்கு விலை அணா 7.

உங்கள் சருமம் ஒவ்வொரு தினமும் அதிக அழகைப் பெறுகிறது





ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும் புது அழகும் தருகிறது


தினமும் குறைந்தபக்ஷம் இரண்டு தடவையாவது ரெக்ஸோனா சோப் உபயோகியுங்கள். கேடில் அடங்கியுள்ள அதன்நுரையை மெதுவாக சருமத்தில்தடவி பிறகு கழுவுங்கள். ரெக்ஸோனாவிலுள்ள கேடில் உங்கள் சருமத்தை சுத்தமாகவும் மழமழப்பாகவும் புத்துணர்ச்சியுடையதாகவும் செய்யும். மேலும் புதிய ஆரோக்கியத்தையும் புதிய சௌந்தரியத்தையும் அளிக்கும். கேடில் உங்கள் சருமத்தின் சுத்தத்தையும் மலர்ச்சியையும் மேம்படுத்துவதோடல்லாமல், சூட்டிலும், குளிரிலும், காற்றிலும், புழுதியிலும் சருமத்தை மாசற்றதாகவும் சௌந்தரியமுடையதாகவும் இருக்கச்செய்கிறது.



ரெக்ஸோனா


கேடில் கலந்த சோப் இது ஒன்றே!

RP. 46A-172 TM


ஷெல் தால்பா ஆயில்ஸ்
ஆயில் இன்சின்களுக்கு
தகுந்த
லூப்ரிகேஷன்
பர்மா
ஷெல்
BSY 264A TAM.

உங்கள் வதனத்திற்கு இவ்விருவகை

சௌந்தர்ய தினசரியை தேவை!



உங்கள் வதனம் அன்றலர்ச்ச மலரென மிளிர,
இரண்டு க்ரீம்கள் உங்களுக்கு அவசியம்—ஒன்று சுத்தம்
செய்வதற்கு, மற்றது பாதுகாப்பிற்கு. இரவு, அரிய
தைலங்கள் சேர்த்தியாக கலக்கப் பெற்ற பாண்ட்ஸ் கோல்ட்
க்ரீம், முகத்தை ஸ்வச்சமாக்க—பகலில், குளுமையான மெல்லிய
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம், மேனியைக் கருக்கும் சூரிய
கிரணங்களினின்று முகத்தைக் காப்பாற்ற.



இதோ உங்கள் சௌந்தர்ய தினசரியை

பிரதி இரவும், பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தை சுத்தம் செய்யுங்கள். அதை முகமீது நிறைய தடவி, அதிலுள்ள செழுமையான தைலங்கள் மயிர்க்கண்களினுள் இறங்கி மலினத்தையெல்லாம் வெளியேற்றும்படி மெதுவாகத் தேய்க்கவும். துடைத்தபின்பு, உங்கள் முகத்தின் நிர்மல காந்தியை கண்ணாடியில் பாருங்கள்!

தினம் காலையில், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் லேசாகத் தடவுங்கள். இம் மெல்லிய க்ரீம் உடனே மறைந்து ஓர் அதிருஸ்ய படலமாகி, பகல் முழுதும் சூரிய கிரணங்களினின்று முகத்தைப் பாதுகாத்து உங்கள் சௌந்தரியம் குன்றாமலிருக்கச் செய்கிறது.

பாண்ட்ஸ்

வியாபார விவரங்களுக்கு:
L. D. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிட்.
பம்பாய் : கல்கத்தா : டில்லி : சென்னை : நோவா : கோவா

தர்கள் பாமரர்கள் எல்லோரும் வெகு முக்கிய பங்கெடுத்துப் பணியாற்றினர்.

எந்த ஒரு காரியம் எடுத்துக் கொண்டாலும் திருவாங்கூர் முதன்மையாக விளங்குவது வழக்கமாகி விட்டது. நம் இந்தியாவிலேயே படித்தவர்கள் பெரும்பான்மையோர் உள்ள பாகம் திருவாங்கூர்தான். அங்குதான் பெண் கல்வியும் அதிகம். 'தீண்டாதாரைப் பார்ப்பதும் பாவம்' என்று மிகக் கொடுமைப் படுத்தினதும் அங்குதான். ஆனால் அதற்குப் பரிகாரமாக முதன்முதலில் நம் தென்னாட்டிலேயே திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோயிலை ஹரிஜனங்களுக்காகத் திறந்து விட்டார்கள். அதைப் போலவே இப்பொழுது பிற மதஸ்தர்களைப் பல்லாயிரக் கணக்கில் நம் மதத்தில் சேர மேற்கூறிய மகாநாடு வழி காட்டியுள்ளது.

சுமார் ஓராயிர வருடங்கள் நம் நாடு அடிமைப் பட்டிருந்ததால் அவ்வப்போது நடந்த அரசாங்கத்தினால் சிலர் பலவந்தமாகவும், பட்டம் பதவிக்காகவும், கலியாணத்திற்காகவும் பிற மதம் தழுவினார்கள். ஏதோ ஒரு காலத்தில் அம்மாதிரி மாறி விட்டார்கள். ஆனால் திரும்ப நம் மதத்தில் வரவேண்டுமென்று விரும்பியவர்களை நாம் சேர்த்துக் கொள்ளவில்லை. ஒதுக்கி வைக்கவே பார்த்தோம். கேவலமாகவும் பேசினோம்.

எங்கு தீண்டாமை அதிகமாய் இருந்ததோ அங்குதான் பிற மதங்களுக்கு மாறுவதும் அதிகமாயிருந்தது. ஆகவே திருவாங்கூரில் பிற மதங்களுக்கு மாறியவர்கள் அதிகமாயிருப்பது ஆச்சரியமல்ல. ஆகையால் திருவாங்கூர் ஹிந்துக்கள் இப்பொழுது முன் வந்து, "நாங்கள் புத்தியில்லாமல் உங்களை எல்லாம் தள்ளி வைத்தோம். ஆகையால் எல்லோரும் வாருங்கள்! பழையபடி வாழ்வோம்!" என்று சொல்லிக் கூப்பிடுகிறார்கள். அவ்வளவுதான். மற்ற மதஸ்தர்களிடம் துவேஷம் துளிக் கூடக் கிடையாது. தாய்க்குத் தன் குழந்தைகள் மேல் துவேஷம் உண்டோ? மற்ற மதங்கள் எல்லாம் குழந்தைகள். நம் ஹிந்து மதம் தாயைப் போன்றது.

பிற்காலத்தில் அநேக மூடப் பழக்க வழக்கங்கள் ஜாதிப் பிரிவுகள் வேற்றுமைகள் எல்லாம் உண்டாயின. அப்படி உண்டாவதும் சகஜம்தான். ஆனால் அறிவாளிகள் அவற்றைப் போக்கிப் பரிசுத்தப் படுத்த வேண்டும். அம்முறையில் தீண்டாமை என்னும் மாசை மகாத்மா காந்தி துடைத்தார். மறைந்திருந்த வேத ஜோதியை உலகுக்கு சுவாமி தயானந்த ஸரஸ்வதி எடுத்து விளக்கினார். அவர்தான் ஆரிய சமாஜத்தை ஸ்தாபித்தவர். மகாத்மா காந்தியும் "சுவாமி தயானந்தர் எழுதிய 'சத்யார்த்தப் பிரகாச'த்தைப் படித்த பிறகுதான் நான் உண்மையான ஹிந்துவானேன்" என்று சொல்லியிருக்கிறார். பாரதியாரும், "ஆரிய நாட்டின் அரு மறையின் உண்மை தந்த சீரிய தயானந்தர் திருநாடு" என்று பாடியிருக்கிறார்.

பிற மதத்திலிருந்து ஹிந்து மதத்தில் வர விரும்பியவர்களைத் தைரியமாகச் சேர்த்தவர் சுவாமி தயானந்தர்தான்.

பிற மதங்களிலிருந்து ஹிந்து மதத்துக்கு வர விரும்புகிறவர்களை எந்த விதமான சடங்குகள் செய்து சேர்த்துக் கொள்வது, யார் இந்தக் காரியத்தைச் செய்வது என்ற கேள்வி எழுந்தது. அதை எளிதாக மேற்படி மகாநாட்டு நிர்வாகிகள் தீர்மானித்து விட்டார்கள். சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களால் ஏற்படுத்தப் பட்ட ஆரிய சமாஜிகள்தான் மத மாற்றுதலைச் செய்யத் தகுந்தவர்கள் என்று தீர்மானித்தார்கள். இல்லையானால் மதம் மாறினவர்களை வைஷ்ணவர்கள் என்று சொல்லுவதா, சைவர்கள் என்று சொல்லுவதா என்ற பிரச்னை வந்து விடும். ஆகையால் வேத மதத்தை நம்பும் ஹிந்துக்களாக்கினது ரொம்பப் பொருத்தமானதுதான். சுமார் ஆயிரம் பேர் மார்ச்சு மாதம் 4-ந் தேதி யன்று ஹிந்து சமயத்தில் சேர்ந்தார்கள். ஆரிய சமாஜிகள் அக்னி ஹோத்திரம் வளர்த்து, வேத மந்திரங்களைச் சொல்லி, குடும்பம் குடும்பமாகச் சேர்ந்து தீர்த்தத்தை அவர்கள் மேல் புரோட்சித்து மந்திரங்களை உச்சரிக்கச் செய்து ஸ்திரீகளுக்குக் குங்குமமும், ஆண்களுக்குச் சந்தனமும் வழங்கினார்கள். இச் சடங்கு நடக்க ஐந்து மணி நேரம் ஆயிற்று. அவர்களின் பெயர்களை மாற்றி ஏற்கெனவே ஜாபிதா தயார் செய்து வைத்திருந்தனர். அவர்களுக்கு இனி ஹிந்து மதத்தின் எல்லா உரிமைகளும் வழங்கப் படும். அவர்கள் எல்லோரையும் ஒரு மாபெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்று விருந்து அளித்தார்கள். அவர்கள் ஆனந்தம் கரை காணாததாய் இருந்தது. இம்மாதிரி இம் மகாநாடு நமது நாட்டிற்கு வழி காட்டியுள்ளது.

அடுத்த ஏப்ரல் மாதத்தில் கொல்லத்திலும் இம்மாதிரி பெருவாரியாக நடக்கப் போகிறது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வது முடிகிறதா? அப்படி யெல்லாம் அழைத்தால் சினிமாப் பாணியாக இருக்கிறது!

"என்னை ஆட் கொண்ட தயாளரே!" என்றோ 'என் அன்பிற்குரிய தயாளரே' என்றோ உங்கள் பெயரைச் சொல்லி எழுதவும் முடியவில்லை. நம் வழக்கப்படி கணவர் பெயரைப் பெண்கள் சொல்லக் கூடாதல்லவா?

எனினும் இந்தத் தர்ம சங்கடமான நிலையிலிருந்து விடுபட நீங்கள் என்னை அழைத்தமாதிரியே 'அன்பே' என்று நானும் உங்களை அழைத்துவிட்டேன். இதில் தவறில்லை யல்லவா?

இப்படி ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் அளிக்கும் தொல்லை சொல்லி முடியாது. எனினும் நான்தான் உங்களுக்குத் தொல்லை தருவதாகக் குற்றம் சாட்டுகிறீர்கள்.

அன்றைக்கு வீட்டுக்கு யாரோ விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அம்மா என்னைக் காப்பி சேர்த்துக் கொண்டு வரச் சொன்னுள். கொண்டுபோய்க் கொடுத்தேன். ஒரு வாய் சாப்பிட்டார்களோ இல்லையோ, அவர்கள் முகம் கசந்து வழிந்ததைப் பார்க்க வேண்டுமே! ஆமாம், நான் அதில் சர்க்கரை போட மறந்து விட்டால் அவர்கள் முகம் கசந்து வழியாமல் என்ன செய்யும்? அப்புறம் சர்க்கரை கொண்டு போய்ப் போட்டேன். "கனகத்துக்கு இங்கே நினைவே யில்லை. இங்கே நினைவிருந்தால்தானே காப்பி சரியாகப் போட வரும்?" என்றார். 'போங்க' என்று பொய்க்கோபம் காண்பித்து விட்டு உள்ளே வந்து விட்டேன். ஆனல் அவர் சொன்னது அவ்வளவும் உண்மை. அன்றைக்குக் காப்பி கலந்து கொண்டிருந்த போது எனக்கு உங்கள் நினைவுதான். நாம் எப்போது அவருக்கு நம் கையால் காப்பி கலந்து, 'கால் சிலம்பு கொஞ்சவும் கைவளை குலுங்கவும்' கொண்டு போய்க் கொடுக்கப் போகிறோம். அந்தப் பாக்கியம் எப்போது நேரப்போகிறதோ, தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டே கலந்தேன். சர்க்கரை போட மறந்து விட்டேன்!

இப்படி ஒன்றிரண்டு சம்பவங்களா? பாயசத்தில் உப்பைப் போட்டதும் சாம்பாரில் சர்க்கரை போட்டதும் எழுதித் தொலையாது; நேரில்தான் சொல்ல வேண்டும். நேரில் பார்க்கும் பாக்கியத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

தங்கள் அடியாள்,
கனகம்.

★

அவர்கள் இருவரும் கோரிய பாக்கியம் நேர்ந்தது. தயாளன் மாமனர் வீட்டுக்குப் போயிருந்தான். இருவரும் தனிமையில் சந்தித்தனர். எத்தனை நாழிகை ஆயிற்று என்பது அவர்களுக்கே தெரியவில்லை. ஏதோ சத்தம் கேட்டது. இருவருடைய சிந்தனையும் கலைந்தது.

"நேரில் பார்க்கும்போது எவ்வளவோ பேசப்போகிறேன் என்றீர்கள். வாய்மூடி மௌனியாய் உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்றுள் கனகம்.

"வாய்மூடி மௌனியாய் இல்லை. நீ என்னவெல்லாமோ சொல்லப் போகிறேன் என்று எழுதியிருந்தாயே. அந்தக் கடிதங்களை யெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தேன் இத்தனை நாழியும். சொல்லவேண்டிய பாக்கி விஷயங்களையும் சொல்லேன்" என்றான் தயாளன்.

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஊருக்குப் போங்கள் எழுதுகிறேன்" என்றுள் கனகம்.

"நானும் அதைத்தான் கண்டு பிடித்தேன். பேசுவதைவிட எழுதுவது சுலபமாக இப்போது தோன்றுகிறது."

எப்படி இந்த மனமொத்த தம்பதிகள்?

வரவேற்பு விழா

வி. என். குமாரஸ்வாமி

நான் மார்ச்சு மாதம் 3ட யிலிருந்து 7ட வரை நான் உலகத்தையே மறந்திருந்தேன் என்று சொன்னுல் மிகையாகாது. விடிந்ததும் வேத கோஷங்களும், யாகங்களும், பஜனைகளும், சொற் பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரிகளும் ஒன்றுமாறி ஒன்ருக நடந்து கொண்டிருந்தன.

இத்தனை வைபவங்களும் திருவாங்கூரில் நாகர்கோயில் சமீபத்தில் இருக்கும் மண்டைக் காட்டம்மன் கோவில் உற்சவத்தின் போது நடந்த ஹிந்து மத மகா நாட்டில் தான் நிகழ்ந்தன. இந்த மகாநாடு அப் பக்கங்களில் வெகு முக்கியமாகக் கருதப்படுகிறது. இதைத் தேவஸ்தான அதிகாரிகளும் ஹைந்தவ சேவக சங்கம் என்னும் சங்கத்தார்களும் சேர்ந்து நடத்தினுர்கள். இதில் அதிகாரிகள், நீதிபதிகள், வக்கீல்கள், எம். எல். ஏ.க்கள் சந்நியாசிகள், ஆசிரியர்கள், பண்டி

பாக்கியம் நேர்ந்தது!

எஸ். வி. எஸ்.

கண்ணே!—சே, சே!—இது நன்றாக இல்லை!—கரும்பே!—சே, இதுவும் பழங் காலத்துக் கர்நாடக பாணியாகத் தொனிக்கிறது. மை டார்லிங்! மை ஸ்வீட் ஹார்ட்!—சே, சே, எதுவுமே பிடிக்க வில்லையே! பின்னர் எப்படித் தான் உன்னை அழைப்பது? ஒன்றும் புரியவில்லையே!—என் ஆருயிரே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மோகன உருவே!—சீ, சீ இப்படியெல்லாம் எழுதினால் சுத்தப் பைத்தியக்காரத் தனமாக இருக்கும். இப்படியெல்லாமா ஒருவன் அக்னி சாட்சியாக மணந்த மனைவிக்குக் கடிதம் எழுதுவான்? ஏன், எழுதினாலும் எழுதலாம். ஆனால் நான் அப்படி எழுதப் போவதில்லை. எனக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. எனினும் 'அன்பே!' என்பது நன்றாக இருப்பது போல் தோன்றுகிறது. 'அன்பே' என்று அழைத்துத்தான் கடிதம் எழுதப்போகிறேன்.

அன்பே!

உன்னைக் கைத்தலம் பற்றிய நான் முதல் எனக்கு என் நினைவில்லை. நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே புரியவில்லை. வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். யாரானும் திடீர் என்று 'நீ இன்று காலை சாப்பிட்டாயோ?' என்று கேட்டால் எனக்குச் சந்தேகம் வந்து விடும். சாப்பிடும்போது சாப்பாட்டில் நினைவு கொண்டால்தானே? எப்போதும் உன் நினைவாக இருக்கும்போது சாப்பாட்டில் எப்படி நினைவு செல்லும்?

"என்னப்பா, ஒரு மாதிரி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று நேற்று காலை என் நண்பன் கேட்டான்.

"நானும் கனகமும் இப்போதுதான் குற்றாலம் எல்லாம் போய்விட்டு வந்தோம். அந்த அலுப்புத்தான். வேறு ஒன்றுமில்லை" என்றேன்.

"நன்றாகச் சொன்னாய்? நேற்று ராத்திரி எட்டு மணி வரை 'கிளப்'பில் உட்கார்ந்து சீட்டு ஆடி விட்டு, இன்றைக்குப் பொழுது விடிவதற்குள் நீயும் உன் கனகமும் குற்றாலம் போய் வந்து விட்டீர்களாக்கும். ஏய், என்ன உளறுகிறாய்? ராத்திரி கனவினை கண்டாயா? இன்னும் தூக்கம் தெளியவில்லை போல் இருக்கிறது. முதலில் இரண்டு 'ஆட்டாம் பாம்' வைக்கட்டுமா? உன் குழப்பம், தூக்கக் கலக்கம் எல்லாம் பரிபூரணமாய்த் தெளிந்துவிடும்" என்றான்.

அப்போதுதான் எனக்கு உண்மை புலப்பட்டது! இந்தப் பைத்தியக்காரத் தனத்துக்கு உன்னையன்றி வேறு யாரைக் குற்றம் சாட்டுவது?

கனகம், இதைப் போல எத்தனை எத்தனை பைத்தியக்காரத்தனங்கள்! இப்படி என்னை ஒரே பைத்தியமாக அடித்து விட்டது நியாயமா? உன்னை நேரில் பார்க்க வேண்டும். கதை கதையாகச் சொல்ல வேண்டும். மணிக் கணக்கில் சொல்ல வேண்டும். அவற்றையெல்லாம் இந்தக் கால் கடுதாசியில் எழுதித் தீருமா?

நாம் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கும் பாக்கியம் நேரும் காலம் எப்போதோ? அதை மிகமிக ஆவலுடன் எதிர்பார்க்கும்,

உன் அன்பிற்குரிய,
தயாளன்


★

அன்பே!

என்று என்னை அழைப்பதற்கு நீங்கள் எவ்வளவோ யோசித்தீர்கள். ஆனால் நான் உங்களை எப்படி அழைப்பது? ஆம், வயதில் பெரியவரான உங்களை எப்படி அழைப்பது?

அம்மா, அப்பாவை எப்படிக் கூப்பிடுகிறாள் என்று யோசித்துப் பார்த்தேன். அம்மா அப்பாவைக் கூப்பிட்டதாகவே நினைவில்லை. அம்மா அப்பாவோடு பேச வேண்டும் என்று நினைத்தால் அப்பா எப்படியோ அம்மாவின் எதிரில் வந்து நிற்பார். அதனால் அம்மா எனக்கு உதவ முடியவில்லை.

'ஆருயிர்க் காதலரே!' என்றோ 'என் பிராண நாதா!' என்றோ அழைக்கவா



தோம். அப்படியே திகைத்து நின்று விட்டோம். உள்ளே நந்தினி சவமாகக் கிடந்தான். ஒரு கறுப்புத் துணி அவன் உடலை மூடியிருந்தது. மோகனை அங்கு காணவில்லை.

'இவனையும் மோகன்தான் கொன்று விட்டான் போலிருக்கிறது' என்று என் காதோடு கூறினாள் சின்னு. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'அப்படியு மிருக்கலாமோ' என்று எண்ணினேன். வெளியில் உள்ளவர்கள், 'நந்தினி திடீரென்று மாரடைப்பினால் இறந்து விட்டான்' என்று பேசிக்கொண்டது எங்கள் காதில் விழுந்தது. மோகனைத் தேடினோம். ஒரு அறையில் தலையைக் கவிழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் வெளுத்திருந்தது. மெதுவாக நான் கூப்பிட்டேன். அவன் தலை நிமிரவே யில்லை. அப்பொழுது அறையில் ஒருவன் நுழையவே தலை நிமிர்ந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. ஆப்த நண்பனையும், ஆசை மனைவியையும் ஒரே சமயத்தில் பிரிந்த வருத்தம் போலும்.

"நந்தினிக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்தான். பிறகு எல்லோரும் போய் விட்டார்கள். அவன் மாத்திரம் வீட்டிலிருந்தான். நாங்கள் வெகு உன்னிப்பாக அவனைக் கவனித்து வந்தோம். பையிலிருந்து ஒரு நீலக் கடிதத்தை எடுத்தான்.

'அந்தக் கடிதம் தான் சேகர் நந்தினிக்குக் கொடுத்தது' என்று என்னிடம் கூறினாள் சின்னு.

'அதை ஒரு முறை வாசித்தான். மடித்தான். மீண்டும் ஒருமுறை பிரித்து வாய் விட்டுப் படித்தான். அவன் வாசித்தது இதுதான்:

'அன்புள்ள நந்தினி,

நான் இவ்வுலகத்தில் விரும்பிய ஆத்மாக்கள் இரண்டு. ஒன்று மோகன், அடுத்தது நீ. நீ வருமுன் மோகன் எனக்கு உயிருக்கு உயிராக இருந்தான். அந்தப் பிணைப்பை உன் வரவு அறுத்துவிட்டது. உனக்காக ஏங்கித் தவித்தேன். கடைசியில் என் ஏக்கத்திற்கு மாற்று இல்லாமல் போய் விட்டது. அன்று உன்னைப் பார்க்கில் சந்தித்தேன். அதை மறந்து என்னை மன்னித்திருப்பாய் என்றே நம்புகிறேன். என் மனம் ஒரு நிலையில்லை. வேதனையில் வாடுகிறேன். எப்பொழுதும் உன் நினைவுதான். எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும் முடியவில்லை. நான் இன்னுமிருந்தால் விபரீதம்தான்.

உன் நினைவு வரும்போதெல்லாம் மனம் கட்டுமீறித் துடிக்கிறது. உனக்கும், மோகனுக்கும் துரோகம் செய்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு முடிவிற்கு வந்தேன். உன்னை மறக்க நல்ல மருந்து தற்கொலைதான்.

நான் போகிறேன். உங்கள் தாம்பத்திய வாழ்க்கை சந்தோஷமாக நடக்கட்டும். அதற்கு இடைஞ்சல் வாராமலிருப்பதற்காக இந்த உலகத்தை விட்டே போகிறேன். என்றாவது உனக்கு என்னைப் பற்றிய ஞாபகம் வந்தால் எனக்காகப் பச்சாத்தாபப் பட்டாலே போதுமானது.

இப்படிக்கு,

சேகர்.'

"மோகன் இதைப் படித்துவிட்டு நிமிர்ந்தான். 'வீண் சந்தேகத்தில் இரண்டு கொலை' என்று அவன் வாய் முணுமுணுத்தது. மனதில் புழுங்கிய எண்ணமெல்லாம் பெருமூச்சாக வெளியே வந்தது. அவன் மனதில் உண்டான கொந்தளிப்பு அவன் முகத்தில் தெரிந்தது. அவனும் தற்கொலை செய்து கொண்டு விடுவானோ என்று பயந்தோம். அன்று சாயங்காலம் வரை அந்த அறையிலேயே உட்கார்ந்திருந்தான். உலகத்தைப் பற்றிய எண்ணமே அவனிடமில்லை. பிறகு அந்தி மயங்கும் நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறினான். பிறகு அவன் தன் வீட்டுக்கே திரும்பவில்லை. எங்கே போனான், என்ன செய்கிறான் என்ற விஷயம் ஒன்றும் தெரியவில்லை. ஒருவேளை சேகரைக் கொன்றதற்காகச் சிறைவாசம் கிடைத்திருக்கலாம். அப்படியிருந்தால் ஒருவேளை அவன் மனம் சாந்தியடையலாம்."

கதையைக் கூறி முடித்துவிட்டு, ஆண் குயில் பெண் குயிலைப் பார்த்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

★

நான் திடுக்கிட்டு விழித்தேன். குயில் கதை சொன்னது சொப்பனத்தில் என்று உணர்ந்தேன். ஆம், பெஞ்சியில் சாய்ந்தபடியே தூங்கி விட்டேன். பக்கத்திலிருந்த மரத்தைப் பார்த்தேன். அந்த இரண்டு குயில்களும் அங்கேயேதான் உட்கார்ந்திருந்தன. என்னைப் பார்த்துப் பெண் குயில் கத்தியது. பக்ஷணம் கேட்டுக் கத்துகிறது என்று நினைத்தேன். என்னிடம் பக்ஷணம் ஏது? துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு 'பார்க்'கை விட்டு வெளியேறினேன்.

"நான் ஒன்றும் விளங்காமல் சின்னாவைப் பார்த்தேன். இவளும் விளங்காமல் என்னைப் பார்த்தாள்.

"சேகர் வீட்டு வாசலை விட்டுக் கீழே இறங்குவதற்கும் மோகன் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது. சேகரைக் கண்டவுடன் மோகனின் முகம் கறுத்தது. பின் சமாளித்துக் கொண்டு 'சேகர் எங்கே போகிறாய்? வாயேன்!' என்று கூப்பிட்டான்.

'இல்லை எனக்கு வேலையிருக்கிறது. நான் வருகிறேன்' என்று கூறி விட்டு நடக்க ஆரம்பித்தான்.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் 'பார்க்'கில் உன்னைச் சந்திக்கிறேன். ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்' என்றான் மோகன்.

'சரி' என்று கூறிவிட்டு விரைவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் சேகர். மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டு நின்றான் மோகன். பின் வீட்டினுள் நுழைந்தான். கடைக் கண்ணால் நந்தினியைக் கவனித்தான். அவள் எப்பொழுதும்போல் சிரித்துக் கொண்டே அவனை நெருங்கினாள்.

'சேகர் எங்கே வந்தான்?' என்றான்.

'எங்கே யென்றால்? எப்பொழுதும் போல் வந்தார்' என்றாள்.

'இல்லை, நான் இல்லாத சமயத்தில் வரமாட்டாரே அதுதான் கேட்டேன்' என்று கூறிவிட்டு அவளை ஒருகணம் கூர்ந்து கவனித்தான்.

★

"நாங்கள் பிறகு எங்கள் இடத்திற்கு வந்துவிட்டோம். சிறிது நேரத்தில் மோகனும் சேகரும் வந்தார்கள். அப்பொழுது சின்னா, 'பழைய நண்பர்கள் ஒன்றுகூடி விட்டார்கள். அவர்கள் இருவரும் சந்தோஷத்துடன் சேர்ந்து வருவது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது பார்த்தீர்களா?' என்றாள்.

'என்ன இருந்தாலும் மோகன் மனதை விட்டுச் சந்தேகம் விலகவில்லையே!' என்றேன் வருத்தத்துடன்.

"எல்லாவற்றையும் காலம் மறைய வைத்துவிடும்" என்றாள் சின்னா.

"அந்த நண்பர்கள் வழக்கமான இடத்தில் உட்கார்ந்தார்கள். எதையெல்லாமோ பற்றிப் பேசினார்கள். கடந்தவைகளையெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

'நாம் இரண்டுபேரும் இந்த இடத்தில் பக்ஷணம் சாப்பிட்டு எவ்வளவோ நாட்களாகிவிட்டது' என்று கூறிக்கொண்டு பையிலிருந்து பக்ஷணப் பொட்டலத்தை எடுத்தான் மோகன்.

"சின்னாவிற்கு ஆனந்தம் தாங்கவில்லை. 'நமக்கும் பங்கு கிடைக்கும்' என்று கூறிக்கொண்டு என்னிடம் கொஞ்ச ஆரம்பித்துவிட்டாள்.

"பக்ஷணத்தை மோகன் கையிலிருந்து வாங்கிய சேகர், மேலே நிமிர்ந்து நாங்கள் இருக்கிறோமா என்று பார்த்தான். எங்களைக் கண்டவுடன் சிரித்துக் கொண்டே எங்களுக்காகக் கொஞ்சம் பக்ஷணத்தை வீசினான். நான் போவதற்குள் சின்னா ஓடிப் பக்ஷணம் விழுந்திருந்த இடத்தை அடைந்துவிட்டாள். ஆனால் பக்ஷணத்தைத் தொடவில்லை. பக்ஷணத்தைத் திரும்பத் திரும்ப முகர்ந்து பார்த்தாள். என்னிடம் ஓடிவந்தாள்.

'ஐயோ, பாவி விஷத்தைக் கலந்திருக்கிறானே! என்று அலறினாள். என் உடல் நடுங்கியது.

'ஐயோ, சேகர் சாப்பிடுகிறானே!' என்று அலறினான். மறுவினாடி அவன் பக்கத்தில் போய் 'அதைச் சாப்பிடாதே, விஷம்!' என்று கத்தினான்.

ஆனால் சேகர் 'ஏன் கத்துகிறாய்? பக்ஷணம் காணாதா?' என்று கூறிக்கொண்டு இன்னும் கொஞ்சம் பக்ஷணத்தைப் போட்டான்.

"சின்னா கதறினாள். நான் திகைப்பில் ஏதும் செய்ய ஓடாமல் இருந்த இடத்திலேயே இருந்துவிட்டேன். எங்கள் கண்ணீருக்கும் விம்மலுக்கும் இடையே சேகர் பிணமாகச் சாய்ந்துவிட்டான். கீழே கிடந்த நண்பனை ஒரு முறை கூர்ந்து கவனித்தான் மோகன். ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டான். அடுத்த கணம் அந்த இடத்தைவிட்டு வேகமாக வெளியேறினான். அவன் போகும் திக்கையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தோம் நாங்கள்.

"எங்களுக்குப் பிடித்தமான இருவரில் ஒருவன் போய்விட்டான். எங்கள் கண் முன்னாலேயே அநியாயமாக இறந்தான்.

"மறுநாள் விடிந்தது. சேகர் மரத்தடியிலேயே கிடந்தான். முகத்தில் சாந்தி நிரம்பியிருந்தது. நண்பன் தன்னை நாசமாக்கி விட்டானே என்ற வருத்தம்கூட அவன் முகத்தில் இல்லை.

"சின்னா, மோகனைப் பார்க்க வேண்டுமென்று துடித்தாள். இருவரும் அவன் வீட்டுக்குச் சென்றோம். அவன் வீட்டில் கூட்டமாக இருந்தது. எல்லோர் முகத்திலும் சோகம் நிறைந்திருந்தது. மெதுவாக ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்

வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் மோகன் வரவில்லை. அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக சேகர் அங்கே வந்தான். சேகரை வரவேற்றாள். சேகர் அப்பொழுதும் தன் ஆசையை வெளியிட்டான். ஆனால் நந்தினி, 'சேகர் என்னை இனியும் நினைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. நான் ஒருவருக்குச் சொந்தமாகி விட்டேன்; என்னைத் தயவு செய்து மறந்து விடுங்கள்' என்றாள்.

"சேகர் வெறிக்க அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அவளை அணு அணுவாக ஆராய்ந்து கொண்டிருந்தன. மெதுவாக அவளை நெருங்கி உட்கார்ந்து, அவள் கரத்தைப் பற்றினான். ஒரு கணம் அவன் பிடியில், அவள் கரம் அழுந்தியது. திடுக்கிட்டு எழுந்தாள்.

'சேகர், என்ன இது? நீங்கள் இவ்விதம் நடப்பீர்களெனத் தெரிந்திருந்தால், உங்களிடம் பேசியே இருக்க மாட்டேன். உங்கள் நண்பருக்கு இப்படியா துரோகம் செய்வது?' என்றாள் பதட்டத்துடன். அவள் உடல் கோபத்தால் நடுங்கியது.

'சேகர் தன் குற்றத்தை உணர்ந்து அவளிடம் மன்னிப்புக் கோரினான். இனி, தான் அவள் பயப்படும் வகையில் நடந்து கொள்வதில்லையென்றும், அந்தச் சம்பவத்தை மறந்து விடும்படியும், அந்த விஷயத்திற்காகத் தன்னிடம் பேசாமல் இருந்துவிடக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டான். பின் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டான். நந்தினி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அப்பொழுது மோகன் அங்கு வந்தான். 'சேகர் இங்கே எங்கே வந்தான்?' என்றான்.

'சும்மாதான் வந்தார்' என்று கூறி நடந்த விஷயங்களை மறைத்து விட்டாள். மோகன் ஒன்றும் பேசவில்லை. இருவரும் இந்த இடத்தை விட்டுச் சென்றார்கள்.

சின்னு என் காதில், 'நந்தினிமேல், மோகன் சந்தேகப்படுகிறான்' என்றாள்.

நான் திகைத்துவிட்டேன். 'ஏன் சந்தேகம்?' என்றேன், ஒன்றும் விளங்காமல்.

'சேகர் வந்துவிட்டுப் போனான் அல்லவா, அதுதான் சந்தேகம்' என்றாள்.

'மனைவியிடமே சந்தேகமா? சே! என்ன மனிதர்கள்!' என்று சலித்துக் கொண்டேன்.

'என்ன இருந்தாலும் சேகர் அவளைத் தீண்டியிருக்கக்கூடாது' என்றாள் சின்னு. நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நாங்கள் இருவரும் மோகன் வீட்டிற்குச் சென்றோம். மோகன் நந்தினியிடம் எப்படிப் பழகுகிறான் என்று அறியத்தான் சென்றோம். ஆனால் எங்களால் நிச்சயமாக மோகனின் மனநிலையை முதலில் அறிய முடியவில்லை.

"அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அந்த மூவரில் யாருமே இந்த இடத்திற்கு வெகு நாட்களாக வரவில்லை. ஆகவே நானும் சின்னுவும் மோகன் வீட்டிற்கே சென்று கவனிக்க ஆரம்பித்தோம்.

"மோகன் வீட்டுக்குச் சேகர் அடிக்கடி வர ஆரம்பித்தான். அவளைப் பார்த்தாவது மனம் சாந்தியடையலாம் என்ற நம்பிக்கையில்தான் அங்கு வந்து கொண்டிருந்தான். மோகனும் அவனை வரவேற்றான். ஆனால் மோகனின் பார்வையில் சந்தேகம் நிறைந்திருந்ததைக் கவனித்தேன். நந்தினி எல்லோருடனும் சகஜமாகப் பழகினாள். பேசியாவது, சேகரின் சிதைந்த உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கலாம் என்ற எண்ணத்தில்தான் மலர்ந்த முகத்துடன் பழகினாள். அவள் சேகரிடம் பேசும்போதெல்லாம் மோகனின் கண்கள் பொறாமையைக் கக்கும்.

"சேகர் அங்கு அடிக்கடி போக ஆரம்பித்ததிலிருந்து மோகனின் அமைதி குலைந்தது. வேதனையை வலிய இழுத்துக் கொண்டான். வீண் சந்தேகம் அவனை வாட்டியது. நடக்காத விஷயத்தை நடந்ததாகக் கற்பனை செய்தான். அமைதியின்றித் தவித்தான்.

'இந்த மனிதர்களே இப்படித்தான் போலிருக்கிறது. எதற்கும் சந்தேகப்படுவது, காரணமற்ற விஷயங்களுக்கு வேதனைப்படுவது. இதுவே மனிதனின் தொழில் போலிருக்கிறது!' என்றாள் சின்னு.

'சேகர் நிம்மதியடையும் போது, மோகன் அதை இழந்து தவிக்கிறானே, பாவம்!' என்று மோகனுக்காக நான் ரொம்பவும் பச்சாத்தாபப் பட்டேன்.

"மோகன் தன் மீது சந்தேகப் படுகிறான் என்பதை அறியாது, நந்தினி, சேகரிடம் சகஜமாகப் பழகினாள். மோகனின் வேதனையை, அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. தெரிந்திருந்தால் சேகரின் வருகையைத் தடுத்திருப்பாள்.

"அன்று நாங்கள் மோகன் வீட்டு ஜன்னலில் போய் உட்கார்ந்தோம். அப்பொழுது சாயங்காலம் மணி நான்கு இருக்கும். வீட்டினுள்ளே சேகரும் நந்தினியும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சேகர் தன் பையிலிருந்து ஒரு நீல நிறக் கடிதத்தை நந்தினியிடம் நீட்டினான். நந்தினி அதை வாங்கியவுடன் ஒன்றும் சொல்லாமல் அவன் வெளியேறி விட்டான்.

தானே அறிய முடியும். செல்லமாகச் சின்னுவின் தலையைக் கொத்தினேன்.

"சேகரைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. இரு நண்பர்களில் ஒருவன் ஆனந்தத்திலும், மற்றவன் அவதியிலும் மூழ்கினார்கள். இந்நிலையில் சேகருக்காக நாங்கள் பச்சாத்தாபப் படுவதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

"தன் ஆசை நிறைவேறாது என்பதை சேகர் உணர்ந்து கொண்டான். பாவம்! அவன் உதட்டில் சதா தோன்றிக்கொண்டிருக்கும் புன்னகை எங்கோ ஒளிந்தது. அவன் கண்களின் ஏக்கம், உதட்டில் விம்மலின் துடிப்பு எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. அவன் நிலையைக் கண்ட சின்னுவின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. பச்சாத்தாபத்துடன் அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். மற்ற நாளாக இருந்தால் சின்னுவிற்குப் பக்ஷணம் கிடைத்து விடும். ஆனால், அன்று சின்னுவை ஒருமுறை பார்த்தான். பின் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். என்னிடம் ஓடிவந்தாள் சின்னு.



'அவனைப் பார்க்கவே மனம் தாங்கவில்லை. பாவம்!' என்று கூறிக் கண்ணீர் வடித்தாள் சின்னு.

ஆனந்தமாக வாழ்ந்த நண்பர்களில் ஒருவனை வேதனையில் ஆழ்த்திய அந்த நந்தினியைச் சின்னு ஏச ஆரம்பித்து விட்டாள்.

* * *

"ஒருநாள் நந்தினி மாத்திரம் இங்கு வந்தாள். பிறகு சிறிது நேரம் கழித்து சேகர் வந்தான். நந்தினி அவனை எப்போதும்போல் வரவேற்றாள். அன்று மோகன் ஏனோ வரவில்லை.

"மெதுவாக சேகர், தன் மனதை அவளுக்குத் திறந்து காட்டினான். ஆனால், அவள் மனம் அவனுக்குத் திறக்க மறுத்து விட்டது! அவள் உள்ளம் ஏற்கனவே மோகனுக்குத் திறந்து கொடுத்து, அவனை உள்ளே இருத்திச் சாத்திக் கொண்டு விட்டது. இனி சேகருக்குத் திறப்பது எங்கே? கடைசியாக நந்தினி சேகரிடம் கூறிய வார்த்தைகள் இதுதான்:—

'சேகர், என்னை மன்னித்து விடுங்கள்; தயவுசெய்து என்னை மறந்து விடுங்கள். நான் இன்னும் இரண்டு தினங்களில் மோகனுக்குச் சொந்தமாகி விடுவேன். உங்கள் வாழ்வு, வேறு யாராலாவது மீண்டும் மலரலாம். மன்னிக்கவும்.'

"அவள் போய் விட்டாள். சிறிது நேரத்தில் அவனும் போய் விட்டான். அதற்குப் பிறகு வெகு நாட்கள் வரை சேகர் இங்கே வரவில்லை. புதுத் தம்பதிகளான மோகனும், நந்தினியும் இங்கு வந்து கொண்டிருந்தார்கள். தினமும் எங்களுக்குப் பக்ஷணத்தைப் போடுவார்கள். ஆனால், அதை நாங்கள் தீண்டுவதே யில்லை. எங்களுக்குப் பிடித்தமான இருவர்களில் ஒருவன் ஏமாற்றத்தால் ஏங்கும்போது, எப்படி ஆனந்தமாகப் பக்ஷணம் சாப்பிட முடியும்?

"சேகரின் நிலைக்காக மோகனும் வருந்தினான். ஆனால் சேகரின் மனவேதனைக்குக் காரணம் மோகனுக்குத் தெரியாது. ஒருநாள் மோகனும் நந்தினியும் இங்கு வந்திருந்தபோது மோகன், 'சேகர் ஏனோ மிகவும் மனம் உடைந்து போயிருக்கிறான். சரியாகக்கூடப் பேச மறுக்கிறான். அவன் மனோ நிலைக்குக் காரணம் கேட்டால் சொல்ல மறுக்கிறான். அவன் போக்கே விசித்திரமாகத் தானிருக்கிறது' என்று சொன்னான். நந்தினி ஒரு பதிலும் சொல்லவில்லை. அவளுக்குத் தெரியும் விஷயம். ஆனால் அதைத் தெரிவிக்கவில்லை.

"பிறகு ஒருநாள் நந்தினி, தனியே இந்த இடத்திற்கு வந்தாள். மோகன்

போய் உட்கார்ந்தார்கள். நானும் சின்னுவைக் கூட்டிக்கொண்டு அந்த இடத்திற்குப் போனேன். மோகன் எங்களைப் பார்த்துவிட்டு 'இந்தக் குயில்கள் நாமிருக்கும் இடத்தேடியே வந்து விட்டனவே!' என்ற உற்சாகத்துடன் கூறிக்கொண்டு வழக்கம்போல் பக்ஷணத்தை எங்களுக்கு முன்னால் வீசினான். சின்னுவிற்கு உச்சி குளிர்ந்து விட்டது; அந்த நண்பர்களை மனதார வாழ்த்தினாள். அவர்கள் நட்பு என்றும் நிலைத்திருக்குமாறு ஆசீர்வதித்தாள். இவள் ஆசீர்வதித்த வேளை அந்த நண்பர்களுக்குச் சனி திசை ஆரம்பித்து விட்டது."

திடீரென்று ஆண் குயில் கதை சொல்லுவதை நிறுத்தியது. பழைய சம்பவங்களை எண்ணிக் கொண்டு பிரமை பிடித்ததைப் போல் உட்கார்ந்து விட்டது. இந்த சமயத்தில் பெண் குயில், "என்ன திடீரென்று நிறுத்தி விட்டீர்கள்?" என்று ஆண் குயிலைத் தூண்டியது. சுயவுணர்வு பெற்ற ஆண் குயில் தொடர்ந்தது.

"அந்த நண்பர்கள் இருவரும் அந்தப் பெண்ணைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவன் பார்ப்பது மற்றவனுக்குத் தெரியாது. இப்படி ஒருவனுக்குத் தெரியாமல் ஒருவன் அந்த அழகியைப் பார்த்த வேடிக்கையைச் சின்னு பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அத்துடன் மெதுவாக என்னிடம் வந்து, 'அவர்களுக்காகத் தூது போகலாமா?' என்றாள்.

அந்த நண்பர்களிடத்தில், இவளுக்குத்தான் எவ்வளவு வாஞ்சை!

'அவளை இரண்டு பேருமல்லவா அப்படிப் பார்க்கிறார்கள். யாராவது ஒருவன் மாத்திரம் மனதைப் பறி கொடுத்தால் அவனுக்காகத் தூது போகலாம். இருவருமே அவள் அழகிற்கு அடிமையாகி விட்டார்களே, என்ன செய்வது?' என்றேன்.

சின்னு உடனே 'நீங்கள் ஒருவனுக்காகத் தூது போங்கள், நான் இன்னொருவனுக்காகப் போகிறேன். யாருக்கு வெற்றியென்று பார்க்கலாம்' என்றாள்.

"மறுநாளும் அந்த மூவர்கள் வந்தார்கள். ஆனால் ஒரு ஆச்சரியம்! எங்கள் உதவியில்லாமலேயே எங்கள் தூது இல்லாமலே, அந்த நண்பர்கள் அந்தப் பெண்ணிடம் பேசினார்கள். அவர்கள் பேசினதிலிருந்து, அந்தப் பெண்ணும், அந்த நண்பர்கள் படிக்கும் கலாசாலையில்தான் படித்தாள் என்றும், அவள் பெயர் நந்தினி என்றும், அன்று காலையில்தான் அந்த நண்பர்கள் அவளைக் கலாசாலையில் கண்டு பேசினார்கள் என்றும், அந்தப் பழக்கத்தில் தான் இந்தப் 'பார்க்'கில் சந்தித்துப் பேச ஆரம்பித்தார்கள் என்றும் அறிந்து கொண்டேன்.

"தினமும் அம்மூவர்களும் வரத் தொடங்கினார்கள். நண்பர்கள் இருவரும் அவள் அழகிலே சொக்கிக் கிடந்தார்கள். ஆனால் உரிமை ஒருவனுக்குத்தானே கிடைக்கும். அதுதானே தர்மம்.

'இதில் யார் ஏமாறப் போகிறார்களோ?' என்றேன் மெதுவாக.

'சந்தேகமென்ன? தோல்வி சேகருக்குத்தான்' என்றாள் சின்னு.

'அதெப்படி? இருவரிடமும் அவள் சமமாகத்தானே பழகுகிறாள்' என்றேன்.

'அதுதானில்லை! அதோ மோகனிடம் பேசுகிறாள். இப்பொழுது அவள் முகத்தில் எவ்வளவு ஆர்வம் துடிக்கிறது பார்த்தீர்களா?... அதோ, இப்பொழுது சேகரிடம் பேசுகிறாள். மோகனைப் பார்க்கும் போதிருந்த அன்பும், காணமும் இப்பொழுதில்லை பாருங்கள்' என்று எனக்கு விளக்கினாள் சின்னு. பெண்ணைப் பெண்



வீண் வேதனை

சாது

சரோஜினி பார்க்கில் அன்று சாயங்காலம் ஏனோ கூட்டம் அதிகமில்லை. பார்க்கின் மூலையில் உள்ள ஒரு மரத்தின் கீழ் கிடந்த பெஞ்சியில் போய்ச் சாய்ந்தேன். மரத்தின் ஒரு கிளையில் இரண்டு குயில்கள் உட்கார்ந்திருந்தன. அவற்றைப் பார்த்த போது 'அந்தக் குயில்கள் எப்படி குடும்ப வாழ்க்கையை நடத்துகின்றன? அந்தக் குயில்களும் தமக்குள் சண்டை போட்டுக் கொள்ளுமா? அவற்றின் வாழ்க்கையில் பூசல் ஏற்பட்டால் எப்படித் தீர்த்துக் கொள்ளும்? அவைகளும் மனிதர்களைப் போல் வாழ்க்கையில் வேதனைப் பட்டுக்கொண்டு தானிருக்கின்றனவா?' என்பன போன்ற கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன.

அப்பொழுது அந்த இரண்டு குயில்களும் பறந்து என் பக்கத்தில் வந்தன. ஆண் குயில் என் காதில் வந்து மெதுவாக "மனிதர்களைப் போல் நாங்கள் குடும்பத்தில் சண்டை போட்டுக் கொள்வதில்லை. வேண்டாத வேதனைகளை வலிய இழுத்துக் கொள்வதில்லை. மனிதன்தான் தன்னைத் தானே கெடுத்துக் கொள்கிறான்" என்று கூறியது.

எனக்கு 'ரோசம்' பொத்துக் கொண்டு வந்தது. "அதெப்படி உனக்குத் தெரியும்? மனிதரிடம் நெருங்கிப் பழகியது மாதிரிப் பேசுகிறாயே?" என்றேன்.

"ஆம்; மனிதரிடம் பழகி அவனிடமிருந்து தெரிந்து கொண்டதைத்தான் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டுத் தன்னுடைய மனைவியைப் பார்த்து, "சின்னு, கதையை நீ சொல்கிறாயா, நான் சொல்லட்டுமா?" என்றது.

"நீங்களே சொல்லுங்கள்" என்று கூறி வெட்கத்தினால் தலையைச் சாய்த்துக் கொண்டது பெண் குயில். ஆண் குயில் கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

★

"சில வருஷங்களுக்கு முன் இந்த ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். இந்தப் 'பார்க்'கிற்கு ஒவ்வொரு நாள் சாயங்காலமும் தவறாமல் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் பெயர் மோகன்; மற்றவன் பெயர் சேகர். எனக்கு அவர்களைக் காண்பதில் ஒரு தனி ஆனந்தம். இந்தப் 'பார்க்'கிற்கு எத்தனையோ பேர் வருவார்கள்; போவார்கள். அவர்களில் எல்லோரையும்விட என் மனதிற்கு ரொம்பவும் பிடித்தமானவர்கள் அந்த இரு நண்பர்கள்தான்.

"தினம் சாயங்காலம் கலாசாலை விட்டவுடன் இந்த இடத்திற்கு வருவார்கள். நானும் இந்தக் கிளையில் வந்து உட்கார்ந்து கொண்டு, அவர்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன். சிற்சில சமயங்களில் அவர்கள் தங்கள் கையில் கொண்டு வந்திருக்கும் பக்ஷணத்தை எனக்காகத் தரையில் கொஞ்சம் வீசுவார்கள். அவர்களுக்குத்தான் என் மேல் எவ்வளவு அன்பு! அப்படி எத்தனை இன்பமயமான நாட்கள்!

"அன்று, அதோ தெரிகிறதே பன்னீர் மரம், அதில் இந்தச் 'சின்னு' உட்கார்ந்திருந்தாள். இவளைக் கண்டவுடனேயே, என் மனம் இவளுக்கு அடிமையாகி விட்டது. ஆசையோடு இவளிடம் பறந்து சென்று பக்கத்தில் உட்கார்ந்தேன். இவள் நகர்ந்து அப்பால் போய் விடவில்லை; அதற்குப் பதிலாக என்னை அன்போடு பார்த்தாள். எங்கள் பரஸ்பரக் காதல் எங்களைச் சதிபதிகளாக்கியது.

"சின்னுவிற்கு அந்த நண்பர்களை அறிமுகப்படுத்தினேன். எனக்கு மணமான அன்று சாயங்காலமும் அந்த நண்பர்கள் இங்கு வந்தார்கள். சேகர் எங்களைப் பார்த்து விட்டான். "அடே, ஜோடி சேர்ந்து விட்டது போலிருக்கே!" என்று சந்தோஷத்தில் கத்தினான். இருவரும் சிரித்தார்கள். சின்னுவிற்கு வெட்கம் வந்து விட்டது. முகத்தைக் கோணிக் கொண்டு என் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். எங்களிருவருக்கும் அன்று நல்ல விருந்து கிடைத்தது. அந்த நண்பர்கள் கொண்டு வந்த பக்ஷணங்களில் எங்களுக்கும் பெரும் பங்கு கிடைத்தது. அந்த இருவரின் நட்பைச் சின்னு மிகவும் ரஸித்தாள். இப்படியே பல நாட்கள் கழிந்தன.

"அன்று ஒரு புதுமை நிகழ்ந்தது. என்றுமில்லாதபடி ஒரு பெண் இந்த இடத்திற்கு வந்தாள். எனக்கு அவளை வர்ணிக்கத் தெரியாது. அவளை எந்த ஆடவனும் பார்த்தால் அப்படியே சொக்கி விடுவான். இன்னும் சொல்வதானால், பெண்களே அவள் மீது மோகங் கொள்ளக்கூடிய அளவுக்கு அவள் அழகியாயிருந்தாள் என்று சொல்லலாம். அன்றும் அந்த நண்பர்கள் வந்தார்கள். ஆனால் இங்கே வரவில்லை. இங்குதான் அந்தப் பெண் இருந்தாளே. ஆகையால் அந்தப் பன்னீர் மரத்தின் கீழிருக்கும் பெஞ்சியில்



கோலிடந்த வேல்க்
　　கும்ப கருணன்ஓர்
மலைகி டந்தது
　　போல வணங்கினான்.

[நிலை கிடந்த : அழியாத நிலைத்த தத்துவம் கிடந்த; நெடு மதில் கோபுரத்து : உயர்ந்த மதிலோடும் கோபுரத்தோடும்; அலை கிடந்த இலங்கையின் அண்ணலை : அலை மோதிக் கொண்டிருப்பதான இலங்கைக்கு அரசனான ராவணனை; கொலை கிடந்த வேல்க் கும்பகர்ணன் : பல யுத்தங்களில் எதிரிகளைக் கொன்ற வெற்றிகளை எல்லாம் ஞாபக மூட்டக்கூடிய வேலை ஏந்திய கும்பகர்ணன்; ஓர் மலை கிடந்ததுபோல வணங்கினான் : ஒரு மலைபோல் இருந்தது ராவணன் முன் வந்து கும்பகர்ணன் வணங்கிக் கிடந்தது.

குறிப்பு :—கும்பகர்ணனது பெருமையையும் வீரத்தையும் மதில், கோபுரம், அலை, மலை எல்லாம் சேர்ந்து எடுத்துச் சொல்லுவதுபோல் இருக்கிறது செய்யுளின் ஓசையும் பாவமும்.]

பாதத்தில் விழுந்து வணங்கிய கும்பகர்ணனைக் கையால் எடுத்துத் தழுவுகிறான் ராவணன்.

வன்துணைப் பெருந்
　　தம்பி வணங்கலும்
தன் இரண்டதோள்
　　ஆரத் தழுவினான்,—
நின்ற குன்றொன்று
　　நீள்நெடும் காலொடும்
சென்ற குன்றைத்
　　தழீஇயன்ன செய்கையான்.

[வன் துணைப் பெரும் தம்பி வணங்கலும் : பெரும் பராக்கிரம சாலியான கும்பகர்ணன் வந்து வணங்கவும்; தன் இரண்ட தோள் ஆரத் தழுவினான் : தன் இரண்ட தோளாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டான் ராவணன் : அது எப்படி இருந்தது?

நின்ற குன்று ஒன்று : நின்று கொண்டிருந்த ஒரு மலையானது (ராவணன்); நீள் நெடுங் காலுடன் சென்ற குன்றை : மிகவாக நீண்டு பருத்த காலோடு நடந்து வந்த மலையை; (கும்பகர்ணனை) தழீஇ யென்ன செய்கையான் : தழுவியது போன்ற நிலையில் உள்ள—ராவணன்.]

அண்ணனும் தம்பியும் தழுவிக் கொண்டது ஏதோ மனிதனும் மனிதனும் தழுவிய மாதிரி இல்லை. ஏதோ இரண்டு மலைகள் வந்து ஒன்றோடொன்று தழுவிக் கொண்டது மாதிரியே தோன்றியது!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

287. மலையொடு மலை தழுவியது!

தோல்வி என்பதையே அறியாத ராவணன், முதல் நாள்ப் படுதோல்விக்கு உள்ளானான். என்றும் இல்லாத அவமானத்தோடு அரண்மனை வந்து சேர்ந்தான். மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறது. பலர் வந்து ஆறுதலான வார்த்தைகள் சொல்லிப் பார்த்தார்கள். ஆறுதல் அடைந்தபாடாக இல்லை.

அதன்மேல் தம்பி கும்பகர்ணனைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னான்.

கும்பகர்ணனை முதல் முதலாக மந்திராலோசனைச் சபையில்ப் பார்த்தோம்.

'சீதையைச் சிறை வைத்தது பெரும் பிழை' என்று அப்போதே சொன்னான் கும்பகர்ணன்.

ஆனாலும் உடனே செய்ய வேண்டியது என்ன என்பதையும் சொன்னான். "காலதாமதமே செய்யாமல், உடனடியாகப் படையெடுத்து எதிரியே இல்லை என்று ஆக்கிவிட வேண்டும்" என்று ஆத்திரத்தோடு அண்ணனிடம் சொன்னான்.

தம்பி அப்படிச் சொன்னது ராவணனுக்கும் திருப்தியாகவே இருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் அரசியலில்த் தலையிட்டுப் பேசவேண்டி இருந்தது கும்பகர்ணனுக்கு.

மற்றப்படி சாதாரணமாகக் கும்பகர்ணன் அரசியல் விவகாரங்களில்த் தலையிடுவது கிடையாது. அதெல்லாம் அண்ணனும் மந்திரி பிரதானிகளும் பார்த்துக் கொள்ளவேண்டிய காரியம் என்று ஒதுங்கியே இருந்து விடுவான்.

அப்படி ஒதுங்கி இருந்த கும்பகர்ணனைக் கூப்பிட்டு விட்டான் ராவணன். கும்பகர்ணனும் வந்து சேருகிறான்.

இலங்கைத் தீவில்க் கோட்டை மதிலும் கோபுரமுமாக எழுந்து நிற்கின்றன. எங்கே நிற்கின்றன? சமுத்திரக் கரையோரத்தில் நீருக்குள் இருந்தே எழுந்து நிற்கின்றன. பெரும் பெரும் அலைகள் வந்து மதில்கள் மீதும் கோபுரத்தின் அடியிலும் மோதுகின்றன. அப்படி மோதுவதைப் பார்த்தால் ஏதோ 'நிலையாமை நிலையாமை' என்று சொல்லுகிறார்களே, அதற்கெல்லாம் மாறாக 'என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையை இதோ பார்க்கிறோமே கல் மதிலிலும் கோபுரத்திலும்' என்று சொல்லத் தோன்றும்.

நிலைகிடந்த
நெடுமதிட் கோபுரத்(து)
அலைகிடந்த
இலங்கையின் அண்ணலைக்,

எச்சரிக்கை!



எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதப் போகும் மாணவன் :—பாட்டி! இந்தச் செய்தியைக் கேட்டாயா? இந்த வருஷம் 68000 பிள்ளைகள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதுகிறார்களாம்!

பாட்டி :—அவ்வளவு கூட்டத்திலே உனக்கு எழுத இடம் இல்லாமே போய்விடப் போகிறது. சீக்கிரமாக இப்பொழுதே ஓடிப்போய் இடத்தைப் பிடித்துக் கொள்ளுடா, அம்பி! அப்புறம் அவர்கள் இடம் இல்லை என்று சொல்லிவிடப் போகிறார்கள்'



யார் அது?

மின்சார ரயில் வண்டியில் ஒரு கலாசாலை மாணவன் தன் உபாத்தியாயரைக் கண்டபடி திட்டிக் கொண்டே வந்தான். அவன் ஒரு வழியாய்த் தன் வசை மொழிகளைச் சொல்லித் தீர்த்த பிறகு, அவனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த ஒருவர் சாவதானமாய், "மிஸ்டர், நான் யார் தெரியுமா, உங்களுக்கு?" என்று கேட்டார்.

"தெரியாதே!" என்றான் மாணவன்.

"நான்தான் நீர் திட்டிக் கொண்டிருந்த ஆசாமியின் தமையன்!"

மாணவனுக்குச் சற்றுப் பயம் உண்டாயிற்று. "நான் யார் தெரியுமா?" என்று கேட்டான், அந்தப் பேர்வழியை.

"தெரியாது!" என்றார் அவர்.

"நல்ல வேளையாய்ப் போயிற்று!" என்று சொல்லி, அப்போது வண்டி நின்ற ஸ்டேஷனில் உடனே இறங்கிவிட்டான்.

★

உண்மை!

மனைவி (சமுத்திரக் கரையில்):—என்ன அப்படியே பித்துப் பிடித்தாற் போல் உட்கார்ந்து யோசிக்க ஆரம்பித்துவிட்டீர்களே! இந்த அலைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக எவ்வளவு அழகாய் வந்து கொண்டிருக்கின்றன! இதை நீங்கள் பார்க்கவே இல்லையா?

கணவன்:—பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அலைகளைப் பார்த்ததும் எனக்கு வீட்டுச் செலவுகள் ஞாபகத்துக்கு வந்து விட்டன. அவைகளும் இப்படித் தானே ஓயாமல் வருகின்றன?

யார் தவறு?

ஒருவர் (நாட்டு வைத்தியரிடம் வந்து):—இது என்ன அநியாயமாயிருக்கிறது, ஐயா? நீர் என் தகப்பனாரைச் சொஸ்தப்படுத்தி விடுவதாகச் சொன்னீரே, அவர் இன்று இறந்து விட்டாரே!

வைத்தியர்:—அவசரப் படாதேயும். நான் சொன்னபடி உமது தகப்பனார் மருந்து சாப்பிட்டாரா?

அவர்:—ஆகா? ஒரு வருஷமாக உம் மருந்தைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தார். அப்படி இருந்தும்......

வைத்தியர்:—ஆ! அப்படிச் சொல்லும். நான் இரண்டு வருஷ காலத்துக்கு மருந்து சாப்பிட வேண்டும் என்றல்லவா சொன்னேன்!

★

அப்படியா?

வக்கீல்:—பிரதிவாதி உமக்கு ஓர் அடி கொடுத்ததாகச் சொல்லுகிறீரே, பிறகு என்ன நடந்தது?

வாதி:—பிறகு அவர் மூன்றாவது அடி கொடுத்தார்.


வக்கீல்:—மூன்றாவதா? இரண்டாவது என்று சொல்லும்.

வாதி:—இல்லை, இரண்டாவது நான் கொடுத்தேன்.

★

இரண்டு குணங்கள்

பிரசங்கி:—வர்த்தகர்களுக்கு முக்கியமாக வேண்டியது இரண்டே இரண்டு குணங்கள் அவை, நாணயமும் புத்திசாலித்தனமும்



தான். பிறருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பது நாணயம். பிறருக்கு வாக்குக் கொடாமலிருப்பது புத்திசாலித்தனம்.

அந்தப் பெண்ணை அழைக்க அவள் தமையன் வந்தான். "நாட்டுப் பெண்ணை அழைத்துப் போக அவள் அண்ணா வந்திருக்கிறானே, பூஷணத்தைத் தனிமையில் கூப்பிட்டு, ஆகவேண்டியதைச் சொல்லுங்களேன்" என்றேன் அவரிடம். அர்த்த புஷ்டியுடன் என்னைப் பார்த்து "போக்கிரி! அநியாயமாய் என் மானத்தை வாங்காதே!" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அவர். நான் ஏதோ சொல்ல வாயெடுத்த போது பூஷணம் ஏதோ காரியமாக அங்கே வந்தான். எங்கள் பேச்சு அவன் காதிலே விழுந்து விட்டது போலும். அவனும் சிரித்தான். ஆமாம். அவனுக்கும்தான் நடந்ததெல்லாம் தெரிந்து விட்டதே!

பூஷணத்தின் மனைவி பிரயாணப் பட்டாள். சர்வாலங்கார பூஷிதையாய், உள்ளத்திலே துள்ளும் குதூகல உணர்ச்சி முகத்திலே ததும்ப எல்லோரையும் நமஸ்கரித்து அவள் வண்டியேறிச் சென்ற காட்சி இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவத்தை நினைவூட்டியது. அப்போது உள்ளத்திலே குமுறி யெழுந்த கொந்தளிப்புக்குப் பரிகாரமாக இப்பொழுது எல்லையற்ற ஆனந்தம் ஏற்பட்டது. என் மனம் சாந்தி பெற்றது.

நடந்த கல்யாணம்

ஸோமாஸ்

சென்னை

"அன்புள்ள வைத்திக்கு,

அநேக ஆசீர்வாதம்,

உன்னிடமிருந்து கடிதமே இல்லை. கல்யாணம் நடக்கவில்லை என்பதற்காக நீ வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. அப்படி வருத்தப்படுவதில் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. பிராப்தம் எப்படியோ அப்படித்தான் எல்லாம் நடக்கும். முயற்சிதான் நாம் செய்யலாம். பலனைத் தருவது பகவான் செயல். பகவான்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நீ நிம்மதியா யிரு. நம் செயலில் என்ன இருக்கிறது?

உன் அத்தை."

இந்தமாதிரி எத்தனையோ கடிதங்கள் கலெக்டர் வைத்தியநாதனுக்கு வந்தன. அவற்றை யெல்லாம் படித்துப் பெருமூச்சவிட்டார் வைத்தியநாதன்.

கல்யாணம் என்றால் சாதாரணக் கல்யாணமா? கலெக்டர் வைத்தியநாதன் ஐ. ஸி. எஸ். வீட்டுக் கல்யாணமல்லவா? எத்தனையோ பேர் அது விஷயமாக மிகவும் சிரத்தை காட்டினர். பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் கலெக்டர் வீட்டுக் கல்யாணம் நடப்பதைப் பற்றி விசாரிக்க தினசரி வந்து போய்க் கொண்டிருந்தனர்.

டாக்டர் சங்கரன்தான் கலெக்டர் வீட்டுக் கல்யாணம் நடப்பதில் மிகவும் சிரத்தையுடனிருந்தார். அவருக்கு மூச்சு விடக்கூட அவகாசம் இல்லாமல் கேஸ்கள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கும். இத்தனை கேஸ்களையும் கவனித்துவிட்டு எத்தனை நேரம் ஆனாலும் கலெக்டர் வைத்தியநாதன் வீட்டுக்குப் போகாமல் இருக்கமாட்டார். கலெக்டர் வீட்டுக் கல்யாணம் நடக்க டாக்டர் எடுத்துக் கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல.

"டாக்டர் ஸார், கல்யாணம் நடப்பது உங்களிடம்தான் இருக்கிறது. உங்களுக்கு நான் ரொம்பவும் சிரமம் தருகிறேன்!" என்றார் வைத்தியநாதன்.

"அந்தக் கவலையை என்னிடம் விட்டு விடுங்கள். இன்று நேற்றைய நண்பர்களா நாம்? எனக்கு உபசாரமே தேவையில்லை. கல்யாணத்தை நடத்தி வைப்பது என் கடமை!" என்று டாக்டர் சங்கரன் அமைதியாகப் பதில் அளித்தார்.

டாக்டர் சங்கரன் பொறுப்பை எடுத்துப் போட்டுக்கொண்டு தைரியம் சொன்னதிலிருந்து வைத்தியநாதனுக்குக் கொஞ்சம் நிம்மதியா யிருந்தது. கல்யாணத்தைப் பற்றி அவரும் டாக்டரிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டார்.

கடைசியில் டாக்டர் சங்கரனின் உதவியால் கலெக்டர் வீட்டுக் கல்யாணம் நன்றாய் நடந்தது எல்லோருக்கும் அதிசயமா யிருந்தது.

ஆமாம். கலெக்டரின் கடைசிக் குழந்தை கல்யாணம் கால் சொஸ்தமாகி நடக்க ஆரம்பித்துவிட்டான்; கூடம் முழுவதும் ஒருவருடைய உதவி யில்லாமல் தானே நன்றாய் நடந்தான். ஐந்தாறு மாசங்களாக நடக்காமலே இருந்த கல்யாணம் நடந்துவிட்டான் என்றால் கலெக்டரின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? குழந்தை கல்யாணம் நடந்ததற்காக அவர் டாக்டர் சங்கரனுக்கும் நண்பர்களுக்கும் ஒரு விருந்து வைத்தார்.


நாளை உங்களுக்கு இன்னொருத்தி வருவாள். அவளிடமும் பிரசவிக்கப் போகிறபோது நகைகளைக் கேட்க வேண்டாம்—" என்று கூறி முடிக்குமுன் அவர் தம் மண்டையில் வலக்கரத்தால் ஓங்கியறைந்து கொண்டு ஓ வென்று சத்தமிட்டு அலறினார்.

டாக்டரின் திறமையோ, என் விதியின் வலுவோ, அல்லது சகுனம்தான் ஆகவில்லையோ! உடலினின்றும் பிரயாணம் கிளம்பிய உயிர், தன் பிரயாணத்தை நிறுத்திக் கொண்டது. நான் பிழைத்து விட்டேன். எல்லோரும் அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். என் அபிலாஷையின்படிக் குழந்தையைத் தொட்டிலிட்ட போது, 'பூஷணம்' என்று பெயரிட்டார்கள். எவ்வளவோ விஷயங்களை ஊகித்து உணர்ந்து விடுகிற மனித சக்திக்குப் பூஷணம் என்றால் ஆபரணம் என்று தெரியாதா? எத்தனையோ பெயர்களை விட்டு, நான் ஏன் அந்தப் பெயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைத்தான் உணர்ந்து கொள்ள முடியாதா? மற்றவர்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவர் உணர்ந்து கொண்டு விட்டார், அது போதும்.

குழந்தையும் கையுமாய்ச் சென்னைக்குத் திரும்பியபோது என் உள்ளம் நிரம்பித்தானிருந்தது. போகும்போது அங்கே ஏற்பட்டிருந்த சஞ்சலம் இப்போது ஒரு துளியுமில்லை. பூஷணத்தின் பொக்கை வாய்ச் சிரிப்பு உலகை மறந்த ஆனந்த நிலைக்கு ஆளாக்கிற்று என்னை. மாமியார், மாமனார் புருஷர் எல்லோரும் குழந்தையை வைத்த இடத்திலே வைக்காமல் தான் கொண்டாடினார்கள். போன அன்றே விதவிதமான உடைகளைத் தைத்துப் போட்டார்கள். அழகழகான ஆபரணங்களைச் செய்து அணிவித்தார்கள். அதைக்கண்டு நான் ஆனந்தப் படவுமில்லை; அவர்கள் செயலைத் தடுக்கவுமில்லை. அவன் அவர்கள் சொத்து. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டுமே. என் வரையில் நான் ரோசக்காரியாகத்தான் இருந்தேன். ஆம், பழைய நகைகளைக் கையால் தொடவும் இல்லை. இவர்கள் எத்தனையோ தரம் சொல்லிப் பார்த்தார்கள். ஏன்? அன்பு முறையிலேயே அவர் அடித்துக்கூடப் பலவந்தப் படுத்தித் தான் பார்த்தார். நானா அதற்கெல்லாம் அசைந்து கொடுப்பவள்?

பூஷணம் வளர்ந்து பெரியவனானான். படித்தான். பல பட்டங்களைப் பெற்றான். நல்ல இடத்திலே கல்யாணமாயிற்று. கல்யாண காலத்திலேகூட நான் வெறும் தாலிச் சரட்டோடுதான் காட்சி தந்தேன். 'இருந்தாலும் இவளுக்கு இத்தனை ஆகாத்தியம் வேண்டாம்' என்று எத்தனையோ பேர் சொல்லத்தான் சொன்னார்கள். என் மனம் அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. உள்ளத்தின் புண் ஆறினாலும் வடு மாறவில்லையே!

பூஷணத்தின் மனைவி கர்ப்பவதியானாள். வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் முறைப்படி நிறைவேறின. உரிய காலத்திலே



நாட்கள் சென்றன. செழிப்பான நிலையிலுள்ள கிராமத்திலே, வளமான என் பிறந்த வீட்டிலே எனக்கு ஒரு குறையும் இல்லை. 'அவர்' வாரத்திற்கொரு கடிதம் போட்டார், அன்பு மொழிகளைப் பின்னி. நானும் பதில் போட்டேன். ஆனால் அந்தக் கடிதப் போக்குவரத்திலே இந்தப் பாழும் கதை விஷயம் குறுக்கிடவில்லை. அவரும் எழுதவில்லை, நானும் எழுதவில்லை.

போஷணையும், உபசரணையும் உடலைப் பாதுகாக்க முயன்றன. அத்தனைக்கு அத்தனை நெஞ்சிலே புரையோடிப் போன அந்த விஷயம் உள்ளத்தைச் செல்லரிப்பது போல் அரித்துக் கொண்டேயிருந்தது. எல்லோரும் பயந்து கொண்டேயிருந்தார்கள்— டாக்டர் உள்படத்தான்; இருதயம் ரொம்பவும் பலவீனமாயிருக்கிறதே, அந்தப் பலவீனம் உடலையும் பாதித்துப் பிரசவகாலத்திலே கொடிய சோதனைக்கு உள்ளாக்கி விடுமோ என்று. ஆனால் அப்படியெல்லாம் நடைபெறவில்லை. துளிக்கூடச் சிரமமே இல்லை. தாய்மையை அடைந்த மகிழ்ச்சியை விடத் தனயனின் எழில் கண்டு பூரித்தது என் உள்ளம். சென்னைக்குத் தந்தியும் தபாலுமாகப் பறந்தன. மூன்றும் நாள் பத்தியம் போட்டார்கள். பத்தாம் நாள் இரவு புண்யாஹவாசனத்தை முன்னிட்டு அவர் வந்தார். ஆனால் இதென்ன விபரீதம்!

திடீரென்று என் உடலில் கோளாறு. இன்ன வகையில் ஏற்பட்டது என்பதும், என்ன பரிகாரம் என்பதும் புரியாமல் தவித்தார்கள் எல்லோரும். வீடு அல்லோலகல்லோலப் பட்டது. அவரது வருகையை அறிந்ததால், அவருடைய குரலை அறையிலிருந்து செவியுற்றதால் ஏதோ பழைய நினைவுகளின் கிளர்ச்சியைத் தாளாமல் உள்ளத்திலேற்பட்ட நெகிழ்ச்சியே உடற்கோளாறுக்குக் காரணமாக இருக்குமோ என்று எண்ணுகிற அளவிலேதான் நிலைத்திருந்தது எனது பிரக்ஞை. பிறகு எவ்வளவு காலம் கழித்துத் தெளிவு பெற்றேனோ, தெரியாது. கண் விழித்தபோது என்னைச் சூழ்ந்து எல்லோரும் இருந்தனர். அவர்களின் முக பாவமும், என் செவிகளில் விழுந்த சில சொற்களும் என்னை அயரவைத்தன. 'ஓ! எனக்கு முடிவு காலமா?......'

"கண்ணே!......லலிதா !...... என்று கூவி விசித்து விசித்து அழுதார் அவர். நான் விரக்தியோடு சிரித்துவிட்டு, "அழாதீர்கள். குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரே ஒரு விஷயம்தான் முன்னைப்போல் என் நெஞ்சில் இடறிக் கொண்டிருக்கிறது.

கொண்டாரா? இல்லையே, முதலில் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கிப் போனவள் பிறகு சிறுகச் சிறுக மனத்தைச் சமாதானம் செய்து கொண்டு வெட்கம் கெட்டு அவர்களிடம் மன்றாடியும் கடைசி வரையில் பிடித்த பிடியைச் சாதித்துத் தானே தீர்த்தார்கள் அவர்கள்?

"என் மனசு உனக்குத் தெரியும், லலி..." என்று அஸ்திவாரமிட்டு அதன்மேல் அவர் எத்தனை சித்திர விசித்திரப் பேச்சுக்கள் பேசினாலும் என் மனம் சமாதான மடையுமா? மனசு!...... 'யார் மனசை யார் கண்டது?' என்றுதான் சொல்லும்படியிருக்கிறது. 'வெறும் பாசாங்கு!' என்றுதானே எண்ணத் தோன்றுகிறது? சதியாம், அப்புறம் பதியாம்! உடல் இரண்டு, உயிர் ஒன்று!......சகலமும் நீயே! ......எல்லாம் வெறும் பேச்சு!

'மாமியார் கோபம் வயிற்றுக்கு மட்டம்!' என்பது போல என் ஆத்திரம் அவர்களுக்கு லாபமாகத்தான் ஆயிற்று. அவர்கள் கோரியது அதிகப்படி நகைகளை. நான் கழற்றிக் கொடுத்தது மாங்கல்யம் தவிரச் சகலமும். 'வேண்டாம் வேண்டாம்; சில்லறை நகைகள் உன்னிடமே இருக்கட்டும்' என்ற அவர்களின் சொற்களை என் மனம் ஏற்றுக் கொண்டால்தானே? வீட்டைப் பிரிந்து, வாசலைப் பிரிந்து, மாமியார் மாமனார் எல்லோரையும் பிரிந்து, உயிருக்குயிரான அன்பின் உருவான பதியைப் பிரிந்து, ஆண்டு அனுபவித்த வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் பிரிந்து, புனர் ஜன்மம் பெறப்போகிற நான் எப்படி ஊருக்குப் போனேன்? பழம் புடவையை இடையில் சுற்றி ஒரு பொன் மணிகூட மேனியில் இல்லாமல் பிறந்தகத்துக்குப் புறப்பட்ட காட்சியை அவர்கள் மனம் எப்படித்தான் சகித்ததோ! நான் இப்படி அச்சான்யமான வார்த்தைகளைச் சொல்லுவது தவறுதான். மென்மைக்குப் பெயர் போன பெண்மைக்கு இழுக்குத்தான். யாரென்ன செய்வது? என் மனம் தாளவில்லை. அம்மா முகத்திலும், மற்றும் ஊரார் முகத்திலும் எப்படி விழிப்பது? அவர்களின் கேள்விக்கு என்னதான் பதில் சொல்வது? என்று நினைக்கிறபோது என் மனம் படுகிற வேதனை எனக்குத்தானே தெரியும்? "பூ! இவ்வளவு தானடி, உன் அகத்துக்காரரின் அன்பும் ஆசையும்?" என்று கேட்டுக் 'கெக்கலி' கொட்டப்போகும் என்னொத்த பெண்களுக்குப் பதில் சொல்ல வகை புரியாமல் திகைக்கப் போவதை ஒரு கணம் கற்பனை செய்து பார்க்கும்போது என் உள்ளம் அடையும் சஞ்சலம் எனக்கல்லவா தெரியும்?

அப்பா சொன்னது போல அது லோக சம்பிரதாயமாக இருக்கலாம். ஆனால் என் மனம் அதைச் சகிக்கவில்லை. 'பிரசவத்திற்குச் செல்லுகிற பெண் நகைகளைக் கழற்றிப் புக்ககத்திலே கொடுத்துச் செல்வது 'ஒரு சம்பிரதாயமா?' என்றுதான் வெகுண்டது. யார் செய்து போட்டதானாலென்ன? பிறந்தகத்துச் சொத்தாயிருக்கட்டும், புக்ககத்துச் சொத்தாயிருக்கட்டும். ஒருவருக்கு என்று ஏற்பட்டு அணிந்த பொருள் அணிந்தவருடையதுதான். இந்தப் 'பறிமுதல்' சம்பிரதாயம் அடாதது' என்றுதான் தீர்மானித்தது.

யோசனை மிகுதியில் அப்படியே அலுத்துப் போய்த் தன்வசம் இழந்து தூக்கத்தி லாழ்ந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பொழுது புலர்ந்துவிட்டது. ஆயினும் எழுந்திருக்க மனமில்லை. சும்மாப் படுக்கையிலே கிடந்து புரண்டு கொண்டிருந்தேன். வண்டி கும்பகோணத்தை யடைந்ததும் அப்பா எழுந்து சென்று இட்டிலி, காப்பி வாங்கி வந்தார். தீராப்பொறியே என்று பல்லைத் துலக்கிவிட்டுக் காப்பியை மட்டும் குடித்தேன்.

இறங்க வேண்டிய ஸ்டேஷனை ரயில் அடைந்ததும் பிளாட்பாரத்திலே வந்து காத்துக் கொண்டிருந்த எங்கள் பண்ணை வண்டிக்காரன் பரபரப்புடன் சாமான்களை இறக்கி வைத்தான். நான் இறங்கினேன். முதன் முதலாக அவன் திடுக்கிட்டான், எனது தோற்றத்தைப் பார்த்து. அடுத்த படியாக, கிராமத்துக்குள் வண்டி நுழைந்த போது தெருவின் இரண்டு சாரிகளிலும் உள்ள வீட்டு வாசல்களை யொட்டினாற் போல நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஸ்திரீகள் 'குசு குசு' வென்று ஏதோ பேசி வம்பளந்தனர். ஆனால் அதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகவே இல்லை.

எல்லாரையும் விட என்னைப் பார்த்து அதிகம் திடுக்கிட்டுப் போனவள் அம்மா தான். அதைக் கண்டதும் சொல்லாமல் காரணமாக எனக்கு அழுகை வந்துவிட்டது. முகத்தை முந்தானையில் மூடிக் கொண்டு சமையலறையிலே போய்ப் படுத்து விசித்து அழுதேன். அப்பா மூலம் விவரமறிந்த அம்மா தேற்ற முயன்றாள். இஷ்டப்பட்ட வரையில் அழுதபின்தான் ஓய்ந்தேன்.

என் வாழ்வில்லை' என்று லட்சத்தடவை உருப் போட்டதாலால், என்னெதிரே வந்து என் காதுபட அந்தச் செய்தியைக் கூற எப்படித்தான் அவருக்குத் துணிவு வந்ததோ! அதனால் என் உள்ளம் என்ன பாடுபடுமென்று துளியாவது எண்ணிப் பார்த்தாரா அவர்?

சம்பிரதாயமாம், சம்பிரதாயம்! வயது வந்து ஆண்டு அனுபவித்தவர் கூட அவர்கள் செயலை ஆமோதித்து இப்படிச் சொல்லுகிறாரே! பூரண கர்ப்பிணியான ஒரு பெண்ணின் மனத்தைப் புண்படுத்துவது ஒரு சம்பிரதாயமா? எந்த இலட்சியத்தை உள்ளடக்கிக்கொண்டு எழுந்தது இந்தச் சம்பிரதாயம்? கேவலம் பொருளாசை! 'பெண்களுக்குப் பிரசவம் ஒரு கண்டம், மறு பிறப்பு! அதிலும் 'தலைச்சன்' பிரசவம். பெற்றுப் பிழைப்பது நிச்சயமில்லை...' என்பது போன்ற முன் யோசனைகளின் விளைவுதானே இது? நான் போனாலும் பரவாயில்லை! நகைகள் இருந்தால் போதும். அப்படித்தானே! இது ஒரு சம்பிரதாயம்! அட தெய்வமே! நான் போய் விடுவேன் என்று ஏன் தான் அவர்களுக்குத் தோன்ற வேண்டும்? சாவேனோ பிழைப்பேனோ என்கிற சந்தேகமே முதலில் ஏன் எழவேண்டும்? நானே போகிறபோது அந்தப் பாழும் நகைகள் போனால்தான் என்ன? ஏன் அப்படிப்பட்ட பெரும் புத்தி அவர்களுக்கு ஏற்படவில்லை? ஆமாம், அவர்கள் யாரோ, நான் யாரோ? நாளைக்கு நான் போனால் மறுநாள் என்னைப் போல் வேறொருத்தி அவர்களுக்கு. மாமனாரும்மாமியாரும் இப்படி நினைத்ததுகூட எனக்குப் பாரமாக இல்லை. அக்கினி சாட்சியாக, 'சகலமும் நீயே' என்று கைப்பிடித்த 'அவர்' கூட இந்தச் செயலுக்கு உடன் பட்டதைத்தான் என் மனம் பொறுக்கவே யில்லை.

ஊருக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு என்னிடம் எத்தனை அன்போடு பேசினார்? என் பிரிவாற்றாமையின் துயரத்தை எவ்வளவு அழகாக வெளிப்படுத்திக் கண் கலங்கினார்! அதைக் கண்டு என் உள்ளம் எப்படித்தான் நெகிழ்ந்து போயிற்று! "இவ்வளவுதானா நீங்கள்? என்னவோ என்றிருந்தேனே! ஆண்பிள்ளைச் சிங்கமான நீங்களே இப்படி மனம் கலங்கினால் அப்புறம் என்னதான் இருக்கிறது? இப்போது எனக்கு என்ன வந்துவிட்டதாம்? ஆயிற்று. ஓடிப்போகிறது நாலுமாச காலம், கொடிப் பொழுதாக! அப்புறம் உங்கள் செல்வனைக் கையில் தூக்கிக் கொண்டு ஜாம்ஜாமென்று வந்துவிடுகிறேன். இந்த அல்பக் காரியத்திலே போய் நீங்கள் இப்படி மனசைத் தளரவிடலாமா?........." என்றெல்லாம் கூறி அவரைத் தேற்றினேனே, நான் எத்தனை அறிவிலி! 'பேதை' என்கிற பட்டத்திற்குப் பூரண மதிப்பைக் கொடுத்த என்னிடம் அவர் அப்புறம் என்ன சொன்னார்; எப்படி நடந்து கொண்டார்!

"வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே, வலி! நேரிடையாக அம்மா உன்னிடம் சொல்லத் தயங்குகிறாள். நீ...பிரசவித்து...வருகிற ... வரைக்கும் ... உன்னுடைய...நகைகள்...இங்கேயே... இருக்கட்டும்...என்கிறாள்—"

ஐயோ 'எப்பேர்ப்பட்ட சொற்கள்! இதைச் சொல்ல அவருக்கு எப்படித் துணிவு வந்தது? சொல்ல மாட்டாமல் கஷ்டப்பட்டார்; தொண்டையை அடைத்தது என்பதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனாலுமென்ன? சொல்லி விட்டாரே! நாராசம் போன்ற அந்தச் சொற்களைக் கேட்டு நெருப்பை மிதித்தவள் போல் பதறிப்போய் "ஆ... ஆ...என்ன சொன்னீர்கள்?" என்று நான் கேட்டதும் அவர் திடுக்கிட்டுப் போனதென்பதும் உண்மைதான். ஆனாலுமென்ன? இதற்காக அவர் தம் அபிப்பிராயத்தை மாற்றிக்



நோயாளி:—டாக்டர்! எனக்கு வந்திருப்பது நிமோனியாதானா? ஏன் கேட்கிறேன் என்றால், நிமோனியாவுக்கு என்று வைத்தியம் நடந்த நோயாளிகள் சிலர் டைபாயிடு ஜுரத்தினால் இறந்து போயிருக்கிறார்களாமே!

டாக்டர்:—சே, சே! அதெல்லாம் வெறும் பிதற்றல். நான் நிமோனியா ஜுரத்துக்கு வைத்தியம் செய்தால், நோயாளி நிமோனியாவினால்தான் இறப்பான்!

மனச் சாந்தி

எல்லார்வி

"எந்த ஊருக்கு அம்மா போகிறாய்?"

"திருச்சிராப்பள்ளிப் பக்கம்."

"பிரசவத்துக்காகப் போகிறாயோ?"

"ஆமாம்."

"புக்ககம் எந்த ஊரு?"

எனக்கு எரிச்சலாக வந்தது. "பட்டணம்" என்று அலுப்புடன் சொல்லிவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன். ஆனால் அந்தப் பாட்டி விடுகிற வழியாயில்லை. "அவர் உனக்கு என்ன அம்மா வேணும்?" என்று மறுபடியும் கேட்டாள். "அவர் என் தகப்பனார்" என்று கூறிவிட்டு ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப் பரந்த வெளியில் பார்வையைச் செலுத்தினேன். கிழவி என் போக்கைக் கண்டு தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ளவில்லை. மேலும் மேலும் ஏதோ கேட்டுக் கொண்டே தானிருந்தாள். ஆனால் நான் ஒன்றுமே காதில் படாதது போல் இருந்துவிட்டேன்.

இருட்டிலே என்ன தெரிகிறது கண்ணுக்கு? ஜில்லென்ற குளிர் காற்று முகத்திலடித்து உடம்பைச் சிலிர்க்க வைத்தது தான் கண்ட பலன். ரயில் செல்லும் திசையில் முகத்தை ஞாபகப் பிசகாகத் திருப்பிவிட்டேன். வந்தது ஆபத்து! கண்ணிலே கரித்தூள் விழுந்து விட்டது. அந்த சுகம் எப்படியிருக்குமென்று அனுபவித்தவர்களுக்குத் தெரியும். சட்டென்று முகத்தை உள்ளுக்கு எடுத்துக் கொண்டு கண்ணைக் கசக்கினேன். மற்றொரு கண் எதிரே யிருந்த பாட்டியை நோக்கிற்று. அவள் என்னை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். நானென்ன, ஏதாவது கண்காட்சிப் பொருளா? அப்படி என்னதான் இருக்குமோ என் தோற்றத்திலே!

"கொஞ்சம் வேணுமானால் படுத்துக் கொள்ளேன், அம்மா!" என்று கனிவுடன் கூறினார், அடுத்த பலகையிலே உட்கார்ந்திருந்த என் தகப்பனார். தூக்கம் வந்தால் தானே படுத்துக் கொள்ளலாம்? தூக்கம் வராவிட்டாலும் உடலின் அலுப்பை உத்தேசித்தாவது கண்ணை மூடிக் கொண்டு படுக்கலாம் என்று நினைத்து அருகிலிருந்த படுக்கையின் மேல் சாய்ந்தாற்போல் படுத்துக் கண்ணைச் சிறிது மூடிக் கொண்டேன். பாவம், சீர்காழியில் ஏறின அந்தக் கிழவியும் பட்டணத்திலிருந்து வருகிற என்னுடைய சரித்திரம் முழுவதையும் அக்கக்காக ஆராய்ந்து அறிய முடியாத தோல்வியோடு தலையைச் சாய்த்தாள். சற்று நேரத்திலேயே பலமாகக் குறட்டை விடவும் தொடங்கிவிட்டாள். ஆம். அந்த வேளை — இரவின் மூன்றாம் ஜாமம் — சகல உயிர்களையும் மயக்கவைத்து ஆழ்ந்த நித்திரைக் குள்ளாவது இயற்கைதானே? ஆனாலும் நான் அன்று அந்த நியதிக்கு விதிவிலக்காகத்தானிருந்தேன். இரவு எட்டு மணிக்கு எழும்பூரில் ரயிலேறின எனக்கு விடியற்காலம் மணி மூன்றாகியும் தூக்கம் ஒரு சிறிதும் வரவேயில்லை. அந்தக் கண்களுக்குத் தூங்க நேரம் ஏது! மாரிக் காலத்து மழை போலப் பாட்டம் பாட்டமாக நிமிஷத்துக் கொருதரம் கண்ணீர் மழை பொழியத் தானே சரியாக இருந்தது?

விஷயம் தெரிந்த நாள் முதல் அன்றைக்கு முதல் நாள் இரவு வரையில் கண்ணீர் விட்டறியாத கண்கள், அவ்வளவையும் சேர்த்து வைத்து இருபத்து நாலுமணி நேரத்தில் கொட்டித் தீர்த்து விட்டன. "வீணாக அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே, லலிதா! எல்லாம் எங்கே ஓடிப்போகிறது? நாளைக்கு நீ பெற்றுப் பிழைத்து நல்லபடியாய்க் குழந்தையும் கையுமாக வந்து சேர்ந்ததும் சர்வ சுதந்திரத்துடன் எல்லாவற்றையும் அனுபவிக்கப் போகிறாய். இடையில் சிறிது காலம். அந்தச் சிறு காலமாறுதலை, பொறுமையே உருவான நீ பொறுத்துக் கொள்ளப்படாதா? வேண்டாம் அழாதே" என்று எத்தனையோ வகைகளில் 'அவர்' சமாதானம் சொல்லியும், என் உள்ளம் சமாதானம் அடையவில்லை. உள்ளம் சமாதான மடைந்தால் தானே அதன் ஆக்ஞைக்கு உட்பட்ட அவயவங்களில் ஒன்றான கண், நீர் சிந்துவதை நிறுத்தும்? இரண்டுமில்லை.

'இத்தனை சக்கர வட்டமாகப் பேசி என்னைச் சமாதானம் செய்கிறவர், என் தன் தாயாரிடம் எதிர்த்துப் பேசி அந்தக் காரியத்தைத் தடுக்கக் கூடாது? எல்லாம் அவ்வளவுதான்!' என்று அவரைத்தான் அடிக்கடி குறை கூறிற்று மனம். சே! என்ன ஏமாற்றம்! 'உடல் இரண்டு உயிர் ஒன்று' என்பதெல்லாம் வெறும் சொல் அடுக்குத்தான் போலும்! 'நீ இன்றேல்

தாம். முதலீடு செய்திருப்பவர்கள் பர்மாவிலிருந்தும் மலாயாவிலிருந்தும் திரும்புவது போல மூலதனத்தை எடுத்துக் கொண்டு இந்தியா திரும்பக் கூடாதா? பணத்தை அடிப்படையாக வைத்து மனிதனின் உரிமையை நிர்ணயிப்பது நியாயமாகுமா?

இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தில் பிரதமர் சேனநாயகா சில திருத்தங்களைக் கொண்டுவரப்போவதாகப் பேச்சுகள் அடிபட்டு வந்தன. திருத்தங்கள் கொண்டு வரும் உத்தேசம் பிரதம மந்திரிக்கு இருந்தது என்னவோ வாஸ்தவம். ஆனால் பிறகு நடந்த சில சம்பவங்களினால் இந்த உத்தேசத்தை அவர் ஒத்திப் போட்டுவிட்டதாயும், ஜூன் மாதத்துக்குப் பின் நடக்கப் போகும் பார்லிமெண்டின் புதிய கூட்டத்திற்கு இந்தத் திருத்தங்கள் வந்தாலே பெரிய காரியம் என்றும் இப்பொழுது தெரியவருகிறது. இந்தியர்கள் கொண்டிருந்த நம்பிக்கை புகைந்து போய்விட்டபடியினால் அடுத்த ஏப்ரல் மாதம் கூடும் இலங்கை இந்திய காங்கிரஸ் வருஷாந்திர மகாநாட்டில் காங்கிரஸ் அவ்விஷயமாகத் தனது கொள்கையை எவ்விதத்திலும் மாற்றிக் கொள்ளுவதற்கில்லை.

இவ்வருஷ மகாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து பெரிய தலைவர்கள் யாரையும் அழைப்பதில்லையென்றும் தன் கையே தனக்கு உதவியென்று இலங்கையிலுள்ள தலைவர்களைக் கொண்டே மகாநாட்டை நடத்துவதென்றும் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. ஒரு வகையில் இதுவும் நல்லது தான். இந்தியாவிலிருந்து தலைவர்களைத் தருவிக்கும் பொழுதெல்லாம் அவர்களைக் காட்டிப் பயமுறுத்துவதாகச் சிங்களத் தலைவர்களில் சிலர் குற்றஞ் சாட்டுகிறார்கள். இனி இது மாதிரிக் குற்றச் சாட்டுகளுக்கு இடமில்லாமலிருக்கும்.

முப்பது வருஷ சேவை

ஸ்ரீ ஏ. என். நாராயணய்யரின் பெயரைச் சொன்னால் தெரியாத இலங்கை இந்தியர்கள் அனேகமாக யாருமே இருக்க முடியாது. ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் ஏழைத் தொழிலாளி முதல் கொழும்பில் லட்சக் கணக்கிலே முதல் போட்டுத் தொழில் நடத்தும் முதலாளிமார் வரையில் அவ்வளவு பேர்களுக்கும் பரிச்சயமானவர் அவர். ஏனெனில் இலங்கையிலே இந்திய அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்தாற்போல இருபத்தாறு வருஷ காலம் சேவை புரிந்தவர் ஸ்ரீ நாராயணய்யர் ஒருவர்தான். இவ்வாரம் தம்முடைய ஐம்பத்தாறாவது வயதில் உத்தியோகத்திலிருந்து அவர் ஓய்வு பெற்றுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புவது இலங்கை இந்தியர்களுக்கு, அதிலும் முக்கியமாகத் தோட்டத் தொழிலாளருக்கு ஒரு நெருங்கிய நண்பரை விட்டுப் பிரிவது போலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ ஐயர் தம்முடைய இருபத்திரண்டாவது வயதில் இந்திய சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ந்து கணக்காட்டிங் ரிவின்யூ இன்ஸ்பெக்டராயிருந்தார். பிறகு 1924-ம் வருஷம் இலங்கைக்கு மாற்றப்பட்டு 1947-ம் வருஷம் வரையில் கண்டியில் இந்திய சர்க்கார் உதவி ஏஜண்டாயிருந்தார். அந்த இருபத்தி மூன்று வருடங்களில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் தகராறுகளையும் அவர்களுடைய குறைகளையும்பற்றி அவர் விசாரித்திருப்பார். 1947-ம் வருடம் முதல் இவ்வாரம் வரையில் கொழும்பில் இந்திய ஹைகமிஷனரின் இரண்டாவது காரியதரிசியாகவும் பாஸ்போர்ட் அதிகாரியாகவும் இருந்து விட்டு ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கிறார். அயல் நாட்டுக்கு மாற்றப்படாமல் தாய் நாட்டிலேயே முப்பத்தி நாலு வருடகாலம் சேவை செய்திருந்தால் ஓய்வு பெறும் பொழுது அவர் இன்னும் பெரிய பதவியில் இருந்திருக்க முடியும். எனினும், வெளிநாட்டில் பல தொல்லைகளுக் கிடையில் கஷ்டப்படும் பத்து லட்சம் இந்திய சகோதரர்களுக்குச் சேவைசெய்த பெருமை அவருக்குக் கிடைத்திருக்காது.

காந்தி மகான் தரிசனம்

ரஜனி

கொழும்பு, மார்ச் 11

நோர்வுட் பகுதியிலுள்ள ஒரு தோட்டத்தில் அதன் ஐரோப்பிய முதலாளியான ஸ்ரீ பெர்ஸிவல் இவ்வாரம் காந்தி மகானின் சிலை ஒன்றைத் திறந்து வைத்தார். அவர் நன்கொடை யளித்த ஒரு நிலத்தில் காந்தி சேவா சங்கத்தின் முயற்சியினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மேற்படி சிலையின் திறப்பு விழா வெகு விமரிசையாக நடந்தது. இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ கிரி மூவர்ண தேசியக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட்டார். ஸ்ரீ பெர்ஸிவல் பிறகு காந்தி மகான் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில், தம்முடைய தோட்டத்திலுள்ள தொழிலாளரின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் பாராட்டியதுடன் காந்தி மகானின் கொள்கைகளை எல்லோரும் பின்பற்றி நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அந்த வைபவத்துக்கு வந்திருந்த மற்றொரு ஐரோப்பியத் தோட்ட முதலாளியான மேஜர் லென் பேசுகையில், தாம் சில வருடங்களுக்கு முன் காந்தி மகானைச் சேவா கிராமத்தில் தரிசித்துப் பேசியதையும் அப்பொழுது காந்திஜீ கையெழுத்திட்ட புகைப் படமொன்றைத் தமக்கு அன்புடன் கொடுத்ததையும் குறிப்பிட்டு, மகாத்மா எந்த ஒரு தேசத்தினுடைய தனிச் சொத்து அல்லவென்றும், மனித சமுதாயம் முழுவதற்குமே அவர் சொந்தமானவரென்றும் சொன்னார். இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ கே. ராஜலிங்கம், ஸ்ரீ எஸ். தொண்டைமான் முதலியோர் பேசினார்கள்.

நிபந்தனைகள்


சென்ற ஜனவரி, பிப்ரவரி இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் இலங்கைக்கு இனி எப்பொழுதுமே திரும்ப முடியாதபடி இந்தியாவுக்குப் போயிருப்பதாக இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரி கூறினார். இந்தியாவுக்கு ரஜாவில் போய்விட்டுத் திரும்புவோர் இலங்கை இமிகிரேஷன் கண்ட்ரோலரிடம் நிரந்தர அல்லது தாற்காலிக வாசிகள் என்ற சர்டிபிகேட் வாங்கிச் செல்ல வேண்டுமென்பது புதிய சட்டத்தின்படி ஏற்பட்டுள்ள விதி. ஆனால் இந்த சர்டிபிகேட்டு எல்லோருக்கும் சுலபத்தில் கிடைப்பதில்லை. இலங்கையில் சேர்ந்தாற்போலக் குறைந்தது ஐந்து வருட காலமாவது வசித்ததை, கண்ட்ரோலருக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய தஸ்தாவேஜுகளைக் காட்டி ருசுப்படுத்துகிறவர்களுக்கு மட்டும் தாற்காலிக வாச சர்டிபிகேட்டுகள் வழங்கப்படுகின்றன. கல்வியறிவில்லாத பாமர ஜனங்களுக்கு இவ்வித தஸ்தாவேஜுகளைக் காட்டி ருசுப்படுத்துவது அசாத்தியமான காரியம். இவ்விதச் சட்டங்களெல்லாம் வருமென்பது எதிர்பாராத விஷயமாதலால், விஷயம் தெரிந்தவர்கள் கூட சென்ற ஐந்து வருஷங்களுக்கிடையில் கண்ட்ரோலர் கேட்கக்கூடிய தஸ்தாவேஜுகளைப் பத்திரப்படுத்தி வைக்கவில்லை. இதன் விளைவாகத் தினசரி அநேகம் இந்தியர்கள் இலங்கைக்குத் திரும்பி வருவதை அனுமதிக்கக்கூடிய தஸ்தாவேஜுகளை வாங்கிக் கொள்ளாமலே 'இலங்கையில் வாழ்ந்தது போதும்' என்று தாய்நாடு திரும்பி வருகிறார்கள்.

விநோதமான வியாக்கியானம்

இலங்கையில் சாசுவதமான உரிமைகள் இருப்பவர்களுக்கு நிரந்தர வாச சர்டிபிகேட் கொடுக்கலாமென்று சட்டம் கூறுகிறது. ஆனால் சாசுவதமான உரிமைகள் என்பதற்கு அதிகாரிகள் கொடுக்கும் வியாக்கியானம் விசித்திரமாயிருக்கிறது. இங்கு தொடர்ச்சியாகப் பதினைந்து வருடங்களுக்கு அதிகமாக வசித்தவர்களுக்கும் நிரந்தர வாச சர்டிபிகேட்டு மறுக்கப்படுகிறது. பிறரிடம் வேலைக்கிருப்பவர்களுக்கு நிரந்தர வாச சர்டிபிகேட் கொடுக்க முடியாதென்றும் இரண்டு மூன்று லட்ச ரூபாய் முதலீடு செய்திருப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்க முடியுமென்றும் அதிகாரிகள் வாதிக்கிறார்கள். வேலையிலிருப்பவர்களுக்கு வேலை போய்விட்டால் அத்துடன் நிரந்தர உரிமையும் போய் விடுகிற



ஸ்ரீ ஏ. எஸ். நாராயணய்யர்



அழுக்குச் சட்டைக்காரர் :—வண்ணான் வரவில்லை. அதனால்தான் அழுக்குச் சொக்காய் போட்டுக் கொண்டிருக்கிறேன்.

சூட்டுக்காரர்:—பேஷ் ! வண்ணான் வந்து விட்டாற்போல் இருக்கிறது. உங்கள் பிழிசல் சட்டையைப் பார்த்தாலே தெரிகிறதே !

கர்ணனைப்போல் மஹாமாயா ஒரு கவசத்துடன் பிறந்தவன். அதிகமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளாத சுபாவமே அந்தக் கவசம். சிறையிலிருந்து மறு பிறவி எடுத்த பின்னர். மற்றொரு போர்வைக்குள் அவன் தன்னை மறைத்துக் கொள்வதேன்? நித்தியம் அருகிலேயே அவன் உலவி வந்தாலும் தொலைவில் ஒதுங்கிப் போவதாகவே எனக்குப் படுகிறது. அவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.' ஒரு மந்திர வட்டத்திற்கு வெளியே நின்றவண்ணம் திருப்தி அடையாத உள்ளத்துடன் நுண்மையான இந்த ரகசியத்தை ஊடுருவி ஆராய முயன்றான், ராஜீவன். கங்குலின் இதயத்தை அறிய முடியாமல் துயின்றித் துடிக்கும் தாரகையென ராஜீவனும் இரவு நேரங் கழிப்பான்.

இவ்வாறு நெருங்கியிருந்தும் பிரிவினால் விலகி வாடும் இவர்கள் சிலகாலம் வாழ்க்கையை நடத்திவந்தனர். மழைக் காலம். ஒருநாள்; சுக்கிலபக்ஷம், மேகத்திலிருந்து சந்திரன் வெளிப்பட்டது. நடு இரவு ஊரே உறங்கும் வேளை. நிலா பொங்கி வழிந்தது தூக்கம் பிடிக்கவில்லை ராஜீவனுக்கு. தன் அறையின் சாளரக் கோப்பில் உட்கார்ந்து வெளியுலகை நோக்கினான். பூவின் மணம் தோட்டத்திலிருந்து கும்மென்று கமழ்ந்தது. சின்வண்டின் ரீங்காரம் அறையெங்கும் பரவியது. கறுத்த மரகிழல்களுக்கு இடையே குளத்து நீர் வெள்ளித் தகடெனப் பளபளத்தது. இந்த மாதிரி சமயத்தில் மனிதன் மனத்துள் எந்த எண்ணம் எழுமென்று சொல்வது கடினம். ஒருவனுடைய முழு உள்ளமும் ஏதாவது ஒன்றை நோக்கித்தான் பாயும். பூவின் இனிய கந்தம் ஒரு திசையைக் குறித்தே வீசும். சின்னின் ரீங்காரம் கார் இருளை நோக்கியே செல்லும், ராஜீவனின் மனத்துள் என்னவோ ஓர் எண்ணம் உதித்திருக்கவேண்டும். பழைய கட்டுப்பாட்டை மீறிச்செல்ல ஒரு துணிச்சலான எண்ணந்தான்! கார்காலமும் வந்தது; முல்லையும் அரும்பு ஈன்றது. பழமையில் மஹாமாயா இருந்த பேரெழிலுடன் இரவும் தோன்றியது. அவனது ஐம்புலனும் அவளை நோக்கியே விரைந்தன.

கனவில் நடப்பவன் மாதிரி ராஜீவன் எழுந்து மஹாமாயாவின் படுக்கையறையினுள் நுழைந்தான். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அருகில் சென்று அவளைக் கவிந்து நோக்கினான்— நிலவின் ஒளி முகத்தில் விழுந்தது. ஐயோ, இது என்ன! அந்தச் செவ்விய முகம் எங்கே? சிதையின் தீச்சுடர் தன் பசியைத் தீர்த்துக்கொள்ள அவள் கழுத்து வரைக்கும் நீய்த்து விட்டிருந்தது.

ராஜீவன் திடுக்கிட்டுப் போனான். ஓவென்று அலற அவன் வாய் துடித்தது. மஹாமாயா சட்டென விழித்துக் கொண்டாள். பக்கத்தில் ராஜீவன் நிற்பதைக் கவனித்தாள். உடனே தன் முகத்தைப் போர்வையால் மறைத்துக் கொண்டு படுக்கையிலிருந்து எழுந்து நின்றாள். பேரிடி விழவேண்டியதுதான் பாக்கி. தரையில் படிந்து அவள் பாதங்களைத் தொட்டு 'என்னை மன்னித்து விடு' என்று அவளை வேண்டிக் கொண்டான் ராஜீவன்.

ஒரு வார்த்தையும் பேசாமல், பின்னால் திரும்பியும் பாராமல் மஹாமாயா வீட்டை விட்டு வெளியே சென்றாள். ராஜீவன் வீட்டு வாசற்படியை அப்புறம் அவள் மிதிக்கவே இல்லை. எங்கே சென்றாளோ யாருக்குத் தெரியும்? அந்த இரக்கமற்ற நெஞ்சினள் கோபக் கனலுடன் விடைபெற்றுச் சென்றது. வாழ்வின் மீதிநாளெல்லாம் ராஜீவனுக்கு ஆறாத புண்ணாகவே இருந்தது.



துரைக்குச் சமாசாரத்தை உடனே தெரியப்படுத்தி அவருடைய உதவியைக் கொண்டு இந்தக் கொடுஞ் செயலைத் தடுக்கவேண்டுமென்று முதலில் யோசித்தான் ராஜீவன். ஆனால் அன்றே துரை ஸோனப்பூருக்குப் போக வேண்டியதாயிருந்தது. என்ன செய்வது? ராஜீவனுக்கு ஒரு மாதம் 'லீவ்' கொடுத்தார். அவ்வளவே!

'எனக்காகக் காத்திரு' என்றாளே மஹாமாயா அவனிடம்? அதை எவ்வாறு அவனால் மறக்க முடியும்? ஒரு மாதமில்லை, ஒரு வருஷமில்லை—வேண்டுமானால் உத்தியோகத்தையே துறந்து வாழ்நாள் முழுவதும் அவளுக்காகக் காத்திருக்கச் சித்தமானான்.

பித்துப் பிடித்தவன்போல், தற்கொலை புரிந்துகொள்ளலாமா, கழுத்தை வெட்டிக் கொள்ளலாமா என்றெல்லாம் அவன் மனம் தத்தளிக்கும்பொழுது வானம் இருண்டது. பெரும் பீறலாக மழை இறங்கியது. காற்றின் விசையில் வரப்போகும் புயலின் அறிகுறி தெரிந்தது. வீடே தலைமீது இடிந்துவிழும்போல் மேகம் குமுறியது. தன் உள்ளத்துள் நிகழ்வதுபோல் வெளி இயற்கையிலும் பேரதிர்ச்சி மூண்டிருப்பதை எண்ணி ஒருவாறு ஆறுதல் கொண்டான். அவன் நெஞ்சில் துடிக்கும் வேதனையையே அது எதிரொலித்தது. தன் முழுச் சக்தியை உபயோகிக்க அவன் முயன்றும் எண்ணிய அளவோடு அது நின்றுவிட்டது. இயற்கையோ ஆகாயத்தையும் பூமியையும் ஒன்றாக்கித் தன் அமோக சக்தியை ஏவி வேலை செய்தது!

அதே சமயம் வாசல் கதவை யாரோ தட்டினமாதிரி கேட்டது. ராஜீவன் விழுந்தடித்துக்கொண்டு போய்க் கதவைத் திறந்தான். ஈரப் புடவையுடன் ஒரு பெண் உருவம் அறையினுள் சரேலென நுழைந்தது. முகம் முகக்கிட்டிருந்ததால் இன்னாரென்று தெரியவில்லை. ஆனால் ராஜீவன் உடனேயே புரிந்து கொண்டான், மஹாமாயாதானென்று.

சந்தோஷம் பொங்கி வரும் குரலில், "மஹாமாயா, சிதையிலிருந்து எழுந்து வந்தாயா!" என்றான்.

"ஆம், உன்னை வந்து சந்திப்பேனென்று நான் வாக்குறுதி தரவில்லையா? அதனால்தான் வந்தேன். ஆனால் ராஜீவா, நான் அந்த மஹாமாயா இல்லை; நான் முற்றிலும் மாறிவிட்டேன், தெரியுமா! மனத்துள் மட்டும் பழைய மஹாமாயாவாக இருக்கிறேன். இதோ சொல்லு. இப்போதே என் சிதைக்குத் திரும்பிப் போய்விட முடியும் என்றால். நீ 'இரு' என்று வற்புறுத்தினால் தங்குகிறேன், இங்கேயே. ஆனால் இந்த முகக்கைத் திறக்கமாட்டேன். என் முகத்தையும் நீ பார்க்கக் கூடாது. இதற்கு உடன்பட்டால் நான் உன்னோடு இருப்பேன்" என்றாள் அவள்.

யமன் கையிலிருந்து அவள் இவ்வளவாவது தப்பி வந்தாளே அதுவே போதும். ராஜீவன், "உன் இஷ்டம் போல் செய்யேன். இனி என்னைப் பிரிந்து சென்றால் நான் உயிர்வாழ மாட்டேன்" என்றான்.

"சரி, புறப்படு, உன் துரை போயிருக்கும் ஊருக்கே நாம் போகலாம்" என்றாள் மஹாமாயா.

வீட்டிலிருக்கும் சாமான்களை அப்படியே போட்டு விட்டு ராஜீவன் மஹாமாயாவைக் கூட்டிக் கொண்டு புயல் தாண்டவமாடும் அந்நள்ளிரவிலேயே கிளம்பினான். அம்மாதிரி காற்று மழையில் தலை காட்டவே முடியாது. அம்பு போல் மழைத் தூற்றல் முகம் உடம்பு எல்லாம் துளைத்தடித்தது. மரங்கள் முறிந்து தலை மீது விழுமோ என்ற அச்சத்தால் காதலர் இருவரும் பரந்த வெளியிலேயே சென்றனர். பின்னால் சண்டமாருதம் துரத்திக் கொண்டே வந்தது. ஒரு மகத்தான பூதம் இவர்களை இலவம்பஞ்செனச் சமூகத்தை விட்டே ஊதி அப்புறப்படுத்துவது போல் இருந்தது அந்தக்காட்சி!

3

இவை யாவும் நம்புகிற கதையாயில்லை என்று வாசகர்கள் நினைக்கக் கூடும். வியப்பைத்தரும் விஷயங்கள் உல

இல் எத்தனையோ நடைபெறுகின்றன. அவை நம் அற்ப அறிவுக்கு எட்டாதவை. உடன்கட்டை ஏறுதல் அதாவது சக மரணம் நம் நாட்டில் சகஜமாக இருந்த காலத்தில் இதைப்போன்று எத்தனையோ அதிசய சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

மஹா மாயாவின் கால்களைக் கட்டி அவனைச் சிதையில் பலாத்காரமாகத் தள்ளி, கொள்ளியும் வைத்து விட்டனர். குபீரென்று நெருப்பு கொழுந்தோடி எரிந்தது. அந்தச் சமயந்தான் திடீரென வானம் சினங் கொண்டு விட்டது. பயங்கரக் காற்று ஒன்று கிளம்பி, கொட்டு கொட்டென்று மழையும் பெய்யத் தொடங்கியது. தகனக்கிரியை செய்ய வந்தவர்களெல்லாம் புகலிடம் தேடிக் கொண்டு ஓடினர். மஹா மாயாவைப் பிணைத்திருந்த கைக்கட்டு தீயில் பொசுங்கி விடவே அவன் எழுந்து உட்கார்ந்தான். உடம்பெங்கும் எரிச்சல். பல இடங்களில் தீயின் புண். இதையெல்லாம் எவ்வாறோ சகித்துக் கொண்டு கால் தளையை மெல்ல அவிழ்த்து விட்டான். எரிந்து போன ஆடையின் ஒரு பகுதியால் உடம்பை மறைத்துக் கொண்டு நேரே தன் வீட்டிற்குச் சென்றான். அங்கே ஈ, காக்கை இல்லை. மயானத்திலிருந்து யாருமே திரும்பவில்லை இன்னும். சரசரவென்று வேறு ஆடை ஒன்றை அணிந்து கண்ணாடியில் தன் முகத்தைப் 'பார்த்துக் கொண்டான் மஹா மாயா. கண்ணாடியை எறிந்து விட்டு என்ன சிந்தித்தானோ? முகத்தின் மேல் பெரிய முகக் கிட்டு ராஜீவன் இருக்குமிடத்தை நோக்கி நடந்தான். அதன் பின்னர் நேர்ந்தவை வாசகர்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.

* * *

இப்போது மஹா மாயா ராஜீவன் வீட்டில் அவனோடு இருந்தானே தவிர, அவனுக்குத் துளியேனும் இன்பம் தரவில்லை. வேறென்ன, இருவருக்கும் இடையே அந்த முகக்கு நின்றது! மரணத்தைப் போல் நிரந்தரமாக இருந்த அந்த மூடி, நரக வேதனையை விடத் துன்பத்தைக் கொடுத்தது; காரணம், மஹாமாயா அவனுக்குக் கிடைக்காது போயிருந்தால் ஒருவாறு அவனுடைய மனநோய் காலக்கிரமத்தில் மறைந்து போயிருக்கும். ஆனால் இப்படி முகமலரை அவன் காட்டாது மறைப்பதுதான் ராஜீவன் வாழ்வை ஆனாத் துயருக்குள் ஆழ்த்தி விட்டது.

எப்போதுமே மஹாமாயா அதிகமாகப் பேசாதவன். இந்த முகத்திரையினுள் அவன் பின்னும் மௌனம் சாதிப்பது பொறுக்க முடியாததுதான். சாவின் இருண்ட போர்வை அவனைச் சூழ்ந்திருப்பது போலவே ஒரு பயங்கரம் தோன்றியது. ராஜீவன் இந்தச் சூழ்நிலையில் நெருக்குண்டு நாளுக்கு நாள் தேய்ந்து மாய்ந்து வந்தான். எவ்வளவோ மனக் கோட்டை கட்டினான், பாவம்; சிறு பிராயம் முதல் அவன் மனத்தை ஈர்த்த மஹா மாயாவை இழந்தான். அந்த இனிய நினைவுகளைக் கொண்டு தன் வாழ்வை ஒருவிதமாக அமைத்துக் கொள்ள அவன் முற்படும்பொழுது முகக்குடன் வந்த உருவம் அந்தத் துளி இன்பத்தையும் காண விடாமல் தடுத்துவிட்டது. ராஜீவன் யோசித்தான்—'மனிதருக்கு மனிதர் வித்தியாசம் உண்டு. புராணத்தில் வரும்



கோயிலின் கற்படி மீது ஓரமாக நின்று கனவு காண்பவன் போல் தெளிந்து ஓடும் ஆற்றின் மேல் பார்வையைச் செலுத்துவான்.

கொஞ்ச நேரம் சென்றதும் ராஜீவன் திரும்பி ஒரு தடவை யாசிக்கும் பாவனையாக மஹாமாயாவையே பார்த்தான். அவள் தலையை ஆட்டி, "முடியாது. அந்தக் காரியமே உதவாது" என்றாள்.

மஹாமாயாவின் தலையசைவுடன் ராஜீவனுக்கு இருந்த கொஞ்சம் நஞ்சம் நம்பிக்கையும் ஆட்டங்கண்டு குலைந்து போயிற்று. அவள் தான் வகுத்த வழியிலே செல்பவள்; அவளைத் திருப்புவதென்னவோ யாராலும் முடியாத காரியம். குல கௌரவம் பரம்பரையாக அவர்கள் ரத்தத்தில் பெருகி வந்து கொண்டிருக்கிறது. எங்கேயாவது ராஜீவனைப் போன்ற ஒரு படி தாழ்வான பிராம்மணனை அவள் மணக்க விரும்புவாளா, எவ்வளவு அவன்மீது ஆசை இருந்த போதிலும்? காதலுக்கும் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்; இது ஒரு விதம், அது ஒரு விதம்! தன்னுடைய அஜாக்கிரதையால்தான் ராஜீவன் இவ்வளவு தூரத்திற்கு வந்தானென்று மஹாமாயாவுக்கு உறைத்தது. உடனேயே கோயிலை விட்டுப் போக எழுந்தாள். நிலைமை இந்த அளவுக்கு முற்றிவிடவே ராஜீவன் தழு தழுத்து, "நாளைக்கே இந்த ஊரை விட்டுப் போய் விடுகிறேன்" என்றான்.

'என்னிடம் சொல்லுவானேன்? எனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை' என்று சொல்லும் பாணியில் முகத்தைச் சுளிக்க வேண்டுமென்று முதலில் நினைத்தாள் மஹாமாயா. ஆனால் ஏனோ அவ்வாறு செய்யவில்லை. கால் போக மறுத்தது. சாந்தமாகவே "எதற்காக?" என்றாள்.

"எங்கள் துரை ஸோனுபூர் தொழிற்சாலைக்குப் போகிறார். நானும் கூடப் போகத்தானே வேண்டும்?" என்று பெருமூச்சு விட்டான் ராஜீவன்.

மீண்டும் வெகுநேரம் பேச்சின்றி மஹாமாயா நின்றாள். இருவர் வாழ்க்கையும் இரு வேறு திசையே சென்றது. எத்தனை நாள் ஒருவன் மனத்தை இப்படி அலைபாய வைப்பது என்று நினைத்துப் பார்த்துக் கொண்டாள். அழுந்திய உதட்டைத் திறந்து, "சரி!" என்றாள். அந்தச் சொல் நெடுமூச்சு எறிந்ததுபோலவே ஒலித்தது.

இதைக் கூறியதும் அவள் அகன்று போகையில் ராஜீவன் விதிர்த்திட்டு, "ஐயோ, சட்டர்ஜி அவர்கள்!" என்று கூவினான்.

பவானீசரண் எதிரே வந்து கொண்டே இருந்தான். இருவரும் மறைவாகச் சந்தித்ததை அண்ணா கண்டுபிடித்து விட்டானென்று மஹாமாயாவுக்குப் புரிந்தது. அவனுக்கு ஏதாவது சங்கடம் நேரிடுமோவென்று ராஜீவன் இடிந்த கற்குவியல்கள் மீது தாவி மறைந்துகொள்ள ஓடினான். மஹாமாயா அவனை இழுத்துப் போக விடாமல் தடுத்தாள். பவானீசரண் கோயிலுக்குள் நுழைந்ததும் இவர்களை ஒருதரம் முறைத்துப் பார்த்தான்; அவ்வளவேதான்!

மஹாமாயா ராஜீவன் பக்கமாகத் திரும்பி, சிறிதும் கலங்காமல் "நீ போ, உன் பின்னாலேயே வருகிறேன். எனக்காகக் காத்திரு. இதோ வந்துவிடுகிறேன்" என்றாள்.

பவானீசரண் நிழல்போல் கோயிலை விட்டு வெளியே வந்தான். மூச்சுவிடாமலே அவன் பின்னாலேயே சென்றாள் மஹாமாயாவும். ராஜீவன் மூளை குழம்பி நின்ற இடத்தை விட்டுப் பெயராமல் இருந்தான்—தூக்கு தண்டனைக்கு ஆளானவன்மாதிரி.

2

அன்றிரவே பவானீசரண், செந்நிறக் கூறைப்புடவை யொன்றைக் கொண்டு வந்து மஹாமாயாவிடம் கொடுத்து, "இதைக் கட்டிக்கொள்" என்றான். அவளும் கப்சிப்பென்று அதை அணிந்து கொண்டாள்.

"வா, என் பின்னால்" என்று உத்தரவு பிறந்தது. பவானீசரணின் முகக்குறிப்பை மீறி நடப்பவர்களும் உண்டா? மஹாமாயாவினால்கூட முடியாது. அவ்விரவே இருவரும் நதிதீரத்தை நோக்கி நடந்தனர். அங்கே ஒரு கிழப்பிராமணன் இருந்தான். புரோகிதனும் சொல்லி வைத்தாற்போல வந்திருந்தான். பவானீசரண் ஜாடை செய்தான். தாமதமின்றி மணவினை ஆரம்பமாயிற்று. விதியின் கொடுமை! விவாகமான சொற்ப காலத்துக்குள் அவள் கைம்மை பூண்டாள். இந்தத் துயரால் அவள் இடிந்து போய் விடவில்லை. அவளுக்குக் கல்யாணமென்று கேட்டவுடன் திடுக்கிட்ட ராஜீவன் அவள் விதவையான செய்தி வந்தபோது திடுக்கிடவில்லை. இதற்கு மாறாகச் சற்றுப் பூரிப்பே கொண்டான். இந்தத் தனி சந்தோஷமும் வெகு நேரம் நீடிக்கவில்லை. இரண்டாவது வந்த பேரிடியைத் தாளாமல் தரைமீது சாய்ந்தான். பாவம்! மயானத்தில் ஒரே ஜனத்திரள். மஹாமாயா உடன்கட்டை ஏறப்போகும் சமாசாரம் எங்கும் பரவியது.

யாணம் செய்து கொள்வோம்" என்று வெள்ளையாகச் சொன்னானே !

மஹாமாயா நல்ல குலத்தில் தோன்றியவள். வயது இருபது இருக்கும். பருவத்திற் கேற்ற வளர்ச்சியும் வனப்பும் நிரம்பி விளங்கினாள். சரத்கால சூரிய கிரணம்போல் தங்கப் பூரிப்புடைய மேனி. அந்தப் பூரிப்பை எடுத்துக் காட்டும் முகப் பொலிவு. மருட்சியிராத தெளிவான பார்வை கண்களில்.

அவளுக்குத் தந்தையில்லை; பெரிய அண்ணன் ஒருவனே ஆதரவு. அவன் பெயர் பவாநீசரண் சட்டோபாத்யாயர். தமயனும் தங்கையும் உருவத்தில் ஒரே மாதிரி அச்சில் வந்தவர்கள். பவாநீசரண் அதிகமாக யாரோடும் பேசமாட்டான்; பட்டப் பகல் வெய்யில்போல் எரிக்கும் ஒரு தேஜஸ் அவனிடம் இருந்தது. அதனால் அவனிடத்தில் எல்லோருக்கும் பயபக்தி இருந்தது.

ராஜீவன் வெளியூரான். இங்கே இருக்கும் பட்டுத் தொழிற் சாலையின் பெரிய துரை அவனைத் தம்முடன் அழைத்து வந்திருந்தார். ராஜீவனின் தந்தை, இந்தத் துரையின் கீழ் வேலை பார்த்தவர். அவரிடத்தில் துரைக்கு விசுவாசம். இதனால் அவர் இறந்த பின் திக்கற்ற சிறுவனை ராஜீவனை முன்னுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் வாமன்ஹாடி தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தினார். சிறுவனுடன் அவனை அன்போடு வளர்த்த அத்தை மட்டும் இருந்தாள். பவாநீசரணின் வீட்டிற்கு அணித்தாகவே இவர்கள் குடியிருந்த இடமும் இருந்தது. மஹாமாயாவும் ராஜீவனும் இளம் வயது முதல் ஒன்றாக விளையாடியவர்கள். ராஜீவனின் அத்தையிடம் அதிக பாசம் மஹாமாயாவுக்கு.

படிப்படியாக ராஜீவனுக்கு வயசு பதினாறு, பதினேழு, பதினெட்டு முடிந்து பத்தொன்பதாகியது. அத்தை எவ்வளவோ சொல்லியும் அவன் விவாகம் செய்து கொள்ள மறுத்தான். துரை, வங்காளிச் சிறுவனிடம் இத்தகைய உறுதியிருப்பதைக் கண்டு சந்தோஷமே அடைந்தார்; பையன் தன்னையே லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறானென்று நினைத்தார்—துரை விவாகம் செய்து கொள்ளாதவர். இதற்குள் அத்தையும் காலகதியானாள்.

இந்தப் பக்கம் அளவு கடந்த சீர் வரிசைகள் செய்யாது போனால் மஹாமாயாவுக்கு நல்ல வரன் கிடைப்பது அரிதாயிருந்தது. கன்னிப் பருவமும் கடந்துவிடும்போல மடமடவென்று வயசு ஏறிக் கொண்டே வந்தது.

வாசகர்களுக்குச் சொல்வது மிகையே. மணப் பந்தலில் இருவரை ஒன்றாகச் சேர்த்து முடிபோடும் காரியத்தை மறந்து பிரும்மா சற்று உறங்கியிருந்த சமயம் பார்த்துக் கரும்பு வில்லாளி இலக்கு வைத்து இருவர் மனத்தையும் ஒன்றாகப் பிணைத்துவிட்டான்! மன்மதனுடைய சேஷ்டைகள் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமாக வெளிப்படும். மூர்த்தான காதலுரையை இனியாளின் செவியோடு புகல ராஜீவன் சமயத்தை எதிர்பார்த்தான். மஹாமாயாவோ அதற்கு அவகாசமே தரவில்லை. அவளுடைய நிலைத்த பார்வை ராஜீவனுடைய உள்ளத்தில் ஒரு பயத்தைக் கிளப்பி விட்டது.

அன்று அவன் எத்தனையோ ஆணை வைத்ததன் பேரில் மஹாமாயா அந்தப் பாழும் கோயிலுக்கு வர இசைந்தாள். 'இன்று மனதை விட்டு எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லி விடுவதே சரி. வருவது வரட்டும்; ஒன்று இன்பம் இன்பம், இன்றேல் சாதல் சாதல் என்று உருப்போட்டு வந்த ராஜீவன், "வா, நாம் இருவரும் விவாகம் செய்து கொள்ளலாம்!" என்று மொட்டையாகக் கூறி நிறுத்தி விட்டான். பாடத்தை அடியோடு மறந்து போய் விழிக்கும் மாணவனை ஒத்து ராஜீவன் வாயடைத்து நின்றான்.

அவன் இதைப்போன்ற ஒரு பிரஸ்தாபத்தை எடுப்பானென்று மஹாமாயா எதிர்பார்க்கவே இல்லை. வெகு நேரம் கம்மென்று இருந்தாள்.

நடுப்பகலுக்குரிய சில விசித்திரமான ஓசைகள் உண்டு; இவர்களது மோன நிலைக்கிடையே அந்த உருக்கமான ஒலியினங்கள் மெல்லக் கிளம்பின. காற்றின் விசையில் ஒவ்வொரு சமயம் கோயிலின் பொத்தல் கதவு திறந்து மூடிக்கொள்ளும் சப்தம் கேட்கும். கோபுரத்தின் மீது 'கூங் கூங்'கென்று புறாக்கள் கூவும். வெளியிலுள்ள இலவமரத்தின் கிளையொன்றில் 'கொட் கொட்'டென்று மரங்கொத்திப் புள் துளைக்கும் ஓசை; உதிர்ந்த சருகிடையே ஓணான் ஊரும் சலசலப்பு; திடீரெனப் புழுதித் தேர் ஒன்று விரைவாகச் சுழன்று வந்து மரங்களையெல்லாம் அலைப்பும் அரவம்; ஆற்று நீரில் எழும் சிற்றலைகள் படித்துறைமீது 'சளக் சளக்'கென்று மோதி உடையும் ஓசை; முன்னறிவிப்பின்றி எழும் இந்த சப்த ஜாலங்களுக்கிடையே எங்கோ தொலைவில் மர நிழலில் இளைப்பாறும் ஆயச் சிறுவனின் வேய்ங்குழலின் மதுரநாதம் மிதந்து வரும்; மஹாமாயாவை நிமிர்ந்து நோக்கத் திடமிராதவனாய் ராஜீவன்



ரவீந்திரநாத் டாகூர்

தமிழாக்கம்: த. நா. குமாரஸ்வாமி

மஹாமாயாவும் ராஜீவலோசனனும் ஆற்றங்கரை யோரமுள்ள பாழடைந்த கோயில் ஒன்றில் சந்தித்தனர். மஹாமாயா எதுவும் பேசாமல், தனக்கு இயல்பான ஆழ்ந்த பார்வையுடன் கடிந்து கொள்வது போல் ராஜீவனை நோக்கினாள். அதன் கருத்து இதுவே, 'என்ன துணிவு உனக்கு. என்னை இங்கு அழைத்து வந்திருக்கிறாயே; இதுவரை உன் சொல்படி நான் நடந்து வருகிறேனென்ற காரணத்தினால்தானே இவ்வளவு தூரம் உனக்குத் திமிர் ஏறிவிட்டது?'

ஏற்கெனவே ராஜீவனுக்கு அவளிடம் சற்று அச்சம். அவள் பார்த்த பார்வை அவனைக் கலங்கச்செய்துவிட்டது. மனம் விட்டு இரண்டு வார்த்தை அவளுடன் பேசவேண்டுமென்று இருந்தவன் அந்த ஆசையை அக்கணமே விட்டொழித்தான். ஆனாலும் இந்த இடத்தில் அவர்கள் சந்திப்பதற்குத் தகுந்த காரணம் காட்டாது போனால் முடியுமா?

ராஜீவன் பரபரப்புடன், "நான் சொல்லுகிறேன், இந்த இடத்தை விட்டு ஓடிப் போய் நாம் விவாகம் செய்து கொள்ளலாம்" என்றான். ராஜீவன் சொல்ல விரும்பியதை உடைத்துவிட்டதென்னவோ உண்மை; ஆனால் தன் மனத்துள் பூர்வ பீடிகையாக அவன் தொகுத்திருந்த விஷயத்தைத்தான் சொல்ல முடியவில்லை. அவன் பேசியதென்னவோ சுவையற்ற இரண்டொரு வார்த்தையானாலும் கேட்பதற்கு விந்தையாக இருந்தது. தன் வாயாலேயே கூறிவிட்டுத் தானே திடுக்குற்று விழித்தான். மேற்கொண்டு சில ஒழுங்கான சொற்களை அடுக்கி அவளைத் தன் பக்கமாக வளைத்துக் கொள்ளும் சாமர்த்தியம் போதாது அவனுக்கு. ஆற்றங்கரை யோரத்து இடிந்த கோயிலுக்குள் நட்ட நடுப்பகலில் மஹாமாயாவைக் கூட்டி வந்த அந்த முட்டாள், "வா, நாம் கல்

காலே என் தாயார் அவளிடம் "அடி பெண்ணே, உன் புருஷன் மிகவும் வாயாடி. யார் எது சொன்னாலும் 'ஏன்?' 'எப்படி?' 'எதற்கு?' என்றுதான் குதர்க்கம் செய்வான். அவன் வாதத்திற்கு எதிர்வாதம் செய்ய எங்களுக்குத் தெரியவில்லை. நீ படித்த பெண். நீதான் அவன் வாயை அடக்கவேண்டும். உன் சாமர்த்தியத்தைப் பூரணமாக உபயோகித்து அவன் வாயை மாத்திரம் தயவு செய்து அடக்கி விடு. அதற்காகத்தான் படித்த பெண்ணாகிய உன்னை மாட்டுப் பெண்ணாகத் தேர்ந்தெடுத்தேன். மூன்று மாத காலம் இப்படிச் செய்தால்பிறகு சரியாய்ப் போய்விடுவான்!" என்று சொன்னாளாம்.

அதன் பலன்தான் நான் மணமானதிலிருந்து மூன்று மாதமாக அனுபவித்து வரும் வேதனை. ஆனால் இதெல்லாம் என் மனைவிக்கு இஷ்டமில்லை யென்றும் என் தாயார் கட்டாயப் படுத்தியதால்தான் அப்படிச் செய்தாள் என்றும் அவள் சொன்னபோது எனக்கு அவள்மீது அபரிமிதமான அன்பு வழிந்தோடியது. அந்த மூன்று மாத காலம் எப்போது முடியப் போகிறதென்று குஞ்சிதம் நாட்களை விரல்விட்டுஎண்ணிக் கொண்டிருந்தாளாம். அதுவும் இன்று காலையோடு முடிந்து விட்டதாம். இதைக் கேட்ட என் மனம் எப்படி யிருக்கும்!

• • •

அப்போது வாசற் கதவை தடதடவென்று யாரோ தட்டும் சத்தம் கேட்டது. "யார் அது, பூஜைவேளையில் கரடி போல?" என்று சொல்லிக் கொண்டே போன குஞ்சிதம், "ஐயோ! அம்மாவின் குரல்போல அல்லவா இருக்கிறது!" என்று கத்திவிட்டாள். ஒரு வினாடி எனக்கு உலகமெல்லாம் சுழன்றது. ஆனால் சட்டென்று சமாளித்துக்கொண்டு, வேகமாக மேலே போய் கட்டிலில் படுத்துக்கொண்டு போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு விட்டேன்.

சிறிது நேரம் கழித்து என் தாயாரும் குஞ்சிதமும் மேலே வருவது தெரிந்தது. என் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"ஆபீஸுக்குப் போகும்போதே தலையை வலிக்கிறது என்று சொன்னார். நான் போகவேண்டாம் என்றேன். கேட்டால்தானே? நடந்துபோன அதிர்ச்சியில் உடம்பு அதிகமாகி விட்டது. நல்ல வேளை ஆபீஸ் சிநேகிதர்கள் ரிக்ஷாவில் அழைத்துக் கொண்டுவந்து விட்டுப் போனார்கள்" என்று குஞ்சிதம் என் தாயாரிடம் விவரித்துக் கொண்டே வந்தாள்.

என் மனதில் குஞ்சிதத்தின்மீது நன்றி உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடியது. என்ன இருந்தாலும் படித்த பெண்ணென்றால் படித்த பெண்தான். என்ன பொருத்தமான காரணம்! இந்த நிலைமையில் படிக்காத பெண்ணாயிருந்தால் கைகளைப் பிசைந்து கொண்டு விழித்துக் கொண்டிருப்பாள். குட்டு வெளிப்பட்டிருக்கும்!

"ஏண்டாப்பா, ஆபீஸுக்குத்தான் போகவேண்டாம் என்றாளே, நீ ஏன் போய் உடம்பை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும்? நல்ல வேளையாக பஸ் தவறிப் போய் விட்டது. அதனால் ஊருக்குப் போக முடியவில்லை. நான் மட்டும் இப்போது வராவிட்டால் குஞ்சிதம், பாவம், தவித்துப் போயிருப்பாள். நான் போய் கஷாயம் போட்டுக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கினாள் என் தாயார்.

நான் கண்ணைக் கெட்டியாக மூடிக் கொண்டு விட்டேன்.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து யாரோ வருகிற காலடியோசை கேட்டது. "சரி, நம் தலைவிதி, கஷாயத்தைக் குடிக்க வேண்டும் போலிருக்கிறது!" என்று பல்லைக் கடித்துக் கொண்டேன். நல்ல வேளை, குஞ்சிதம்தான் வந்தாள்.

"குஞ்சிதம், நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும்! அம்மா கஷாயத்தைக் கொடுத்தால் அதை நீயே இங்கு கொண்டு வந்து குடித்துவிடு; அல்லது தூரக் கொட்டிவிடு" என்றேன் தீனக்குரலில்.

"பயப்படாதீர்கள்! அதை அப்போதே கொட்டிவிட்டேன்!" என்றாள் அவள்.

குஞ்சிதத்துக்கு எப்படி என் நன்றியைத் தெரிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை.

"அம்மா, என்ன செய்து கொண்டிருக்கிறாள்?" என்று கேட்டேன் நான்.

"அம்மா மறுபடியும் ஒரு மணி பஸ்ஸுக்குக் கிளம்பிப் போய் விட்டார்! திரும்பி வருவதற்கு இரண்டு வாரம் ஆகும் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். ஆனால்......"

"என்ன? சொல் சீக்கிரம்!"

"ஆனால், உங்கள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்!" என்று சொன்னபோது அவள் முகம் 'குப்'பென்று சிவந்தது!

இப்போது படித்த பெண்களைப் பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயம் மாறி விட்டது. இந்த மூன்று மாத ரகசியத்தை நான் பாலுவிடம் சொன்னேன். அவன் நான் சொன்னது எதையும் நம்பவில்லை.

டிபன் பொட்டலம் முதலியவற்றை எடுத்துக் கொடுத்தான்.

"நான்தான் திரும்பி வரப் போகிறேனே, இதெல்லாம் எதற்காக?" என்று கேட்டேன்.


"உஸ்! சத்தம் போடாதீர்கள்! மேழ அம்மா காதில் விழப்போகிறது. நீங்கள் இப்போது ஆபீஸுக்குப் போகிறாப் போலப் போய், அம்மா போன பிறகு திரும்பிவிட வேண்டும். லீவு எடுக்கும் விஷயம் அம்மாவுக்குத் தெரியக்கூடாது" என்று காதோடு சொன்னாள்.

என்ன சாமர்த்தியம்! என்ன யுக்தி!

உற்சாகத்துடனும் ஆனந்தத்துடனும் ஆபீஸுக்குக் கிளம்பினேன். புதிதாக மணம் புரிந்த தம்பதிகளுக்கு யாருடைய தொந்திரவும் இல்லாமல் உல்லாசமாக வாழ்க்கை நடத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் ஏன் சந்தோஷமாக இராது!

[illegible]றொரு மணிக்கெல்லாம் வீடு திரும்பி விட்டேன். குஞ்சிதத்தின் முகத்தை வாயிற்படியில் பார்த்ததுமே என் தாயார் கிளம்பிப்போய் விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டேன். நான் வீட்டில் நுழையு முன்பே என் கையிலிருந்த டிபன் பொட்டலம், பிளாஸ்க், கோட் முதலியவைகளைப் பிடுங்கிக்கொண்டு விட்டாள். எனக்குக் காப்பி தயாராக வைத்திருந்து கொடுத்தாள். எனக்கு இல்லாத உபசாரங்களெல்லாம் செய்தாள். "தலையை வலிக்கிறதோ?" என்றாள். "நடந்து வந்ததால் காலை நோகிறதா?" என்றாள். "அடாடா! இவ்வளவு நல்ல பெண்ணா இவ்வளவு வாயாடியாக இருந்தாள்!" என்று நம்பக்கூட முடியவில்லை. ஆனால் அவள் சொன்ன ரகசியத்தை மறுபடியும் நினைத்தபோது எனக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

அந்த ரகசியத்தின் மூலகர்த்தாவான என் தாயாரை இலேசில் விடுவதில்லை என்று தீர்மானித்தேன். குஞ்சிதம் சொன்ன ரகசியம் இதுதான். குஞ்சிதம் மணமாகி என் வீட்டிற்கு வந்த மறு



தோல்வி யடைந்தாலும் அதைக் கவனிக்க யாரும் இருக்கமாட்டார்கள் என்ற எண்ணம் எனக்கு தைரியத்தை அளித்தது.

என்னுடைய திட்டம் என்னவென்பதை இப்போதே சொல்லிவிடுகிறேன். காலை பத்து மணிக்கு என் தாயார் ஊருக்குப் புறப்பட்டு விடுவாள். நான் வழக்கம் போல ஆபீஸுக்குப் போய் விட்டு சாயங்காலம் வீடு திரும்புவேன். ஆனால் இரவு எட்டு மணிக்கு வெளியே போய் விட்டு நடு நிசி ஒரு மணிக்கோ இரண்டு மணிக்கோதான் திரும்புவேன். வீட்டில் வேறு யாரும் இருக்கமாட்டார்கள். ஆகையால், அவள் தனியாக இருக்கப் பயப்படுவாள். என்னை வெளியில் போக வேண்டாமென்று கெஞ்சுவாள். நான் மறுப்பேன். அவள் காலில் விழுந்து வேண்டுவாள். பெண்மை தோல்வியடையும். நான் ஜயிப்பேன். இதுதான் என் திட்டம்.

திங்கட்கிழமை காலை. நான் வழக்கம் போல சாப்பிட்டு விட்டு, குஞ்சிதத்தை வம்புக்கு இழுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், "ஆபீசுக்குப் போய் வருகிறேன்" என்றேன்.

"ஏன்?"

"ஏனா? ஆபீசுக்குப் போனால் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வேறு யாரிடம் சொல்லிக் கொள்வது?"

"உங்கள் கேள்வியை இரண்டு பாகமாகப் பிரித்து என் பதிலையும் கேள்விகளாகத்தான் கேட்கப்போகிறேன். முதலில் நீங்கள் இப்போது ஆபீசுக்குத்தானே போகப் போகிறீர்கள்? மார்க்கெட்டுக்குப் போகப் போவதில்லையே?— அப்படியிருக்கும் போது, 'ஆபீசுக்குப் போய் வருகிறேன்' என்று ஏன் சொல்ல வேண்டும்? இரண்டாவது, 'உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் யாரிடம் சொல்லிக் கொள்வது?' என்கிறீர்கள். இந்த வீட்டில் என்னைக் கேட்டுக் கொண்டு என் இஷ்டப்படிதான் எல்லாம் நடக்கிறதோ? உங்கம்மாவிடம் சொல்லிக்கொண்டு போங்களேன்!"

"நீ இஷ்டப்பட்டு எது நடக்கவில்லை?"

"சரி, இப்போது நீங்கள் ஆபீசுக்குப் போக வேண்டாமென்பது என் இஷ்டம்!"

நானே அவளைக் கேள்வி கேட்கும் நிலைமை வந்தது பற்றி எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.

"ஏன்?"

"ஏனா? இன்னும் சிறிது நேரத்தில் அம்மா கிளம்பிப் போய் விடுவார். அப்போது இந்த வீட்டில் நான்தான் தனியாக இருக்க வேண்டும். எனக்குப் பயமாக இருக்காதா?"

எனக்கு உற்சாகம் தாங்கவில்லை. பகலிலேயே தனியாக இருக்கப் பயப்படுகிறவள் இரவில் கண்டிப்பாகத் தனியாக இருக்க மாட்டாள். என் காலில் கட்டாயம் விழத்தான் போகிறாள். இதுவரை நான் அடைந்த தோல்விகளுக்குப் பழி வாங்க இது ஒன்றே போதும். இப்போது அவளை நன்றாக அழ வைத்து வாயைத் திறக்க முடியாமல் செய்துவிட வேண்டும். இப்படி நான் எண்ணியபோது வெற்றிக் களை என் முகத்தில் தாண்டவமாடியது. ("எப்படி?" என்று குஞ்சிதத்தைப் போலக் குறுக்கே கேட்காதீர்கள்.)

"அசடே! உன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாவிட்டால் உனக்குப் படித்த பெண் என்ற பெயர் எதற்கு? கதவை உள் பக்கம் இழுத்துப் பூட்டிக் கொள். பட்டப் பகலில் திருடன் யாரும் வரமாட்டான். நான் கட்டாயம் ஆபீசுக்குப் போகத்தான் போகிறேன்."

இப்படி நான் சொன்னபோது குஞ்சிதத்தின் கண்கள் கலங்கின. அதைக் கண்டு எனக்குச் சந்தோஷம் உண்டானாலும் அவள் கண்ணீர்த் துளிகளைக் கண்டதும் மனம் இளகிவிட்டது. அதோடு என்னுடைய திட்டத்தை அன்று இரவு நடத்தினால் வெற்றி கண்டிப்பாக எனக்குத்தான் என்று இப்போதே தெரிந்துவிட்டது. ஆனால் காலையில் குஞ்சிதம் தனியாக இருந்து பழகிவிட்டால் இரவிலும் குருட்டுத் தைரியத்தால் தனியாக இருந்தாலும் இருப்பாள் என்று நினைத்தபோது, அந்த நிலைமைக்கு அவளை விடக்கூடாது என்று எண்ணினேன். ஏனென்றால் அவள் தனிமைக்குப் பயப்படுவதில் தானே என் வெற்றியின் ரகசியமும் அடங்கியிருக்கிறது! ஆகையால், ஆபீஸுக்கு லீவு சொல்லிவிட்டு மறுபடியும் திரும்பி விட்டால் இரவு கண்டிப்பாக என் திட்டத்தை நிறைவேற்றலாமென்று எண்ணிக் கிளம்பியபோது எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

குஞ்சிதம் திடீரென்று பாய்ந்து வந்து என் கையிலிருக்கும் டிபன் பொட்டலம், பிளாஸ்க், கோட் இவைகளைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள். பிறகு அருகே வந்து ரகசியமாக என் காதில் ஒரு விஷயத்தைச் சொன்னாள். அதைக் கேட்டு எனக்கு அளவுக்கு மீறிய கோபம் உண்டாயிற்று. ஆனால் குஞ்சிதத்தின் கண் சுழலில் அகப்பட்டுக் கொண்டபோது என் கோபமெல்லாம் பறந்தோடி விட்டது. நேராக ஆபீஸுக்குப் போய் லீவு பெற்றுக் கொண்டு உடனே திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். குஞ்சிதம் என் கோட், பிளாஸ்க்,

தான். பாபுவின் மாமி கூட முகத்தைச் சுருக்காமல் பாபுவின் வரலாற்றைக்கேட்டாள்.

அடுத்த நாள் பாபு தன் தாயாருடன் ஊருக்குக் கிளம்பத் தயாரானான்.



"மாமா! இன்று ஊருக்குப் போகப் போகிறோம்" என்றான் பாபு.

"அது என்னமோ, எனக்குத் தெரியாது. உன் மாமி உன்னை இங்கேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து விட்டாளாம். அவளைக் கேட்டுக்கொண்டு உன் இஷ்டம்போல் செய்!" என்றார் அவர்.

பாபு மாமியிடம் போனான். பின்னொடு பிரமீளாவைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றான்.

"மாமி! நான் எங்கள் அம்மாவுக்கு ஒரே பிள்ளை! என்னை இங்கே விட்டுச் செல்ல அவனுக்கு இஷ்டம் இல்லை. அதற்குப்பதிலாக இந்தப் பிரமீளாவை வளர்த்தால் புண்ணியம் உண்டு" என்று பாபு சொல்லி விட்டு மாமி முகத்தைப் பார்த்தான்.

"சரி, பாபு!" என்று மாமி சொல்லி விட்டுப் பிரமீளாவைத் தன்னருகே அன்புடன் அழைத்துக் கொண்டாள்.

டிராயர் பையில் போட்டு வைத்திருந்த ஊதலை எடுத்து அவன் ஊதினான். "ரைட்! 'பாபுவண்டி' சொந்த ஊருக்குக் கிளம்பி விட்டது" என்றான். இஞ்ஜின் புகை விடுவதுபோல 'குப் குப்' பென்று வாயால் சொல்லிக் கொண்டே தன் அம்மா இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

பிரமீளா பாபுவைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். **(முற்றும்)**

மேதாவிக் குமாஸ்தா

ஒரு வாலிபன். வயது இருபது இருக்கும். ஒரு நாள் அவன் சில நோட்டுப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் கணக்குப் புரொபஸர் ஸ்ரீ சேஷு ஐயரிடம் சென்றான்.

ஸ்ரீ ஐயர் அவனைப் பார்த்து, "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

வாலிபன் மிக்க அடக்கத்துடன் அவரைப் பார்த்து, "நான் கணிதத்தில் சில ஆராய்ச்சிகள் செய்திருக்கிறேன். அவற்றைத் தாங்கள் பார்க்க வேண்டும்" என்றான்.

ஸ்ரீ ஐயர் அந்த வாலிபனை மேலும் கீழும் பார்த்தார். கிழிந்த கோட்டு அணிந்திருந்தான் அவன். "இவனா கணித ஆராய்ச்சி செய்திருக்கிறான்?" என்பதை நினைத்தபோது அவருக்குச் சிரிப்பு உண்டாயிற்று. ஆனால் அதை அடக்கிக் கொண்டு, "கொடுத்து விட்டுப் போ. நான் பார்க்கிறேன்" என்றார். வாலிபன் தன் நோட்டுப் புத்தகங்களை அவரிடம் கொடுத்து விட்டுப் போனான்.

புரொபஸர் சேஷு ஐயர் அன்று மத்தியானம் சாப்பிட்ட பிறகு மேற்படி நோட்டுப் புத்தகங்களை எடுத்து அலட்சியமாகப் பார்த்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம் உண்டாகி விட்டது. எவ்வளவு பிரம்மாண்டமான கணக்குகள்! எவ்வளவு சூக்ஷ்மமான ஆராய்ச்சி! பிரமித்துப் போனார் அவர்.

அன்று மாலை அந்த வாலிபன் வந்தான். புரொபஸர் அவனை அன்புடன் வரவேற்றார்.

"என் கணக்குகளைப்பார்த்தீர்களா?" என்று கேட்டான் அவன் பணிவாக.

"பார்த்தேன். கணித சாஸ்திரத்தில் இதுவரை கண்டு பிடிக்காத பல உண்மைகளை நீ கண்டு பிடித்திருக்கிறாய்" என்றார் புரொபஸர்.

இளைஞனின் முகம் மலர்ந்தது.

"தம்பீ, நீ எங்கே இருக்கிறாய்?" என்று கேட்டார் புரொபஸர்.

"போர்ட் டிரஸ்டில் ஒரு குமாஸ்தாவாக இருக்கிறேன்" என்றான் அவன்.

"நீ சீக்கிரத்தில் உலகப் பிரசித்தம் அடைவாய்" என்றார் புரொபஸர்.

அவர் சொன்னது பலித்துவிட்டது. அந்த வாலிபன்தான் பிற்காலத்தில் கணித மேதாவியாக விளங்கிய ஸ்ரீ ராமானுஜம்.

மூன்று மாத ரகசியம்

எம்.எஸ்.எம்.

போன வாரம் என் நண்பன் பாலு தன் பரிவாரங்களோடு பெண் பார்க்கப் போனபோது ஒரு விசேஷம் நடந்ததாம். எல்லா சம்பிரதாயங்களும் முடிந்த பிறகு பெண்ணின் தகப்பனார் பாலுவிடம் ஏதோ சொன்னாராம். உடனே பாலு, "ஐயோ, படித்த பெண்ணா? வேண்டவே வேண்டாம்!" என்று கத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தவன் தன் வீட்டில் போய்த்தான் நின்றானாம்.

இப்போது எனக்கும் பாலுவிற்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான்! அவனுக்கு கல்யாணமாகு முன்பே படித்த பெண்ணைப் பற்றி பயமாயிருக்கிறது. எனக்கோ கல்யாணமான பிறகு படித்த பெண்ணென்றால் குலை நடுக்கமாயிருக்கிறது.

குஞ்சிதத்தை முதன் முதலில் பார்த்தபோது அவளுடைய நாசூக்கையும் நாகரிகத்தையும் கண்டு மயங்கி விட்டேன். அவள் வாயைத் திறந்து மாத்திரம் ஒரு வார்த்தை பேசியிருந்தால் அவள் எவ்வளவு வாயாடி என்று தெரிந்து கொண்டிருப்பேன். ஆனால், அவள் அப்போது வாயைத் திறந்தால்தானே! ஹும்! இப்போது அதை நினைத்து என்ன பயன்? எங்கள் வீட்டில் நான்தான் வாயாடி என்ற நிலைமை போய், "இதைக் கேட்டயாடி கூத்தை! இவன் 'ஏட்டி' யென்றால் அந்தப் பெண் 'போட்டி' என்கிறதாம்! அது கேட்கிற கேள்விக்கும் பண்ணுகிற பிடிவாதத்திற்கும் அளவே இல்லையாமே! இந்தப் பிள்ளை திக்பிரமையடைந்து பேச முடியாமலிருக்கிறதாமே!" என்று என் மீது மற்றவர்கள் அனுதாபப் படும்படியான நிலைக்கு வந்து விட்டேன்.

ஒரு நாள் காலை அவளிடம் "பசிக்கிறது" என்றேன்.

"யாருக்கு?" என்று கேட்டாள் அவள்.

"எனக்குத்தான். வேறு யாருக்காவது பசித்தால் நான் ஏன் சொல்லுகிறேன்?"

"ஏன் சொல்லக் கூடாது?"

"எப்படி?"

"வாசலில் யாராவது பிச்சைக்காரன் வந்து கொஞ்சம் சாதம் கேட்டிருப்பான். அவனுக்குப் பசிக்கிறது என்று ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?"

"காலை ஒன்பதரை மணிக்கு எந்தப் பிச்சைக்காரன் வருவான்?"

"ஏன் வரமாட்டான்? பிச்சைக்காரன் பசிக்கு வேளை—நேரம் உண்டா?"

"சமையல் ஆகவில்லையென்று சொல்லேன்! அதை மறைத்து இப்படிக் கொஞ்சம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தால் அதற்குள் சமையல் தயாராகிவிடும் என்று நினைக்கிறாயோ? படித்த பெண் என்று பெயர்தான். மூன்று பேருக்குச் சமைக்க நாலு மணி நேரமாகிறது. என் அம்மா மட்டும் சமையலறையில் புகுந்தால் எட்டு மணிக்கே சமையலாகியிருக்கும்......"

இப்படி நான் சொல்லும் போது குஞ்சிதம் விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஐயோ, சமத்தே! சமைக்கிறது உங்கம்மாதான்! விடியற் காலை சமையற்கட்டில் புகுந்தவர் இன்னும் வெளியே வரப்போகிறார்! இத்தனைக்கும் நான் கூடமாட ஒத்தாசை வேறு செய்திருக்கிறேன்!" என்று சொல்லி விட்டு கழுத்தை ஒரு 'வெட்டு' வெட்டிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

அவளுடன் பேசிப் பேசி ஒவ்வொரு தடவையும் கடைசியில் நான் பதில் சொல்லத் தெரியாமல் திண்டாடியதால் எனக்கு மேலும் மேலும் தன்னம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது. குஞ்சிதத்திற்கோ உற்சாகம் அதிகரித்துக் கொண்டே வந்தது. எப்படியாவது குஞ்சிதத்தைப் பேச்சில் மடக்கி, என் வெற்றியையும் அதனால் புருஷ வர்க்கத்தின் பெருமையையும் நிலை நாட்ட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தேன். இதற்குத் தகுந்த நாளையும் நேரத்தையும் எதிர்பார்த்திருந்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. என் தாயார் மறுநாள் காலை பக்கத்து ஊரிலிருக்கும் தன் பெண்ணைப் பார்த்து விட்டு அடுத்த நாளே திரும்பி வந்து விடுவதாகத் தெரிவித்திருந்தாள். குஞ்சிதம் இதை வரவேற்றதாகத் தெரிந்தது. ஏனென்றால் கல்யாணமானதிலிருந்து தனியாக நாங்கள் இருவரும் குடித்தனம் நடத்தியதில்லை. இந்த மூன்று மாதகாலமாக ஒரு நாள்கூட என் தாயார் எங்களை விட்டுப் பிரிந்ததில்லை. என் தாயாரின் உதவி குஞ்சிதத்திற்கு வேண்டியிருந்தாலும், ஒரு நான்கு நாளைக்காவது பூரண சுயேச்சையாக இருக்க விரும்பினாள் அவள். என்னுடைய திட்டத்தை நடத்தி வெற்றிகரமாக முடித்துக் காட்ட இதுதான் மிகவும் சரியான தருணமென்று பட்டது எனக்கு.

அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். "என்ன ? உன் பேர் பாபுவா ?" என்று பரபரப்புடன் கேட்டு விட்டு, "வண்டிக்காரா ! அந்த விளக்கை இப்படிக் கொடு" என்றார். வண்டிக்காரன் விளக்கை எடுத்துக் கொடுத்தான். அவர் அதை பாபுவின் முகத்திற்கு நேராகத் தூக்கிப் பிடித்து கூர்ந்து பார்த்தார். "ஹா ! பாபு !" என்று கத்திவிட்டார்.

அவர்தான் பாபுவின் மாமா !

வண்டிக்காரன் பிரமித்தான். பிரமீளா அதற்கு மேலே பிரமித்தாள். பாபு எல்லோரைக் காட்டிலும் ரொம்ப ரொம்பப் பிரமித்தான். "மாமா இங்கே எங்கே வந்தார் ?" என்று அவனுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது.

10. 'போய் வருகிறேன் !'

எங்கேயோ வியாபார விஷயமாகக் கோயம்புத்தூருக்கு வந்த இடத்தில் புதையல் அகப்படுவது போலத் தன் கெட்டுப் போன மருமான் பாபு அகப்படுவான், ஒரு குதிரை வண்டி அவனைத் தேடிக் கண்டு பிடித்துத் தன்னிடம் கொண்டு வந்து விடும் என்று பாபுவின் மாமா எதிர்பார்த்திருப்பாரா, என்ன ?


அவருக்கு உணர்ச்சி மேலிட்டு விட்டது. தன் முன்னால் நிற்பது பாபு தானா என்று மீண்டும் மீண்டும் பார்த்தார். "ஏண்டா பாபு, என்னடா இது ? இப்படி எங்களை எல்லாம் தவிக்க விட்டுப் போகலாமா? உன்னைப் பாராமல் உன் அம்மா ஒரே ஏக்கமாகப் படுத்த படுக்கையில் கிடக்கிறாளே !" என்றார். ஒரு பெரிய வேதனை நீங்கிவிட்டது போல இருந்தது அவருக்கு.

வந்த வேலையை அப்படியே போட்டு விட்டு மறுநாளே மருமானையும் பிரமீளாவையும் அழைத்துக் கொண்டு சென்னையை அடைந்தார்.

பாபு, பிரமீளா, மாமா எல்லோரும் மாம்பலம் வீட்டிற்குள் நுழைந்தார்கள். "அம்மா !" என்று கூப்பிட்டுக் கொண்டே ஓடினான் பாபு.

"பாபு ! பாபுதானா நீ ? திரும்பி வந்தாயா ? எல்லாம் அந்த மூக்குறுணிப் பிள்ளையாரின் கருணைதான். எங்களை விட்டு எங்கேடா போய்விட்டாய் ?" என்று பாபுவின் அம்மா தன் அருமைப் பிள்ளையை ஆசையுடன் தழுவிக் கொண்டே கேட்டாள். ஒரு மாதகாலமாக ஏக்க வியாதியில் விழுந்து கிடந்தவளுக்குப் பாபுவைக் கண்டதும் புது பலமும் தெம்பும் வந்து விட்டன. வியாதி போன இடம் தெரியவில்லை.

மாமா, மாமி, இன்னும் எதிர் வீட்டிலிருந்து சிலர் எல்லோரும் பாபுவைச் சூழ்ந்து கொண்டனர். பாபு தான் எக்ஸிபிஷனுக்குப் போனது முதல் கடைசிவரை ஒரு விஷயத்தைக்கூட விடாமல் சொன்னான். கேட்டவர்கள் பிரமித்துப் போனார்கள். கடைசியில் "இந்தப் பிரமீளா — பாவம் ரொம்ப நல்லவள் ! எனக்குத் தங்கையாக இருந்துவிட்டுப் போகட்டும்" என்று சொல்லி முடித்



இது ஒரு நிலத்தின் பிளான். இதில் 4 வீடுகளும் 4 மரங்களும் இருக்கின்றன. இதை நான்கு பேருக்குச் சமமாகப் பங்கிட வேண்டும். ஒவ்வொருவனுக்கும் தன் நிலத்தில் ஒரு வீடும் ஒரு மரமும் இருக்க வேண்டும். அப்படிப் பங்கிட முடியுமா ?

சென்ற வாரப் புதிருக்கு விடை : 9·17

பக்கத்தில் ஒரு பெரிய தகர உருளை கிடந்தது. அதைப் புரட்டிக் கொண்டு ஓடி வந்தான். சுவர் அருகே வைத்தான். அதன் மீது சில செங்கல் கற்களை அடுக்கினான். பிரமீளாவை அதன் மீது ஏறி நிற்கச் சொன்னான். பாபு ஒரே தாவாகத் தாவி, சுவரின் மீது நின்று கொண்டு, அவளைக் கைகளை உயரே நீட்டச் சொன்னான். தன் கைகளினால் அவளது கைகளைக் கோத்துப் பிடித்து பலம் கொண்ட மட்டும் மேலே தூக்கினான். பிரமீளா தட்டுத் தடுமாறி அவன் அருகே வந்து விட்டாள். 'பொத்'தென்று இருவரும் வெளியே குதித்தார்கள். அவர்களுடைய நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. 'யாராவது பார்த்து விட்டால்? ரோந்துப் போலிஸ்காரன் கண்டு பிடித்துக் கொண்டு போய் விட்டால்?' — என்று பயம் அவர்களைக் கவ்விற்று. அசட்டுத் தைரியத்தில் விறு விறு வென்று தெருவில் நடந்தார்கள்.

நடந்தார்கள்; நடந்தார்கள்; நடந்து கொண்டே இருந்தார்கள். கட'கடவென்று சத்தம் கேட்டது. "ஐயோ பயமாக இருக்கிறதே!" என்று பிரமீளா பாபுவைக் கட்டிக்கொண்டாள்.

இடி இடித்தது; மின்னல் மின்னிற்று; பெரு மழை பெய்தது.

9. வெளிச்சம் தெரிந்தது!

கொட்டும் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு ஓடினார்கள். 'பளிச்'சென்று மின்னிற்று. அந்த வெளிச்சத்தில் ஒரு கட்டிடம் தனியாக இருப்பது தெரிந்தது.

அது வழிப்போக்கர்கள் தங்குமிடம். சுற்றி எங்கு பார்த்தாலும் வீடோ வாசலோ இல்லை. அந்த இடத்திற்கு ஓடிச் சென்று பாபுவும், பிரமீளாவும் பதுங்கிக் கொண்டார்கள். சற்று நேரம் கழிந்தது. தூரத்தில் 'மினுக்' 'மினுக்' கென்று ஒரு வெளிச்சம் தெரிந்தது.

"என்ன வெளிச்சம்?" என்று கேட்டாள் பிரமீளா.

ஒரு குதிரை வண்டி மெதுவாக வந்து அவர்கள் இருந்த வீட்டை அணுகியது.

பாபு வண்டியில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, "ஸார்! எங்களையும் ஏற்றிக் கொள்ளுங்கள். குளிர் நடுக்குகிறது. உடம்பு முழுவதும் நனைந்து விட்டது" என்று கெஞ்சினான்.

ஒரே இருட்டு; ஒருவர் முகம் இன்னொருவருக்குத் தெரியாத இருட்டு.

நல்ல வேளை, வண்டியில் இருப்பவருக்கு அவர்கள் மீது இரக்கம் உண்டாயிற்று.

"சரி, ஏறிக்கொள்ளுங்கள்" என்றார் அவர்.

பாபுவும் பிரமீளாவும் குடுகுடுவென்று ஓடிப் போய் மகிழ்ச்சியுடன் வண்டியில் ஏறிக் கொண்டனர்.

வண்டி போய்க் கொண்டிருந்தது.

"பையா, உன் பெயர் என்ன?" என்று கேட்டார் அவர்.

"என் பெயர் பாபு; இவள் பெயர் பிரமீளா!" என்று சொல்லி நிறுத்தினான் பாபு.





பிரமீளா ஆச்சரியத்துடன் பாபுவைப் பார்த்து, "நீ என்ன முடிவுக்கு வந்திருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"இங்கிருந்து நாம் கிளம்பிவிட வேண்டும். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் பாபு.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் இப்போதே புறப்படுவதா?" என்று கவலையுடன் கேட்டாள் பிரமீளா.

"ஆமாம், இனிமேல் ஒரு நிமிஷங் கூட என்னால் இங்கே இருக்க முடியாது" என்றான் பாபு.

"எங்கே போவது?" என்று கேட்டாள் பிரமீளா.



"எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஆனால் இங்கே இருக்க மாத்திரம் என்னால் முடியாது!"

"சரி!"

இருவரும் எழுந்தார்கள். அப்போது இரவு மணி பன்னிரண்டு. பக்கத்து அறையில் வக்கீல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். தூரத்தில் எங்கேயோ ஒரு நாய் மட்டும் குலைத்துக் கொண்டிருந்தது.

பாபு பூனைபோல அடிமேல் அடி எடுத்து வைத்து வாசற்புறக் கதவு அருகே போனான். பிரமீளா அவன் கையைப் பிடித்துக் கொண்டே சென்றாள். சத்தமின்றி மிகச் சிரமப் பட்டுக் கதவைத் திறந்தான் பாபு. வாசலுக்கு வந்து விட்டான்.

ஆனால் அந்தக் காம்பவுண்டுச் சுவரைச் சுற்றியுள்ள பெரிய 'கேட்'டுக் கதவைத் தாண்ட வேண்டுமே! அந்தக் கதவு உட்பக்கம் பூட்டி இருந்தது.

அது வரையில் அடி மீது அடி எடுத்து வைத்து நடந்து வந்த இருவரும் அங்கே வந்து தயங்கினார்கள். பாபு, கதவு விளிம்பில் காலை வைத்துத் தாண்டிக் குதித்து விடுவான். ஆனால் பிரமீளா? கம்பி மீது பயமில்லாமல் நடமாடினாலும் இந்தச் சுவர் தாண்டும் பழக்கம் அவளுக்கு இல்லையே! பாபு அவளை எப்படி மீட்பது என்று தயங்கினான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே மோட்டார் ஷெட்டுக்குப்

மையே அடக்கிக்கொள்ள முடியாது. அடக்கிக்கொள்ள முடியாதா? ஆம், எவ்வளவோ முயன்று பார்த்தும் அடக்கிக்கொள்ள முடியவில்லையே! அப்படியானால் கட்டாயம் அதப் பாதாளத்தில் விழுந்துதான் தீரவேண்டுமோ? விழுவதா? அது எப்படி? எப்படியாவது நாம் நம்மைக் காத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாமா? கட்டாயம் முயற்சித்துத்தான் ஆகவேண்டும்" என்று இவ்வாறு தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் குமாரகிரி.

அவனுடைய கால்கள் அவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவது போலக் காரிருளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. எதிரே சூழ்ந்திருந்த காரிருளைப் போலவே அவனுடைய உள்ளத்திலும் கரிய இருள் சூழ்ந்திருந்தது. அவன் இம்மாதிரிச் சிந்தனையில் லயித்தவாறே குடிசையிலிருந்து வெகுதூரம் சென்று விட்டான்.

அப்பொழுது திடீரென்று அவனுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து, "அப்படியானால் நீ ஒரு பேடியா?" என்று யாரோ கேட்பது அவன் காதுகளில் விழுந்தது.

"ஏன்? என்னைப் பார்த்தால் உனக்கு அப்படித் தோன்றுகிறதா?" என்று திருப்பிக் கேட்டான் குமாரகிரி.

"ஆம், எங்கேயோ நீ வெகு வேகமாகப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறாயே? எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது அந்தக் குரல்.

"இனி இந்த இடத்தில் ஒரு கணமும் நான் இருக்க முடியாது. இருந்தால் என் மானம் போய்விடும்" என்றான் குமாரகிரி.

"என்ன? தன் பலவீனத்தை வெற்றி கொள்ளுவது அல்லவா மாபெரும் சாதனையாகும்? உன்னால் உன்னையே வெற்றி கொள்ள முடியவில்லையென்றால் உன்னை அபூர்ணமானவன், பரிபக்குவம் அடையாதவன் என்றுதான் சொல்ல வேண்டும். நீ உன்னையே வெற்றி கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே சித்திரலேகா உன்னை நாடி வந்திருக்கிறாள்! எங்கேயோ புறப்பட்டு விட்டாயே! சித்திரலேகாவைக் கண்டு நீ பயந்து சாகிறாயா, என்ன? சித்திரலேகா 'உன்னைக் கெட்டுப் போ, கீழே விழுந்து அதப் பாதாளத்தில் அழுந்திப் போ' என்று எப்பொழுதாவது சொன்னாளா? அவள் இதுவரை அப்படிச் சொன்னதாகத் தெரியவில்லையே! ஆகவே நீ தன் நிழலைக் கண்டு தானே பயந்து சாகிறாய் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. பலவீனம் உன்னிடத்தில்தான் இருக்கிறது. அதைப் போக்கிக் கொள்ள முயற்சி செய். சாதனை உன்னிடத்தில் வேண்டிய மட்டும் இருக்கிறது. சாதனையில் தைரியமாக இறங்கு. முயற்சி திருவினையாக்கும். நீ பேடி போல எங்கே புறப்பட்டுவிட்டாய்?" என்று கேட்டது இதயத்தின் ஆழத்திலிருந்து வந்த அந்தக் குரல்.

குமாரகிரி சட்டென்று நின்றான். "சரி, அப்படியானால் அப்படியே ஆகட்டும்!" என்று மனதுக்குள் மிகவும் மெதுவாக முணுமுணுத்துக் கொண்டான். பிறகு தன் குடிசையை நோக்கித் திரும்பி நடந்தான்.

அவன் குடிசைக்குள்ளே பிரவேசித்த பொழுது சித்திரலேகா தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் கன்னங்களின் வழியே வழிந்திருந்த கண்ணீர் உலர்ந்திருந்தது. ஆயினும் கண்ணீர் வழிந்திருந்த இடங்களிலே கரைபோலக் கோடுகள் மட்டும் காணப்பட்டன.

குடிசையில் நுழைந்த குமாரகிரி நேரே சித்திரலேகாவின் தலைமாட்டில் போய் நின்றான். பிறகு சிறிது நேரம்வரை வைத்த கண் வாங்காமல் சித்திரலேகாவையே உற்றுப் பார்த்தவாறு இருந்தான். பிறகு சித்திரலேகாவின் முகத்தருகே குனிந்தான். அப்பொழுது சித்திரலேகாவின் உதடுகளிலே இலேசாகப் புன்னகை படர்ந்தது. அதைக் கண்டதும் அவன் உள்ளத்திலே இனம் தெரியாத ஒரு இன்பம் உதித்தது. அவன் மெதுவாகத் தன் உதடுகளைச் சித்திரலேகாவின் உதடுகளுக்கருகே கொண்டு போனான். அவனுடைய உதடுகளும் அவளுடைய உதடுகளும் இடித்துக்கொண்டு கூட விட்டன. இருவருடைய உதடுகளும் இடித்துக் கொண்டதுதான் தாமதம்; குமாரகிரி திடுக்கிட்டுப்பின் நகர்ந்தான். சித்திரலேகாவின் உதடுகளில்தான் எத்தனை குளுமை! ஆயினும் அவை ஏன் அப்படி உயிர்க்களையற்றுக் காணப்பட்டன?

ஏதோ யோசித்தவாறே குமாரகிரி தன் ஆசனத்தில் போய் அமர்ந்தான். அடுத்த கணம் தியானத்தில் ஆழ்வதற்காக முயற்சித்தான். ஆனால் எவ்வளவு முயற்சித்தும் அவனால் தியானத்தில் ஆழ முடியவே இல்லை. ஆகவே அவன் அப்படியே படுத்துக் கொண்டான்; வருங்காலத்திலாவது தன்னைத் தானே வெற்றி கொண்டுவிடுவது என்று திடசங்கற்பம் செய்தவாறே அவன் நித்திரையில் ஆழ்ந்தான். (தொடரும்)

சித்திரலேகாவின் உதடுகளின் அருகில் நெருங்கின. அவன் மிகவும் மிருதுவான குரலில், "நடனராணி! நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றான்.

குமாரகிரியின் சூடேறிய மூச்சு சித்திரலேகாவின் உடலிலே பட்டுத் தகித்தது. அவளுக்கு என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுக்கு எங்கிருந்துதான் அப்படிப்பட்ட அசாத்தியத் தைரியம் பிறந்ததோ, தெரியவில்லை! கணத்துக்குக் கணம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் குமாரகிரியின் முகத்தைக் கிட்ட நெருங்க வொட்டாமல் தடுத்து நிறுத்தினாள். "குருதேவா! தாங்கள் வழி தவறிப் போகிறீர்கள். தங்களுடைய மகத்தான சாதனையைக் குலைத்துக் கொள்ள அடி கோலுகிறீர்கள். வேண்டாம், வேண்டாம்!" என்று சற்று உரக்கவே கூச்சலிட்டுவிட்டாள். குமாரகிரியின் கைப்பிடி உடனே தளர்ந்து விட்டது. அவன் நிலை மிதித்து விட்டவன் போலச் 'சரேல்' என்று துணுக்குற்றுத் துள்ளிக் குதித்துப் பின் நகர்ந்தான். அவனுடைய கண்களிலே காணப்பட்ட வெறி அடுத்த கணமே அடங்கி விட்டது. ஆனால் முகம் வெளுத்துச் சாம்பல் நிறமாகிவிட்டது.

"அடாடா! நான் என்ன காரியம் செய்யத் துணிந்தேன்? நடனராணி! என்னை மன்னிக்க வேண்டும்" என்றான். அடுத்த கணம் அவன் அங்கே நிற்கவில்லை. வெகு வேகமாகக் குடிசையை விட்டு வெளியேறிச் சென்றான்.



சித்திரலேகா அங்கேயே உட்கார்ந்து விட்டாள். உட்கார்ந்ததும் முதல் காரியமாக அவள் நடந்தவற்றை நினைத்துப் பார்த்தாள். அவளாகவேதான் குமாரகிரியைத் தேடிவந்தாள். 'போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடு' என்பது போல் இப்பொழுது அவளாகவேதான் குமாரகிரியை விட்டுப் போய்விட வேண்டும் என்றும் விரும்பினாள்.

சிறிது நேரத்துக் கெல்லாம் சித்திரலேகா தரையில் படுத்துக் கொண்டாள். தான் செய்த காரியம் மிகத் தவறான காரியம் என்ற உள்ளுணர்ச்சி அவளை மிகவும் வாட்டியது. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. 'குதிரை தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறித்ததாம்' என்ற கதையாக, தான் கெட்டதோடு மட்டும் அல்லாமல் பிறரையும் கெடுக்கத் துணிந்தோமே! தான் விழுந்தது போதாது என்று பிறரையுமா பிடித்துத் தள்ள வேண்டும்!—இந்த எண்ணம் எழுந்ததும் அவள் விசித்து விசித்து அழலானாள். கடைசியில் அதே சிந்தனையில் லயித்து அவள் அப்படியே உறங்கியும் விட்டாள்.

குடிசையிலிருந்து வெளியேறிய குமாரகிரி திறந்த வெளியில் சென்று உலாவலானான். சிறிது நேரத்துக்கு முன்னால் அவனுடைய உடல் மட்டும்தான் பற்றி எரிந்து கொண்டிருந்தது. இப்பொழுதோ அவனுடைய உள்ளமும் பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. முதலில் ஏற்பட்ட எரிச்சலில் ஒரு வித இன்பம் துய்ப்பதாகத் தோன்றியது. ஆனால் இரண்டாவதாக ஏற்பட்ட எரிச்சலிலோ துன்பம் தலை தூக்கி நின்றது. தன் செயற்களன், தன் மகத்தான சாதனைகள் இவற்றையெல்லாம் மறந்து துறந்து அதப் பாதாளத்தை நோக்கிக் குப்புறக் கரணமாக விழுவது போலத் தோன்றியது குமாரகிரிக்கு. தன்னுடைய அந்த பலவீனத்தை வெற்றி கொள்ளுவது அல்லவா அவனுடைய முதற் கடமை?

எதிரே காரிருள் சூழ்ந்திருந்தது. பின்னால் பாடலிபுத்திர நகரத்தின் வீதி விளக்குகள் மின்மினிப் பூச்சியைப்போல 'மினுக்கு மினுக்கு' என்று எரிந்து கொண்டிருந்தன. குமாரகிரியின் உள்ளத்திலே போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அவனுடைய கால்கள் தன் இஷ்டப்படி குருட்டாம் போக்கில் சென்று கொண்டிருந்தன. "முடியாது, இங்கிருந்தால் நம்மால் நம்

ஒளிக்காமல் சொல்லு. உன்னிடத்தில் ஒரு விதக் கவர்ச்சிகரமான வசீகர சக்தி இருக்கிறதே, அந்தச் சக்தியை நீ எங்கே பெற்றாய்?" என்று கேட்டான்.

சித்திரலேகாவின் முகம் சிவந்தது. அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அவள் முதல் தடவையாக வெட்கத்தை உணர்ந்தாள். அவள் நாணிக் கண் புதைத்தாள். "குருதேவா! என்னிடத்தில் ஒருவிதக் கவர்ச்சிகரமான வசீகரச் சக்தி இருக்கிறது என்பது தாங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரிகிறது. என்னிடம் இருக்கும் சக்தி இன்று வரை எனக்கே தெரியாமல் போனது ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது!" என்று வியப்புத் தோய்ந்த குரலில் சொன்னாள்.

குமாரகிரி எழுந்து நின்றான். அடுத்த கணம் இங்கும் அங்கும் குடிசைக்குள்ளேயே உலாவலானான். பிறகு சித்திரலேகாவின் பக்கம் திரும்பி, "இன்று தியானத்தில் ஈடுபட என் மனம் ஏனோ நாட்டம் கொள்ளவில்லை. உருவம் அற்ற ஒரு பொருளிலே உள்ளத்தை நிலை நிறுத்தி ஒருமைப் படுத்துவது இன்று மிகவும் கடினமான காரியமாகத் தோன்றுகிறது. என்ன காரணம் என்று சரியாக விளக்க வில்லை" என்றான். அவன் குரல் சிறிது சிறிதாக உயர்ந்தது. "இத்தனை நாளும் இல்லாமல் இன்று மட்டும் எனக்கு உருவம் அற்ற பொருளை உபாசிப்பது ஏன் இவ்வளவு சிரமசாத்தியமான காரியமாகத் தோன்றுகிறது? 'உருவம் உள்ள பொருளை வழிபடு, உருவம் உள்ள பொருளை வழிபடு' என்று யாரோ உள்ளத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறாப் போலிருக்கிறதே! இது என்ன அதிசயம்!" என்று சொல்லியவாறே குமாரகிரி சித்திரலேகாவுக்கு வெகு அருகில் வந்து நின்றான்.

பிறகு சித்திரலேகாவைச் சிறிதும் கண் கொட்டாமல் பார்த்தவாறே, "நடனராணி! இது வரை நான் உருவம் அற்ற பொருளைத்தான் உபாசித்து வந்திருக்கிறேன். ஆனால் இனி உருவம் உள்ள பொருளைத்தான் வழிபட வேண்டும் என்னும் அவா என்னை உந்தித் தள்ளுகிறது. என்ன, நான் சொல்வது விளங்குகிறதா? ஆகவே நான் ஒரு பெரிய சோதனை செய்து பார்க்கலாம் என்று உத்தேசித்திருக்கிறேன். அந்தச் சோதனைக்கு நீதான் உதவி புரிய வேண்டும். எழுந்திரு!" என்றான்.

சித்திரலேகா நடு நடுங்கிப் போய் விட்டாள். அவள் யோகி குமாரகிரியின் முகத்தை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். அவனுடைய முகத்திலே மங்கலான—இலேசான சாயை படருவது தெரிந்தது. அடுத்த கணம் யோகியின் அழகிய அமைதியே உருவெடுத்த முகாரவிந்தம் விகாரமடைந்து காணப்பட்டது. யோகியின் உள்ளத்திலே அவள் வைத்த தீ வளர்ந்து சொக்கப்பனைபோல் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்திருந்தது. அதன் வெப்பத்தையும் பயங்கரத்தையும் கண்ட அவள் கதிகலங்கிப் போய்விட்டாள். அவள் வியர்க்க விறுவிறுக்க உடல் நடுங்கியவாறே எழுந்து நின்றாள். அப்பொழுது அவளுக்குத் தன் சக்திகள் அனைத்துமே தன்னைவிட்டு அகன்றுவிட்டது போலத் தோன்றியது.

குமாரகிரி இன்னும் நெருங்கி வந்து சித்திரலேகாவின் கையைப் பிடித்தான். சித்திரலேகாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை ஒரே ஆட்டமாக ஆடியது. காய்ந்து பழுத்து அக்கினிப் பிழம்பாகியிருந்த இரும்பு வளையங்களைக் கைகளில் மாட்டியது போன்ற பயங்கரமான உணர்ச்சி அவளுடைய உள்ளத்திலே எழுந்தது. யோகியின் உடல் தழல்போலக் காய்ந்து கொண்டிருந்தது; அனலைக் கக்கிக் கொண்டிருந்தது.

"உருவம் உள்ள பொருளை வழிபடும் சோதனையில் இறங்குகிறேன், நடனராணி! உருவம் உள்ள பொருளைத்தான் வழிபட வேண்டும் என்னும் எண்ணத்தை என் உள்ளத்திலே எழுப்பியவள் நீதான். ஆகவே நீதான் நான் செய்யப்போகும் இந்தப் புதிய சோதனைக்கு உதவிபுரிய வேண்டும். இல்லை, இல்லை. நீதான் அந்தச் சோதனைக் கருவியாகவே ஆகவேண்டும். புரிந்ததா?" என்றான். அதைச் சொல்லும் பொழுது அவனுடைய குரல் தழுதழுத்தது.

சித்திரலேகாவுக்கு எல்லாம் தெரிந்துதான் இருந்தது. இதற்காகத்தானே அவள் அவனை நாடி அங்கே வந்திருந்தாள்? ஆனால் அவள் தன் மனதுக்குள்ளே கற்பனை செய்து திட்டம் போட்டிருந்த காரியம் நடைபெறவில்லை. அவள் ஆனந்தமாகத் தென்றல் காற்றுடன் குதூகலக் கிரீடை செய்வதற்காக அல்லவா வந்திருந்தாள்? எரிமலையின் அனலில் வீழ்ந்து வெந்து சாவதற்காக வரவில்லையே! அவள் மெதுவான குரலில், "குருதேவா!" என்று அழைத்தாள்.


அதற்குள் குமாரகிரி சித்திரலேகாவைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டு விட்டான். அவனுடைய உதடுகள்

வாழ்க்கை அவளுக்கு நிம்மதி நிறைந்ததாகத் தோன்றியது. அந்தச் சாந்தியின் சாம்ராஜ்யத்திலே, சாத்வீகத்தின் பிரகாசத்திலே, நம்பிக்கையின் ஒளியிலே, அவளுக்கு இனம் தெரியாத ஒரு இன்பம் இருப்பதாகப் பட்டது. சகலவிதமான சுக போகங்களையும் அநுபவித்திருந்த அவளுக்கு அந்தப் பழைய சுக போக வாழ்க்கை வேம்பாகத் தோன்றியது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் தானே! ஆகவே அதிக இன்பம் அவளுக்கு அதிகத் துன்பமாகி விட்டதில் என்ன ஆச்சரியம்? சாந்தியின் சாம்ராஜ்யமாகத் திகழ்ந்த குமாரகிரியின் குடிசை அவளுக்கு மனதுக்கு மிகவும் பிடித்திருந்தது. அமைதி நிலவிய அந்தச் சூழ்நிலையில் அவள் இன்பத்தைக் கண்டாள். திருப்தியையும் கண்டாள்.

குமாரகிரி சிறிது நேரம் வரை யோசனையில் ஆழ்ந்திருந்தான். அதற்குப் பின் அவன் தலையைச் சற்று உயர்த்தி, "தேவி சித்திரலேகா! நான் உன்னை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் எனக்கும் உனக்கும் ஏற்பட்டிருக்கும் இந்தத் தொடர்பு நெடுங்காலமாக இருந்து வருகிறது என்பதை இதயத்தின் ஆழத்திலிருந்து ஏதோ ஒன்று ஞாபகப் படுத்திக் கொண்டேயிருக்கிறது" என்றான்.

குமாரகிரியிடம் வருவதற்கு முன்பாகச் சித்திரலேகாவும் இதே போலத்தான் எண்ணியிருந்தாள். "தாங்கள் கூறுவது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் கடந்த கால வாழ்க்கை நினைவுகளைத் தெளிவாகக் காணும் சக்தி எனக்கு இல்லையே! நான் என்ன செய்வது?" என்றாள்.

குமாரகிரி 'கல கல' வென்று நகைத்தான். "ஒருவேளை நான் நினைப்பதும் தவறாக இருக்கக் கூடும் அல்லவா? ஆனால், சித்திரலேகா! ஒரு விஷயம். உண்மையை



னதொரு பொருளை வேண்டாம் என்று உதறித் தள்ளி, அதனிடம் தனக்கு உள்ள வெறுப்பைக் காட்டுவதுதானே? ஆகவே உண்மையை ஆராய்ந்து பார்ப்போமானால் வைராக்கிய வாழ்வு வாழ்பவன் என்று சொல்லப்படும் மனிதன் உண்மையில் வைராக்கிய புருஷன் அல்ல. அவன் கடவுளிடம் பற்றுதல் கொண்டவன் என்றுதான் ஆகிறது. நமக்கு இந்த விஷயம் அவ்வளவு அதிக மகத்துவம் வாய்ந்ததல்ல. இன்னொரு விஷயம்தான் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. உலகப் பற்றை விட்டு ஒழிப்பது - பரம்பொருளிடம் பற்றுதல் கொள்ளுவது-இவ்விரண்டும் ஒன்றுதானா?" என்று கேட்டான் குமாரகிரி.



சித்திரலேகா குமாரகிரியின் அந்தச் சொற்களைக் கேட்டதும் கதிகலங்கிப் போனாள். அவள் குமாரகிரியின் மனப்போக்கை நன்கு உணர்ந்திருந்தாள். அது மட்டும் அல்ல. அவளைப் பார்த்தால், ஒருவேளை அவள் அவனுடைய மனோபலவீனத்தையும் ஒருவாறு நன்கு உணர்ந்திருந்தாளோ என்று நினைக்கத் தோன்றியது. அவள் கனைத்துக் குரலைச் சரி செய்து கொண்டு, "குருதேவா! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் திறமை எனக்கு இல்லை. நான் குருநாதராகிய தங்களிடம் கல்வி கற்பதற்காக வந்திருக்கிறேன்; மெய்யறிவைப் பெறுவதற்காக வந்திருக்கிறேன்; குருதேவரின் லட்சிய வாழ்வை—வாழ்வின் லட்சியத்தைக் காண்பதற்காக வந்திருக்கிறேன். பரம்பொருளைப் புரிந்து கொள்வதற்காக வந்திருக்கிறேன். இதைத் தவிர நான் வேறு ஒன்றும் அறியேன்" என்று பணிவுடன் சொன்னாள்.

அதைக் கேட்டதும் குமாரகிரி தலைகுனிந்தான். அவளுடைய இணையற்ற சாதனை அவனுடைய குற்றமுள்ள நெஞ்சைக் குறுகுறுக்கும்படி செய்துவிட்டது. "சித்திரலேகா! நீ சொல்லுவது நியாயம்தான். மெய்யறிவு தர்க்கத்துக்கு உட்பட்ட பொருள் அல்ல; அப்பாற்பட்ட பொருள்தான். அதை அநுபவத்தின் மூலம்தான் அறியமுடியும். இம்மாதிரித் தர்க்கம் என் உள்ளத்தில் எப்படித்தான் எழுந்ததோ, எனக்கே புரியவில்லை! ஆனால் அந்தத் தர்க்கம் நிமிஷத்துக்கு நிமிஷம் வலுப் பெற்றுக் கொண்டே போகிறது. 'உலகப் பற்று அனைத்தையும் துறந்து கடவுள்பால் அன்பு செலுத்த முடியுமா?' என்னும் இந்தப் பிரச்னைக்கு எப்பாடு பட்டாவது பதில் தேடிக் கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். அந்தப் பிரச்னைக்குச் சரியான பதிலைத் தேடிக் கண்டு பிடிக்காத வரையில் என் மனதுக்குச் சிறிதும் நிம்மதி ஏற்படாது" என்றான்.

சித்திரலேகாவுக்கு உடனே தன்னைப் பற்றிய நினைவு எழுந்தது. அவள் தீவிரமாகத் தன்னைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினாள். அவளுக்குத் தன்னிடத்திலே ஒரு விசித்திரமான மாறுதல் ஏற்பட்டிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவள் யோகி குமாரகிரியிடம் வந்தாளே, எதற்காக? குமாரகிரியைக் காதலிப்பதற்காகத்தானே? ஆனால் இவ்வளவு நாட்கள் குமாரகிரியுடன் நெருங்கிப் பழகிய அநுபவத்தில் அவள் குமாரகிரியைத் தன்னால் காதலிக்க முடியவில்லை; முடியவும் முடியாது என்பதை உணர்ந்தாள். அது மட்டும் அல்ல. குமாரகிரியை உள்ளக் கோயிலில் வைத்துப் பூஜிக்க முடியாது. தான் குமாரகிரியிடமிருந்து ஒன்றும் கற்றுக் கொள்ளவும் முடியாது என்பதையும் அவள் நன்கு உணர்ந்து கொண்டாள்.

அப்படியானால் அதற்கப்புறமும் சித்திரலேகா அங்கே தங்கியிருக்கக் காரணம் என்ன? காரணம் இல்லாமல் இல்லை. கோலாகலம் நிறைந்த நகர வாழ்க்கையிலே அவளுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. நகர வாழ்க்கையிலே நிம்மதி என்பதையே அவளால் காண முடியவில்லை. ஆகவேதான் அவள் நிம்மதியில்லாத நகர வாழ்க்கையை வெறுத்தாள். திரும்பி நகர வாழ்க்கைக்குப் போக வேண்டாம் என்று முடிவும் செய்தாள். நிர்மானுஷ்யமான கானகத்து



சித்திரலேகா

ஸ்ரீ பகவதி சரண் வர்மா — மொழி பெயர்ப்பு: ரா. வீ.

குமாரகிரி சிறிது நேரம் பேசாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தான். "நீ சொல்லுவதைப் பார்த்தால், உன்னுடைய இந்த ஆராய்ச்சி முடிவின் பிரகாரம் இரண்டு ஆத்மாக்களிடையேதான் காதல் ஏற்பட முடியும் என்று ஆகிறது. இரண்டு மனிதர்களிடத்திலேதான் காதல் பிறக்கும் என்றும் ஆகிறது. ஆனால் நான் கேட்கிறேன்: மனிதனுக்கும் பரம்பொருளுக்கும் இடையே காதல் ஏற்படவே முடியாதா?" என்று கேட்டான்.

"ஆனால் தங்களுடைய அபிப்பிராயப்படி பார்க்கப் போனால் ஆத்மா என்பது பரம்பொருளாகிய பிரும்மத்தினுடைய ஒரு அம்சம் தானே? ஆகவே தங்களுடைய அந்த ஆராய்ச்சி முடிவின் பிரகாரம் பரம்பொருளுடனும் காதல் ஏற்பட முடியும் என்றுதான் ஆகிறது" என்று குமாரகிரியினுடைய கேள்வியைக் கொண்டே மடக்கிப் பதில் அளித்தாள் சித்திரலேகா.

"இன்று நான் ஒரு புதிய முடிவுக்கு வந்திருக்கிறேன், சித்திரலேகா! வைராக்கியம் என்று சொல்லுகிறோமே, அது மனிதனால் நடக்கக்கூடிய காரியமாகத் தென்படவில்லை. ஏனெனில் வைராக்கியம் என்பது என்ன? எதற்கும் 'இல்லைப் பாட்டு' பாடுவதுதானே? வைராக்கியத்தைப் பற்றி ஆராயப்போனால், எதற்கும் 'இல்லை, இல்லை' என்ற ஒரே பதிலைத்தான் சொல்ல வேண்டி வரும். வைராக்கியத்துக்கு ஆதாரம் சூன்யம். அந்தச் சூன்யத்துக்கு ஆதாரம் எது? வெறும் உருவெளித் தோற்றத்தைத்தானே நாம் சூன்யம் என்கிறோம்! ஆகவே சூன்யம் என்பது ஒன்றுமில்லை என்று ஆகிறதல்லவா? அம்மாதிரி நிலையில் ஒரு மனிதன் தன்னை வைராக்கிய புருஷன் என்று சொல்லுவானாகில், அவன் சொல்லுவது முற்றிலும் தவறு என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில், ஒருவன் எதற்காகத் தன்னை வைராக்கிய புருஷன் என்று சொல்லிக்கொள்ள முன் வருகிறான் என்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலனாகும். அவன் தனக்கு உலகத்தினிடம் ஒரு பற்றுதலும் இல்லை, வெறுப்பு ஏற்பட்டுவிட்டது என்பதைக் காட்டிக் கொள்ளுவதற்காகத்தான் தன்னை வைராக்கிய புருஷன் என்று சொல்லிக் கொள்ளுகிறான். ஆனால் உலகத்தை வெறுத்த அவனுக்கு வேறு ஏதோ ஒரு பொருளிடம் விருப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது அவன் சொல்லும் சொல்லிலிருந்தே நிதர்சனமாகப் புலனாகிறது. அந்தப் பொருள் என்ன? அதுதான் பிரும்மம் என்னும் பரம் பொருள்!

"இன்னொரு விஷயம். நாம் இந்த இடத்தில் வாழ்க்கையின் குறிக் கோள் என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு செயற்களன். வாழ்க்கையின் அலுவல்கள் ஆக்கல் முறையை அடிப்படையாகக் கொண்டவை; அழித்தல் தொழிலை அடிப்படையாகக் கொண்டவையே அல்ல. ஆகவே அன்பு வழியிலே செல்லவேண்டியதுதான் மனிதனுடைய மாபெரும் கடமை. வைராக்கிய வழியிலே செல்வது அவனுடைய கடமை அல்ல. ஒருவனுக்குப் பரம் பொருளிடம் பற்றுதல் ஏற்படுகிறது என்றால் என்ன அர்த்தம்? பரம்பொருளைக் காட்டிலும் வேறு

ரூ. 2—0—0 : ஸ்ரீமதிகள் ஏ. லக்ஷ்மி, கண்ணனூர்; காவேரி, கண்ணனூர்; ருக்மணி, கண்ணனூர்; ஆர். கல்யாணி, கண்ணனூர்; பார்வதி, கண்ணனூர்.

ரூ. 1—0—0 : ஸ்ரீமதிகள் நீலா, கண்ணனூர்; ராஜம்மா, கண்ணனூர்; உம்மச்சி பீபி, கண்ணனூர்.

ஸ்ரீ இ. என். கணபதி சுப்ரமணியம் பி. ஏ., பி. எல்., அட்வகேட், ஈரோடு மூலமாக ரூ. 100-க்கு விவரம் :—

ரூ. 10—0—0 : ஸ்ரீமான்கள் வி. என். மாணிக்கசுந்தரம், அட்வகேட், ஈரோடு; கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர், அட்வகேட், ஈரோடு; என். ராமகிருஷ்ண ஐயர், அட்வகேட், ஈரோடு; ப. ரா. சேதுராமன், அட்வகேட், ஈரோடு; வி. ஆறுமுகம், உப்பு மண்டி ஈரோடு.

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் இ. பி. ராகவேந்திர ராவ், அட்வகேட், ஈரோடு; ஆர். வெங்கட்ராமன், அட்வகேட், ஈரோடு; க. வைத்தியலிங்கம், அட்வகேட், ஈரோடு; என். ஆராவமுதன், அட்வகேட், ஈரோடு; என். வெங்கடப்பச் செட்டியார், அட்வகேட், ஈரோடு; எம். பழனியப்ப முதலியார், நூல் வியாபாரம், ஈரோடு; கே. சுவாமிநாதப் பிள்ளை, துணி வியாபாரம், ஈரோடு; டி. வி. சீனிவாசாச்சாரியார், அட்வகேட், ஈரோடு.

"குன்றூசி"ப் பத்திரிகை மூலமாக ரூ. 461—8—0க்கு விவரம்:—

ஸ்ரீ ஆர். ராமசாமி, ஏ. என். ரத்தினம் அண்டு கோ, "குன்றூசி" ஏஜண்டு, திருவாரூர்	51	0	0
ஸ்ரீ வி. ஜான், க்ளின் அண்டு பேர்ல், பிளாக் மேக்கர்ஸ், சென்னை	50	0	0
ஸ்ரீ பி. ஜே. செரியன், க்ளின் அண்டு பேர்ல், பிளாக்மேக்கர்ஸ், சென்னை	30	0	0
ஸ்ரீமதி ஏ. என். பெரியநாயகி, இனிமா நடிகை, கும்பகோணம்	21	0	0
ஸ்ரீ டி. ஆர். கணபதி, கிளின் அண்ட் பேர்ல், பிளாக்மேக்கர்ஸ், சென்னை	20	0	0
ஸ்ரீ பி. என். வெங்கடேசன், "குன்றூசி" ஏஜண்டு, காரைக்குடி	12	8	0
ஸ்ரீ அருணாசலம், மானேஜர், கமர்ஷியல் அச்சகம், சென்னை	11	0	0
ஸ்ரீ பி. பெருமாள், "குன்றூசி" ஏஜண்டு, காரைக்குடி	11	0	0
ஸ்ரீ ஜி. சதாசிவம், உதவி ஆசிரியர், "ஆனந்த விகடன்" சென்னை	11	0	0
ஸ்ரீ வி. என். சுப்பிரமணிய ஐயர், வெங்கடாசலாட்ஜ், கும்பகோணம்	11	0	0
ஸ்ரீ வி. ஜி. நம்பியார், கிளின் அண்டு பேர்ல் பிளாக்மேக்கர்ஸ், சென்னை	10	0	0
ஸ்ரீ என். சங்கரன், "குன்றூசி" ஏஜண்டு, திண்டிவனம்	7	8	0
ஸ்ரீ வி. முருகன், பிரிண்டர், சென்னை	6	0	0

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் ஜி. புருஷோத்தமன், "குன்றூசி" ஏஜண்டு, நெல்லிக்குப்பம்; டி. கே. உமாபதி, சைத்திரிகர், தஞ்சாவூர்; என். ரங்காச்சாரி, சென்னை; ஜே. ஜகதீசன், "ஆனந்த விகடன்" சென்னை; ஜி. ராமன், உதவி மானேஜர், கமர்ஷியல் அச்சகம், சென்னை; பி. எம். சாரங்கபாணி, கமர்ஷியல் அச்சகம், சென்னை; மு. சோமசுந்தரம், கமர்ஷியல் அச்சகம், சென்னை; ஏ. கே. எஸ். பிள்ளை, கிளின் அண்டு பேர்ல், சென்னை; ஸ்ரீராமலு, கிளின் அண்டு பேர்ல், சென்னை; ராமகிருஷ்ணன், கிளின் அண்டு பேர்ல், சென்னை; ஜார்ஜ் வர்க்கீஸ், கிளின் அண்டு பேர்ல், சென்னை; முருகேஷ், கிளின் அண்டு பேர்ல், சென்னை; சுந்தரம், கிளின் அண்டு பேர்ல், சென்னை.

ரூ. 4—0—0 : ஸ்ரீ என். எம். சாகேப், கிளின் அண்டு பேர்ல் பிளாக் மேக்கர்ஸ், சென்னை.

ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் ஏ. கே. சாகேப், சென்னை; லோகநாதன், சென்னை; வி. டி. ராமச்சந்திரன், சென்னை; லைபண்டியன் சென்னை.

ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள், கே. பார்த்தசாரதி, சென்னை; அ. பு. சுந்தரம், சென்னை; வெங்கடராமய்யர், சென்னை; அருணாசலம், சென்னை; அரசு, சென்னை; ஆரோக்யசாமி, சென்னை; எம். செரியன், சென்னை; இ. ராமச்சந்திரன், சென்னை; செல்வநாயகம், சென்னை; ஸ்ரீநிவாசன், சென்னை; விநாயகம், சென்னை; கே. எம். தனபாலன், கனவல்லி; பி. கன்னுசாமி, ஈரோடு; கே. இ. சிவசங்கர், சித்திரக்காரர், சென்னை.

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள், பி. கலீலுர் ரஹிமான், சென்னை; ஏ. கே. அய்யாத்துரை, இலங்கை; டபிள்யூ. டி. மில்டன், இலங்கை; எஸ். அற்புதசாமி, இலங்கை; கே. ராஜமணி நாடார், இலங்கை; எஸ். ஏ. நற்குணம், இலங்கை; வி. பி. சுப்ரமணியம், கும்பகோணம்; கே. பக்கிரிசாமி, கும்பகோணம்; பி. சீனிவாசன், கும்பகோணம்; வி. கதிர்வேல் பிள்ளை, கும்பகோணம்; எஸ். சையாஜிலால், கும்பகோணம்; பி. கே. பாஷா ராவுத்தர், கும்பகோணம்; ஏ. ஜே. அய்யாத்துரை, இலங்கை; கே. முகம்மது யாஹ்யா, இலங்கை; குருநாதன், சாக் வொர்க்ஸ், கும்பகோணம்; ஆர். செல்வராஜன், சென்னை; பி. ச. கே. அப்துல்லா, வலங்கைமான்; ஜே. பி. ராஜன், (1—12—9) சென்னை; டி. இ. லக்ஷ்மணன், (1—4—0) "குன்றூசி" சென்னை; பி. ஆர். ஜெயராமன், (1—0—9) மயிலாப்பூர், சென்னை; ஜி. என். மூகன், கொடியாலம்; பி. கிருஷ்ணசாமி ராஜு, சென்னை; எம். ஏழுமலை, சென்னை; ஜி. ஆர். கேசவலு நாயுடு, சென்னை; சி. தர்மலிங்க முதலியார், சென்னை; கே. பங்காரு நாயுடு, சென்னை; எஸ். பி. தாண்டவன், சென்னை; வி. கே. பாஸ்கரன், சென்னை; வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை; வி. முத்துகிருஷ்ணன், சென்னை; பி. ஏ. துளசிங்கம், சென்னை; ஏ. டி. ராஜா, சென்னை; பி. எம். மாதவன், சென்னை; பி. ராஜா, சென்னை; மாணிக்கம், சென்னை; சந்திரன், சென்னை; அண்ணாமலை, சென்னை; சி. டி. அந்தோனி, சென்னை; பாஜு, சென்னை; எம். துரை, சென்னை; சிட்டிபாபு, சென்னை; ஜெயராஜ், சென்னை; ஜேம்ஸ், சென்னை; ஜீவரத்தினம், சென்னை; காதர், சென்னை; கிருஷ்ணன், சென்னை; கதிரவன், சென்னை; முனுசாமி, சென்னை; முகமது கௌஸ், சென்னை; நாதன், சென்னை; பிரகாசராஜ், சென்னை; ஷண்முகம், சென்னை; ஆசைநாதன், (சீனியர்) சென்னை; ஆசைநாதன், (ஜூனியர்) சென்னை; குமாரன், சென்னை; வெங்கடேசன், சென்னை; வாசுதேவன், சென்னை; செல்லப்பன், சென்னை; ராஜகோபால், சென்னை; தங்கப்பிரகாசம், சென்னை; அலோசனியஸ், சென்னை; ஏழுமலை, சென்னை; பிரான்ஸிஸ், சென்னை; எட்கார் கோமாஸ், சென்னை; சி. கே. தாஸ், சென்னை; ஜனார்த்தனம், சென்னை; மோகன், சென்னை; நோருல்லா, சென்னை.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த நன்கொடைகள்: ரூ. 31—5—6.

மதுரை தேவி நாடக சபையின் சொந்தக்காரரான நவாப் ராஜமாணிக்கம் சிறந்த தெய்வ பக்தர். மகாத்மா காந்தியிடம் அளவற்ற பக்தி விசுவாசம் படைத்தவர். சில காலமாக அவருடைய கம்பெனியின் பொருளாதார நிலை சரியா யில்லை யென்பதை நான் அறிந்திருந்தேன். எனவே அவருடைய உத்தமப் பண்பு எனக்குத் தெரிந்திருந்தும் ஸ்தூபி நிதிக்கு உதவி நாடகம் அளிக்க வேண்டும் என்று அவரைக் கேட்கவில்லை.

ஆனால் நவாப் ராஜமாணிக்கம் இப்படிப்பட்ட கைங்கர்யத்திற்குத் தம்முடைய காணிக்கையைச் செலுத்தாமலா இருப்பார்? ரூ. 2,192—3—9 தொகையுடன் நவாப் எழுதிய உருக்கமான கடிதத்தைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்ததை நேயர்கள் படித்திருப்பார்கள்.

நவாப் ராஜமாணிக்கம் அடுத்தாற்போல் கும்பகோணத்துக்கு விஜயம் செய்து நாடகம் நடத்தப் போகிறார் என்று அறிகிறேன். ரஸிகத் தன்மையில் தலைசிறந்த கும்பகோணத்தில் நவாப்புக்கு நல்ல வரவேற்பும் வெற்றியும் கிட்டும் என்று நம்புகிறேன்.

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் அவர்கள், மதுரை தேவி பால விநோத சபா, திருச்சிராப்பள்ளி, (நாடக வசூல்)	ரூ. 2,192	3	9
ஸ்ரீ ஆர். கே. மூர்த்தியின் விகடக் கச்சேரியின் மூலமாக நன்கொடை வசூல்	ரூ. 501	0	0
ஹிந்து இளைஞர் சங்கம், திருவல்லிக்கேணி, (ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி கச்சேரி மூலம்)	ரூ. 250	0	0
ஸ்ரீ எஸ். கோபாலன், பி. ஏ., பி. எல்., கௌரவ காரியதரிசி, சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்	ரூ. 101	0	0
ஸ்ரீ அ. சொ. அ. வெ. ரெங்கசாமிக் கோனார், வலையப்பட்டி, ராமநாதபுரம்	51	0	0
மாயூரம் மாதர் சங்கத்தார், (ஸ்ரீமதி இந்திரா அவர்கள் மூலம்)	45	0	0
ஸ்ரீ வி. கோபாலகிருஷ்ணன், புரொப்ரைட்டர், வெங்கடேஸ்வரா லாட்ஜ், பழனி	25	0	0
ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி, நுங்கம்பாக்கம், சென்னை	25	0	0
வெங்கடேஸ்வரா லாட்ஜ் சிப்பந்திகள், பழனி	22	5	0
ஸ்ரீ ஆர். சக்கரவர்த்தி, எம். ஏ., பி. எல்., புது டில்லி	15	0	0
ஸ்ரீ கே. எஸ். ராமானுஜம், மௌண்ட் ரோடு, சென்னை	11	0	0

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் எஸ். கணபதி, கிராண்ட்பாஸ் ரோடு, கொழும்பு; கே. ஆர். விஜயராகவன், வஸந்தா சோப் ஒர்க்ஸ் லிமிடெட், போரங்கி; கே. வைத்தியலிங்கம், ஈஸ்வரன் கோவில் தெரு, திருப்பூர்; எஸ். செல்வகணபதி, மாதாகோவில் தெரு, காரைக்கால்.

ரூ. 7—14—0: ஜனாப் பி. எம். முகம்மது சுலைமான், போஸ்டு ஆபீஸ், நாமக்கல்.

ரூ. 5—1—0 ஸ்ரீ குருசாமி, "கல்கி" ஏஜண்டு, சின்னமனூர்.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். பி. பி. சாமி, பூக்காரக் கோவில் தெரு, தஞ்சாவூர்; இந்திரா நாகராஜன், பெரிய தெரு, கும்பகோணம்; பி. வி குப்புசாமி, கபேதார், பூனா; எம். வெள்ளியங்கிரி, "கல்கி" ஏஜண்டு, பொள்ளாச்சி; வி. சி. ஜயராமன் (ரமன்) வியாசர்பாடி, சென்னை; இ. முத்துசாமி, டி. எஸ். எஸ். ரோடு, கும்பகோணம்; ஏ. வி. பாபுராயன், உபாத்தியாயர், கவர்ன்மெண்டு ஸ்கூல், அரியாங்குப்பம், புதுச்சேரி; ஜே. டி. ராஜன், ஜவுளி வியாபாரம், சாத்தான்குளம்.

ரூ. 3—8—0: ஸ்ரீ எஸ். சுப்பையா, அச்சம்பட்டி, மதுரை; ரூ. 3—0—0 ஸ்ரீ கெ. எஸ். பிள்ளை, திண்டுக்கல்; ஜனாப் ஜாபர் ஹுஸேன், "கல்கி" ஏஜண்டு, அரவக்குறிச்சி.

ரூ 2—0—0: ஸ்ரீமதி எம். கே. ஜயலக்ஷ்மி நாயுடு, தாம்பரம்; ஸ்ரீமான்கள் பி. ஏ. ஏ. ஆர். ராஜாராம், திண்டுக்கல்; ஆர். ஜி. ரங்கநாதன், வாணியம்பாடி; கே. வி. சங்கரன், தல்லாகுளம், மதுரை; என். ராமநாதன், சிக்கந்தராபாத்; எஸ். பி. குப்புசாமி, மல்லிக் தெரு, கல்கத்தா; ஆர். பழனியப்பன், ஷாகாபாத்; பா. மு. வேணுகோபால், குருப்பட்டி; குமாரி வி. எஸ். லக்ஷ்மி, காந்தி கிராமம், விசாகப்பட்டினம்.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வ. ரா. ராமசுப்பிரமணியம், கோயமுத்தூர்; வி. சீனிவாசன், வத்திராயிருப்பு; பி. சுப்பிரமணிய ஐயர், கிளைப்பட்டி, ஆத்தூர்; கே. ராமசாமி, (1-1-0) விளாங்குப்பம்.

ஸ்ரீ டி. எஸ். லிங்கம், மொகல் தெரு, ரங்கூன் மூலமாக ரூ. 130-0-0-க்கு விவரம்:—

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் வெ. வெ. கரு. கண. சொ, ரங்கூன்; பழ. நா., ரங்கூன்; வெ. வெ. கரு. வெ. சா., ரங்கூன்; கா. அண. ராம., ரங்கூன்; பெரி. அழ. மு., ரங்கூன்; மு. மெ. சித., ரங்கூன்; வி. சா. கா. ரங்கூன்; கும. ராம. ரங்கூன்; க. வீராசாமி நாயுடு, ரங்கூன்; குப. ராம, ரங்கூன்; தெ. லெ. ரங்கூன்; சி. அரு. ரங்கூன்; ராம. ப. வ. மு. ரங்கூன்; கண மெ. மெ. ரங்கூன்; முரு. ராம. முரு. ரங்கூன்; பி. நா. அ. ரங்கூன்; அரு. ச. அ. ரங்கூன்; கு. அரு. சொ. அரு. ரங்கூன்; கு. கரு. நா. ரங்கூன்; வெ. பெரி. பழ. ரங்கூன்; சுப. கண. சுப. ரங்கூன்; பி. கு. நா. கம்பெனி, ரங்கூன்; பெரி. மு. மு. ரங்கூன்; கா. சுப. சு. கதி, ரங்கூன்; கண. க. ராம. ரங்கூன்; ரூ. 2-8-0: ஸ்ரீமான்கள் வீர. ராம. நா. சா. ரங்கூன்; நா. லெ. ரங்கூன்.

ஸ்ரீ கே. சுப்ரமணியம் (சுப்ரி) கோயமுத்தூர் மூலமாக ரூ. 20-0-0-க்கு விவரம்:—

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் சி. கே. கோபால ஐயர், கோயமுத்தூர்; எஸ். ஆர். குப்புசாமி, கோயமுத்தூர்; என். ஆர். குப்புசாமி ஐயர், கோயமுத்தூர்; ஆர். சொக்கலிங்கம், கோயமுத்தூர்.

ஸ்ரீ பி. கே. முத்துசாமி, நவயுவன், புதுக்கோட்டை மூலமாக ரூ. 35-க்கு விவரம்:—

ரூ. 10 0 0 ஸ்ரீ எஸ். டி. ராஜன், நிர்வாகி, நவயுவன், புதுக்கோட்டை.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் வி. எஸ். நடேசன், "பாலர் மலர்" புதுக்கோட்டை; ஏ. பி. சீனிவாச நாயுடு, "கல்கி" ஏஜண்டு, புதுக்கோட்டை; வி. கிருஷ்ணமூர்த்தி ஐயர், வக்கீல் புதுக்கோட்டை; அழ. வள்ளியப்பா, லிங்கச் செட்டித் தெரு, சென்னை; வீர. சிதம்பரம், மதராஸ் டிரஸ்ட் லிமிடெட், சென்னை.

ஸ்ரீமதி கே. வேம்பு, கன்னனூர் மூலமாக ரூ. 18-க்கு விவரம்:—

ரூ. 5 0 0 ஸ்ரீமதி கே. வேம்பு, கன்னனூர்.

தேசத் தங்கையின் கைங்கரியம்

ஒரு உத்தமமான கைங்கரியம் என்றால் அதற்கு உதவி செய்வதற்கு எத்தனை பேர் விருப்பத்துடன் முன் வருகிறார்கள் என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது.

திருவல்லிக்கேணியில் "ஹிந்து வாலிபர் சங்கம்" (Young Men's Hindu Association) என்பதாக ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அறிவும் ஆற்றலும் வாய்ந்த பல இளைஞர்கள் இந்தச் சங்கத்தை நடத்தி வருகிறார்கள். சமூகத் தொண்டுகள் பல புரிந்து வருகிறார்கள்.

இவர்கள் தங்களுடைய சங்கத்தின் பொருள் நிலையை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரியின் சங்கீதக் கச்சேரி ஏற்படுத்தினார்கள். மார்ச்சு மீ 11உ கனம் ரோச் விக்டோரியா தலைமையில் ராஜாஜி ஹாலில் கச்சேரி நடந்தது. இந்தக் கச்சேரியில் வசூலான தொகை முழுவதையும் மேற்படி சங்கத்தாரே எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அதில் ஒரு பகுதியைக் காந்திஜி ஸ்தூபிக் கைங்கரியத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே ஸ்தூபி நிதியின் பொக்கிஷதாரரான சபாநாயகர் கனம் சிவசண்முகம் பிள்ளையையும் காரியதரிசியையும் கச்சேரிக்கு வருந்தி அழைத்து ரூ. 250 காணிக்கை சமர்ப்பித்தார்கள். ஸ்தூபி நிதிக்கு என்று அவர்கள் விளம்பரம் செய்யவோ டிக்கட் விற்கவோ இல்லை. தங்களுடைய முயற்சியினால் கச்சேரிக்கு வசூலான தொகையில் ஒரு பகுதியை ஸ்தூபி நிதிக்குக் கொடுத்தார்கள்.

ஸ்ரீமதி வஸந்த குமாரியின் கச்சேரி அன்று முதல்தரமாக வாய்த்தது. பைரவி, காம்போதி ராகங்களின் ஆலாபனங்களும் ஸ்வரப் பிரஸ்தாரங்களும் மிகவும் அபூர்வமாக அமைந்திருந்தன.

"செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்னும் பொய்யா மொழி அச்சமயம் நமது உணவு மந்திரி கனம் ரோச் விக்டோரியாவுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும். உணவுப் பற்றுக்குறை ஏற்படும் இடங்களுக்கு உணவு தானிய சப்ளை செய்வதோடுகூட, நல்ல கர்நாடக சங்கீதக் கச்சேரிகளை ஏற்படுத்தினால் ரஸிகர்களான தமிழர்கள் செவிக் குணவு பெற்று வயிற்றுப் பசியைக்கூட மறந்திருக்கக் கூடும் அல்லவா?

* * *


விகடகவி ஸ்ரீ ஆர். கே. மூர்த்தியின் பெயரை நேயர்கள் பலர் கேட்டிருப்பார்கள். இவர் மணிக்கணக்காக விகடக் கச்சேரி செய்து சபையிலுள்ள ரஸிகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்துக் கொண்டிருக்கும் ஆற்றல் படைத்தவர். சங்கீத வித்வான்கள், ஸினிமா நட்சத்திரங்கள், பிரபல பிரசங்கிகள் — பிரமுகர்கள் முதலியவர்களைப்போல் 'இமிடேட்' செய்யும் திறமை இவரிடம் அபாரமா யிருக்கிறது. இன்னும் ஜட்காவண்டி விகடம், ரிக்ஷாக்காரர் விகடம், பொடி போடும் விகடம் முதலியவை சக்கைப் போடாகச் செய்யக்கூடியவர்.

ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி மார்ச்சு மாதம் 13-ந் தேதி தியாகராஜநகர் ஸ்ரீ ராமகிருஷ்ண பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் விகடக் கச்சேரி ஒன்று நடத்தினார். இந்தக் கச்சேரியை யொட்டி அவரே நன்கொடைகள் வசூலித்தார். வசூலான தொகையைக் கனம் சிவசண்முகம் பிள்ளையை அழைத்து மகாத்மா ஸ்தூபி நிதிக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். சமர்ப்பித்த தொகை ரூ. 501-0-0.

இந்தக் கச்சேரி நடத்தி மகாத்மா ஸ்தூபி நிதிக்குக் காணிக்கை செலுத்தியான பலன் மறுநாளே அவருக்குக் கிடைத்துவிட்டது என்று அறிகிறேன். இரண்டு பேசும் படங்களில் நடிக்க அவருக்கு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.



விகடகவி ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி



தருமபுரம் ஆதீனத் தலைவர் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் காசி யாத்திரை செல்லும் மார்க்கத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது மாஜி சென்னை மேயர் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களின் "பக்தி விலாஸ்" இல்லத்தில் தங்கி யிருந்தார்கள். ஸ்ரீ ராமசாமி நாயுடு மடாதிபதி அவர்களைப் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்ற காட்சியை மேலே காணலாம்.

★ குமரி முனை தமிழருடையதே

மார்ச் 13-ம் தேதி நடந்த சென்னை அசெம்பிளி கூட்டத்தில் திருவிதாங்கூர் தமிழ் நாட்டைப்பற்றிப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அதில் 50, 60 வருடங்களுக்கு முன் கன்னியா குமரியும் இன்னும் சில இடங்களும் இந்த மாகாணத்தில் (சென்னையில்)தானே சேர்ந்திருந்தது என்று ஸ்ரீ வேதரத்தினம் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு மந்திரி கனம் மாதவமேனன் அவர்கள் பதிலளிக்கையில் 'சரித்திர பூர்வமாகப் பார்த்தால் கன்னியா குமரி என்றுமே இம்மாகாணத்தினுள் இருக்கவில்லை' என்று பதில் சொல்லி யிருக்கிறார்.

1755-ம் வருடம் ஆற்காட்டு நவாப்புடைய தென்பிராந்திய கவர்னரான முடிமையா என்பவருக்குப் பணம் கொடுத்து இப்பொழுது நெல்லை ஜில்லாவுடனிருக்கும் களக்காடு என்னும் கிராமத்தைத் திருவாங்கூர் மகாராஜா விலைக்கு வாங்கினார். பின்னர் ஆற்காட்டு நவாபபான மகம்மதலி களக்காடு தனக்குச் சொந்தமானது என்றும் அதைத் தனக்கு விட்டுவிட வேண்டுமென்றும் வாதாடினர். அப்பொழுது திருவாங்கூர் மகாராஜாவும், ஆற்காட்டு நவாப்பும் ஆங்கிலேயரின் தாசர்களாக இருந்த காரணத்தினால் ஆங்கிலேயரின் முடிவுக்கே விடப்பட்டது. முடிவில் நவாபுக்கே களக்காடு கொடுக்கப்பட்டது. அப்பொழுது செங்கோட்டையும் நவாபின் ஆட்சியில் இருந்தது.

சில நாட்களுக்குப் பின் ஹைதராலியுடன் யுத்தம் செய்வதற்கு வேண்டி களக்காட்டிலும், செங்கோட்டையிலுமிருந்த ஆங்கிலேயரின் பட்டாளங்கள் சென்னை சென்றன. அப்பொழுது, மேற்கூறிய இரண்டு இடங்களையும் திருவாங்கூர் மகாராஜா பிடித்துக் கொண்டார். பின்னர் மீண்டும் நவாபுக்கும், திருவாங்கூர் மகாராஜாவுக்கும் சண்டை மூண்டது. திருவாங்கூர் மகாராஜா நவாபுக்குப்பயந்து அஞ்சல் கோவில் இருந்த ஆங்கிலேயரிடம் சென்று களக்காட்டையும், செங்கோட்டையையும் தன் ஆட்சியின் கீழ் வைத்திருக்கவும், நவாபைச் சமாதானப் படுத்தவும் செய்தால் சமஸ்தானத்திலுள்ள அத்தனை நல்ல மிளகையும் குத்தகைக்குத் தருவதாக வாக்களித்தார்.

அதனால் சென்னையிலிருந்த ஆங்கில அரசாங்கம் இஞ்சினியர் 'கால்' என்பவரை இருவருக்கும் சமாதானம் செய்து வைக்கும்படி அனுப்பிவைத்தது. அவர் களக்காட்டை நவாபுக்கு விட்டுவிட வேண்டு மென்றும் அதற்குப் பதிலாக குமரியையும், செங்கோட்டையையும் திருவாங்கூருடன் சேர்த்துக்கொள்ளலா மென்றும் சமரசம் செய்து வைத்தார். இது 1766-ம் வருஷம் நடந்தது. இப்படியாக குமரியும் செங்கோட்டையும் திருவாங்கூருக்குக் கிடைத்தது.

இந்த உண்மைகள், எல்லா திருவாங்கூர் சரித்திரப் புத்தகங்களிலும் காணப்படுகின்றன. மேற்கூறிய குறிப்பு எ. கே. மாத்யூ எழுதிய "A Concise High School History of Travancore" என்னும் சரித்திரப் புத்தகத்தில் 28, 29-ம் பக்கங்களிலிருந்து எடுக்கப்பட்டது.

நாகர்கோவில்
17—3—40

ஆர். சுந்தரம்.

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "இந்திரா" பாங்கெட்டு என்ற கடிதம் எழுதிய செகந்திராபாத் இந்திரா தேவிக்கும், "குமரி முனை தமிழருடையதே" என்ற கடிதம் எழுதிய நாகர்கோவில் ஆர். சுந்தரத்துக்கும் ரூ. 12—8—0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

பொருள்கள் இருக்கும் இடம் தெரியாமல் செய்து விடுவார்கள். முதலாளிகள், காங்கிரஸ் என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு, இரும்பு நெஞ்சம் படைத்த படையையும், ஏழை பங்காளன் பண்டிட்ஜியையும் ஆட்டி வைக்கிறார்கள். 'வரிச் சுமையை எங்களால் தாங்க முடியாது, ஆகையால் வரி போடாதீர்கள்' என்று கயமாகப் பேசுகிறார்கள். கடையில் கஷ்டப்படுபவன் மத்திய வகுப்பான். கண்ட்ரோல் எடுபட வேண்டுமானால் முதலாளிகள் கூட்டாக நேர் அறிக்கை—அதாவது கண்ட்ரோல் எடுபட்ட பிறகு பொருளின் விலையோ, அல்லது பொருளைப் பதுக்கல், அதிகப்படுத்தல் நடக்காது என்று அறிக்கை விட வேண்டும்.

திருமாநிலையூர்
19—3—50

வெ. சிதம்பரம்

○●○

உண்மைத் தொண்டு!

இந்த வாரக் 'கல்கி' இதழில் ராம கிருஷ்ண உபநிஷதம் என்ற தலைப்பில் நம் அரும் பெருந் தலைவர் ராஜாஜி அவர்கள் எழுதிய 'பரம்பொருள்' என்ற பகுதியைக் கண்டு பரமானந்த மடைந்தேன்.

தற்காலத்தில் நம் தமிழகத்தைப் பெரிதும் பாதித்து வருவது நாத்திகப் பிரசாரமே. எங்கும் கடவுள் இல்லை என்பதே பேச்சாக உள்ள நிலைமையை மாற்றி, எங்கும் கடவுளுண்டு என்னும் மனப்பான்மையை உண்டாக்க எழுந்த உண்மைக் கருத்தே ராஜாஜி அவர்களின் ராமகிருஷ்ண உபநிஷதமாகும்.

"நம்முடைய சிற்றறிவாம் சிறு குட்டைத் தண்ணீரை ரொம்பவும் கலக்கி விட்டால் சேறுதான் மேலே வரும்" என்ற இடம், வெறும் வாதம் பேசும் அறிஞர்களின் அறிவு நிலையை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகிறதல்லவா?

"தயிரில் வெண்ணெயைக் கடைவது போல் பக்தியுடன் உள்ளத்தில் விருப்பத்தைக் கடைந்தால் கடவுளைக் காணலாம்" என்ற வாக்கியம் உண்மையிலேயே நம் கண் முன்னே காணும் ராமகிருஷ்ணராகவே ராஜாஜியை ஆக்கிவிடுகிறது.

மேட்டூர்
19—3—50

கோ. வெ. இராமசாமி

○●○

* "இந்திரா" யானைக்குட்டி

நமஸ்காரம். நீங்கள் அனுப்பிச்ச யானைக் குட்டி எல்லாம் சவுக்கியமா வந்து சேர்ந்தது. பதினஞ்சு யானைக் குட்டியை அனுப்பிச்சுட்டு, ரெண்டு யானைக்குட்டிதான் அனுப்பிச்சிருக்கேன்னு பொய்தானே சொன்னேள்? நீங்களே கூட்டி பாருங்களேன். "கல்கி" அட்டையிலே ஒண்ணு, பாலர் மலரிலே பன்னிரெண்டு, உங்கள் கடுதாசோடே ரெண்டு. மொத்தம் எத்தனை? நீங்க இத்தனை யானைக் குட்டி அனுப்பிச்சது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா ராஜூ மட்டும் இந்தக் கடுதாசு யானைக்குட்டி ஒண்ணும் வேண்டாம், நெஜ யானைக்குட்டி தான் வேணும்னு புடிவாதம் புடிக்கிறான். சவுடிப் பயல், அப்படிதான் பண்ணுவான். ஏன், மாமா! தெரு மாமாவும் ஜெப்பான் கொழந்தைகளுக்கு உங்க மாதிரியே கடுதாசு யானைக்குட்டியே அனுப்பறதுக்கு என்ன? இந்திராங்கற நெஜ யானைக் குட்டியை அனுப்பிச்சாராம். அதுக்காக எங்க பள்ளிக்கூடத்துப் பசங்கள் எல்லாம் என்னைப் பார்த்து, "இந்திரா யானைக்குட்டி, இந்திரா யானைக் குட்டி"ன்னு பரியாசம் பண்றா. எனக்கு ரொம்ப வெக்கமா இருக்கு. இன்னமே ஒரு யானைக்குட்டிக்கும் என் பெயரை வைக்க வேண்டாம்னு நேரு மாமாகிட்டே சொல்லுங்கோ. இனிமே உங்களுக்கு நான் பென்சிலாலேதான் கடுதாசு எழுத முடியும்போல இருக்கு. இதை அம்மாவுடைய பேனாவாலெ எழுதி அதையும் ஒடெச்சுட்டேன். அம்மா என்னை அடிக்க வாரத்துக்குள்ளே நான் பாண்டி விளையாட ஓடிப்போயிடறேன். ஜெய் ஹிந்த்!

செகந்திராபாத்
17—3—50

இந்திரா கௌரி

○●○

அரசாங்கத்தின் கடமை

நம் நாட்டில் யுத்த காலம் முதல் இன்று வரை எந்த வியாபாரியும் நஷ்டம் ஏற்பட்டு வியாபாரத்தை நிறுத்தியதாகவும் 'மஞ்சள் காகிதம்' கொடுத்ததாகவும் தெரியவில்லை. தொழிலாளர் உரிமை பற்றிய சட்டங்களினால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் விரோத மனப்பான்மையை உண்டாக்கி இருக்கிறது என்று அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகிறார்கள் சிலர். ஆனால் ஒரு உண்மையை உணர வேண்டும். சட்டம் இல்லை என்றால் வியாபார மந்தத்தைக் காரணம் காட்டிப் பல தொழிலாளிகளை எத்தனையோ நாட்களுக்கு முன் வேலையை விட்டு நீக்கியிருப்பார்கள் சில முதலாளிகள்.

வியாபாரிகளும் பெரிய மனிதர்களும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வதில்லை என்ற காரணத்தினால்தான் அரசாங்கம் சட்டத்தை ஏற்படுத்த வேண்டியதாயிற்று.

எந்தச் சட்டத்தையும் கடுமையாக அமுல் நடத்தாததினால் நமது அரசாங்கம் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்து கொள்கிறது என்பதையும் நன்றாக உணர வேண்டும்.

குளித்தலை
10—3—50

கே. எஸ். கிருஷ்ணன்

வட்ட மேஜை

நமது பாக்கியம்

மெய்ப்பொருளின் தன்மையைப் பற்றிப் பாமரர்களும் படித்தவர்களும் அறிந்து கொள்ளும்படி எழுதுவதற்கு ராஜாஜியே தகுந்த ஆச்சாரியர் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக அவர் எழுதிய "உபநிடதப் பலகணியும்" "கண்ணன் காட்டிய வழி"யும் "ஆத்ம சிந்தனை"யும் அவ்வாறு அமைந்திருக்கின்றன. பெரிய பண்டிதர்களின் வேதாந்த வியாக்கியானங்களைக் காட்டிலும் இந்நூல்கள் பெரும்பாலோரை ஆகர்ஷித்து விட்டன என்பதும் யாவரும் அறிந்ததே! 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலும் ஒளி உண்டா'கத்தானே செய்யும்?

கற்களுடன் கலந்து கவனிப்பாரற்றுக் கிடக்கும் மாணிக்கத்தை அந்த நுட்பம் அறிந்தவன் பிரித்து எடுத்து, பட்டை தீட்டி அதன் பேரொளியில் பிறரைப் பிரமிக்கச் செய்து விடுகிறான். "உம்மால் கடவுளை நேரில் காட்ட முடியுமா?" என்று முரட்டு வாதம் செய்துகொண்டு வந்தார் ஸ்ரீ விவேகானந்தர். அவரை, உலகத்திற்கு இதுவரை கிடைத்துள்ள மாணிக்கங்களில் எல்லாம் சிறந்த பேரொளி வீசும் மாணிக்கமாகப் பட்டை தீட்டியவர் பகவான் ராமகிருஷ்ணர். சர்வ மதத்தவரும் ஒருமுகமாக விவேகானந்தரின் அறிமேதையைக் கண்டு அதிசயித்துப் பாராட்டித் தலை வணங்கும்படி ஞான ஒளி வீசும் லோகாச்சாரியராய் ஆக்கியதும் மகான் ராமகிருஷ்ணரின் உபதேசங்கள். அத்தகைய உபதேசங்களுக்கு விளக்கம் ராஜாஜியே எழுதுவதென்றால் அது நாமெல்லாம் செய்த பாக்கியமே அல்லவா?

பங்களூர்
11—3—50 ரா. சிதம்பரம்

○●○

தமையனாரின் வருத்தம்

என் நண்பன் ஒருவனுக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவள் மிகவும் அடக்க ஒடுக்கமான பெண். அவள் எஸ். எஸ். எல். ஸி. பாஸ்செய்தவள். படிப்பும், அழகும், குணமும் ஒருங்கே சேரவே அவளை மணந்து கொள்வதாக ஒருவன் சொன்னான். அவனும் என் நண்பன்தான். அவனுடைய குடும்பத்தாரும் கலியாணத்திற்கு இசைந்தனர். பெண்ணும் பெண்ணின் குடும்பத்தாரும் இசைந்து விட்டனர். பிள்ளையின் குடும்பத்தார் ஜாதகமும் சரியாகப் பொருந்துகிறதென்று சொல்லி விட்டனர், ஆனால் பெண்ணின் தமையனார் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் ஜாதகத்தைக் காட்டி, ஜாதகம் பொருந்தவில்லை என்று சொல்லி விட்டார். என் நண்பன் முதற்கொண்டு சகலரும் அவரிடம் கெஞ்சினர். அவர் மிகவும் பிடிவாதமாக கலியாணத்திற்குச் சம்மதிக்க முடியாதென்று சொல்லி விட்டார். வீட்டுக்குப் பெரியவரான அவருடைய வாக்குக்கு எல்லோரும் சம்மதித்து விட்டனர். பெண்ணை மணக்கவிருந்த என் நண்பன் அவரிடம் போய் மன்றாடியும் பயனில்லை.

சில மாதங்கள் கழித்துப் பெண்ணின் தமையனார் மூலம் ஒரு ஜாதகம் வந்தது. அது சர்வ லக்ஷணங்களும் பொருந்தியிருந்ததாம். அந்தப் பிள்ளைக்கு ரூ. 1500 வரதக்ஷிணையும் கொடுத்து அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்தனர்.

சில மாதங்களுக்கு முன் அந்தப் பையன் தனக்குச் சீர் வகையறா அதிகம் செய்யவில்லை என்று சொல்லிவிட்டுப் பெண்ணைப் பிறந்தகத்தில் கொண்டுவிட்டு விட்டான். அப்போது பெண்ணின் தமையனார் "அந்தப் பையன் வரதக்ஷிணை சீர் ஒன்றும் வேண்டாமென்று சொன்னான். அவனுக்குக் கொடுக்காமல் ஜாதகம் சரியாக இருக்கிறதென்று இவனிடம் கொண்டு பெண்ணைக் கொடுத்தேனே" என்று தம்மையே நொந்து கொண்டார்.

(மேலே சொன்னவற்றைப் பார்த்தால் 'ஆள் நன்றாகக் கதை ஜோடிக்கிறான்' என்று பரிகசிப்பார்கள் சில நேயர்கள். பதினைந்து வயதுப் பையனான எனக்குக் கதை ஜோடிக்கத் திறமை கிடையாது.)

ஆதம்பாக்கம்
13—3—50 எம். ராஜாராமன்

○●○

கண்ட்ரோல் விஷயம்

இந்த வாரக் 'கல்கி'யில் வெளியான "அனாதைகள் யார்?" என்ற கட்டுரையைப் படித்தேன். நீங்கள் சொல்லிய மத்திய வகுப்பாரின் அனாதையில் சேர்ந்தவன் நான். இன்று நம் நாட்டிலுள்ள பெரிய, பெரிய முதலாளிகள், டாட்டாக்கள், பிர்லாக்கள் போன்றவர்கள் 'கண்ட்ரோல் ஒழிய வேண்டும்' 'ரேஷன் அகற்றப்பட வேண்டும்' என்று ஓலமிடுகிறார்கள். அப்பொழுதுதான் மத்திய வகுப்பாரின் தரம் உயரும் என்று பறைசாற்றுகிறார்கள். ஆனால் இதற்கு முன் ஜவுளிக் கண்ட்ரோலும், ரேஷனும் எடுத்ததால் ஏற்பட்ட கஷ்டங்களும் துன்பங்களும், மத்திய வகுப்பார் அறிந்ததே. இன்று கண்ட்ரோலை எடுத்து விட்டால், நாளை இம் முதலாளிகள், கண்ட்ரோலில் கிடைத்த

சர்தார் சொல்கிறார்



நமது சமுதாயத்தில் பொதுவாக நாம் அனைவருமே செலவாளிகளல்ல; நம்மில் பொதுச் சேவகர்களானாலும் தொழிலாளிகளானாலும் விவசாயிகளானாலும் வியாபாரிகளானாலும் வக்கீல்களானாலும் வர்த்தகர்களானாலும் சேமித்து வைக்கும் பழக்கம் நம் பிறப்புடனேயே பிறந்தது. இவர்களெல்லாம் இயன்றவரை ஒவ்வொரு காசையும் சேமித்து வைக்க வேண்டும்; அப்படி சேமித்ததை தேசிய முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுமாறு அரசாங்கத்துக்கு அளித்து ஆதரிக்க வேண்டும்.

“குறைவாக செலவழிக்க வேண்டும், நிறைய சேமிக்க வேண்டும்; சேமித்ததில் முடிந்தவரை முதலீடாகச் செய்ய வேண்டும்” என்பதே நம் தேசத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோளாக வேண்டும்; அதுமட்டுமல்ல இந்த குறிக்கோளை உங்கள் வாழ்க்கை முன்னேற ஒரு கொள்கையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதன்மை வாய்ந்த முதலீடு எது தெரியுமா ....?

.... நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்

5 வருட, **7** வருட, **12** வருட சர்டிபிகேட்டுகள் கிடைக்கும்

3% $3\frac{1}{2}$% $4\frac{1}{6}$% சத வித வட்டி விகிதம்

5 வருட, 7 வருட சர்டிபிகேட்டுகளை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். 12 வருட சர்டிபிகேட்டுகளை வாங்கிய தேதியிலிருந்து 18 மாதங்களுக்குப் பிறகே பணமாக மாற்றலாம்.

எல்லா தபாலாபீஸ்களிலும், நியமனமாகி அத்தாட்சி பெற்ற ஏஜண்டுகளிடமும், சேமிப்பு நிலையங்களிலும் கிடைக்கும்

○ ● ○

மற்ற விவரங்களுக்கு:

மாகாண தேசிய சேமிப்பு அதிகாரி சென்னை — 6

உளறிக் கொண்டிருக்கிறான்" என்றான் மஞ்சள் வர்ண வாதி.

கிழவி சிரித்தாள்.

"நீங்கள் இருவர் சொல்லுவதும் சரியே. வீண் சண்டை பிடிக்காதீர்கள். அந்த ஓணான் பல நிறம் கொள்ளும் பச்சோந்தி. அதனுடைய நிறம் அடிக்கடி மாறுவதை நான் கண்டிருக்கிறேன். போங்கள், சண்டை போட வேண்டாம்" என்றாள்.

கடவுளைப் பக்திக் கண்ணால் கண்டு அனுபவித்த மகான்களுக்குக் கடவுளின் உருவமும் அருவமும் பல உருவங்களும் தெரியும். கடவுளைக் காணாமல் பேச்சில் வல்லமை காட்டும் சமய வாதிகளுக்கு ஆண்டவன் சொரூபம் தெரிய மாட்டாது. தங்கள் அகங்காரத்தின் சொரூபத்தையே அவர்கள் கடவுளாகப் பாவித்து வீண்பேச்சில் காலம் கழிப்பார்கள்.

நான்கு கபோதிகள் ஒரு மடாதிபதியின் சிப்பந்திக் கூட்டத்தில் பிச்சை எடுக்கப் போனார்கள். அங்கே இருந்த யானையைத் தடவித் தடவிப் பார்த்தார்கள். யானைக்கார மாவுத்தன் இவர்களை வேடிக்கை செய்து கொண்டிருந்தான். "எப்படியிருக்கிறது யானை?" என்று கேட்டான்.

காலைத் தடவிப் பார்த்த குருடன் "கம்பம் மாதிரி இருக்கிறது இந்த மிருகம்" என்றான்.

"ச்சீ! மரக் கிளையைப் போல் அல்லவா இருக்கிறது? இதைப் போய்க் கம்பம்போல இருக்கிறது என்கிறாயே" என்றான் இரண்டாம் குருடன். இவன் தும்பிக்கையைத் தடவிப் பார்த்து விட்டு இப்படிச் சொன்னான்.

"என்ன நீங்கள் சொல்லுகிறீர்கள்? இது ஒரு பீப்பாய் மாதிரியல்லவோ இருக்கிறது?" என்றான் யானையின் வயிற்றைத் தடவிக் கொண்டிருந்த மூன்றாம் கபோதி.

"நன்றாய்ச் சொல்லுகிறீர்கள்! இதோ ஒரு முறம்போல இருக்கும் பிராணியை நீங்கள் பீப்பாய் என்றும் தடியென்றும் கம்பம் என்றும் உளறுகிறீர்களே!" என்றான் யானையின் காதைத் தடவிக் கொண்டிருந்த நான்காம் குருடன்.

பரம்பொருளின் சொரூபத்தைப் பற்றிச் சண்டை போடும் குருடர்களின் அறிவும் இம்மட்டே.

அட்டைப்பட விளக்கம்

இளவேனிற் காலம் ஆரம்பமாகிவிட்டது. இன்னும் கொஞ்ச நாளில் பள்ளிக்கூடங்கள் எல்லாம் மூடி விடுவார்கள். கிராமத்துச் சிறுவர்கள் கோலி விளையாடுவதில் மூழ்ந்து விடுவார்கள். பட்டம் பறக்க விடுவார்கள். கிட்டிப்புள் விளையாடுவார்கள்.

கிராமத்துச் சிறுமிகள், நொண்டிக்கொண்டு, 'ஆயிரம் பாண்டி' ஆடத் தொடங்கி விடுவார்கள். எதிர்க் குதித்து ஏரோப்பிளேன் பாண்டியும் ஆடுவார்கள். கண்ணைப் பொத்திக் கண்ணாமூச்சியும் விளையாடுவார்கள்.

இவ்விதம் தெரு வீதியில் வந்து விளையாடும் பருவம் கடந்த மங்கையர்களுக்கும் இந்த இளவேனிற் காலத்தில் வெளியில் சென்று உலாவ ஆசையுண்டாகும்.

மத்தியான நேரங்களில் ஊருக்கு அருகிலுள்ள தோப்புக்களைத் தேடிச் செல்லுவார்கள். மாமரங்களிலும், புளிய மரங்களிலும் ஊஞ்சல் கட்டி ஆடுவார்கள்.

கால் தரையை மிதித்து, கைகள் இருபுறமும் கொடிகளைப் பற்றி மேலும் கீழும் ஊஞ்சல் ஆடும் போது பெண்களின் பவள வாய் தானாகவே பாடத் தொடங்கும்.

கல்யாணங்களில் நலங்கு சமயங்களிலும் மற்றப் பண்டிகை சமயங்களிலும் மாப்பிள்ளையையும் பெண்ணையும் உட்கார வைத்துப் பாடுவார்கள் அல்லவா? அந்தப் பாடல்கள் எல்லாம் மீனாக்ஷிக்கும் சுந்தரேசுவரருக்கும் நடந்த நலங்குப் பாடல்களாக இருக்கும். அடுத்த வீட்டு அலமுவுக்குக் கல்யாணம் நடந்தாலும், எதிர்த்த வீட்டு மாமி, "கௌரீ கல்யாணம்" என்று, பார்வதி தேவிக்கும் பரமேசுவரனுக்கும் உலகம் தோன்றிய காலத்துக்கு முன்பே நிகழ்ந்த கல்யாணத்தைப் பற்றித்தான் பாடுவாள்.

அவ்விதம் நமது இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கும் பெண்களும், ஊசல் ஆடும் போது தேவி ஸ்ரீ ரங்கநாயகி ஊசலாடுவதாகப் பாடுகிறார்கள்.

கொந்தாரும் குழலசைய ஆடிர் ஊசல்
குலமகரக் குழையசைய ஆடிர் ஊசல்
நந்தாரும் கரமசைய ஆடிர் ஊசல்
நல்கியநூல் இடையசைய ஆடிர் ஊசல்

* * * *

செந்தாளில் சிலம்பசைய ஆடிர் ஊசல்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல்

இவ்வாறு ஆனந்த பைரவி ராகத்தில் இனிமையாகப் பாடிக் கொண்டு இரு இளம் பெண்கள் ஊசல் ஆடும் காட்சியை ஓவியர் சந்திரா இந்த இதழ் அட்டையில் தீட்டியிருக்கிறார்.

போதெல்லாம் பிற மதத்தினரைக் கௌரவித்துப் பாராட்ட வேண்டும். இப்படிச் செய்வதினால் ஒருவன் பிற மதத்தினருக்கு உதவி செய்வதேயன்றித் தன் சமயத்தின் பெருமையையும் வளர்ப்பான். இப்படிச் செய்யாமல் ஒருவன் பிற சமயங்களைக் குறைத்துப் பேசியும் பிற சமயத்தினரை அவமதித்தும் நடந்து கொண்டால் தன் சமயத்துக்கே தீங்கு இழைப்பவனாவான். பிறர் கொள்கையை ஒருவன் தூஷிப்பதால் தன் மதத்துக்குப் பெருமை சம்பாதிப்பானா? ஒருநாளும் இல்லை. கட்டாயம் தன்னுடைய மார்க்கத்தின் புகழ் இதனால் தாழ்ச்சி அடையும்; பெருமை அடையாது. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கொள்கைகளை நன்றாகக் கற்றுணர்ந்து அவ்வழியில் பக்தியை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இது அசோக ராஜா பிரியதரிசனனுடைய கோரிக்கை என்று அனைவரும் பிரசாரம் செய்வார்களாக.”

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் பகவத் கீதையில் கண்ணன் சொன்ன உபதேசமும், அதற்குப் பின் அசோக மன்னருடைய பன்னிரண்டாம் கல் சாஸனமும், பிறகு ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசமும், நம்முடைய வாழ்நாளில் அவதரித்து நமக்குப் பல துறைகளிலும் வழிகாட்டிய காந்தியடிகள் இட்ட ஆணையும் எல்லாம் ஒரேவிதமாகவும் தெளிவாகவும் இருப்பதை உணர்ந்து அந்த ஆணைப்படி உறுதியாக நின்று நடந்து கொள்வோமாக.

இரண்டு பிள்ளைகள் மரத்தின் மேல் இருந்த ஒரு ஓணானின் நிறத்தைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

“நன்றாகப் பார். அந்த ஓணான் சிவப்பு நிறம்; நீ குருடனைப் போல் மஞ்சள் என்றாயே!” என்றான் ஒருவன்.

“பைத்தியக்காரனே! நீதான் குருடன். மஞ்சள் ஓணானைச் சிவப்பு என்கிறாய்!” என்றான் மற்றவன்.

இப்படியே விவாதம் முற்றிப் போயிற்று. பிறகு அவர்கள் அந்தத் தோப்பில் ஒரு குடிசையில் இருந்த கிழவியைக் கண்டு அவளை மத்தியஸ்தம் செய்யச் சொன்னார்கள்.

“உங்களுக்குள் என்ன சண்டை?” என்று கிழவி கேட்டாள்.

“அந்த மரத்தில் பார்! ஒரு சிவப்பு ஓணான் இருக்கிறது. இந்தப் பயல் அது மஞ்சள் என்று சொல்கிறான். என்னைக் குருடன் என்கிறான். நீ பார்த்துச் சொல். சொன்னால் ஒருவேளை அந்த மடையன் ஒப்புக் கொள்வான்” என்றான் சிவப்புக் கட்சிக்காரன்.

“அம்மா! நீயே பார்த்துச் சொல். மஞ்சள் ஓணானை இந்த முரடன் சிவப்பு, சிவப்பு என்று





ராமகிருஷ்ண உபநிஷதம்


2. சமய பேதங்கள்

"பல்வேறு வழிகளில் நாம் கடவுளை உபாசித்துக் காட்சியும் அருளும் பெறலாம். ஆற்றங் கரையில் பல படித் துறைகள் உண்டல்லவா? ஆனந்த வெள்ளமாகிய பரம்பொருளுக்கும் பல படித்துறைகள் உண்டு. எந்தப் படித் துறையிலும் இறங்கித் தண்ணீர் மொண்டு கொள்ளலாம், குளிக்கலாம். எந்த சமயத்தையும் எந்த முறையையும் தூய உள்ளத்துடனும் பக்தியுடனும் பின்பற்றினால் போதும், ஆண்டவனை அடையலாம். ஒரு வீட்டின் மேல்மாடிக்குப் படிக்கட்டு வழியாக ஏறலாம்; மூங்கிலை வைத்துத் தொத்தியும் ஏறலாம்; கயிற்றைப் போட்டு அதைப் பிடித்தும் ஏறலாம். இவ்வாறே பல சமயங்களும் பல வழிகளைக் காட்டுகின்றன.

"அவரவர் தத்தம் மதத்தின்படி கடவுளை உபாசித்தல் நலம். கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்து மார்க்கத்தையும் முஸ்லிம் மக்கள் முகம்மது நபி காட்டிய மார்க்கத்தையும் இந்துக்கள் ரிஷிகள் உபதேசித்த முறையையும் அனுசரிப்பதே மேலானது. பக்தியோடு வழிபடும் மக்கள் எந்த மதத்தினராயினும் சரி, பிற மதத்தினரை மிக்க வினயத்துடன் கவுரவிப்பார்கள். எல்லாச் சமயங்களுமே நம்மைப் பரம்பொருளிடத்தில் சேர்ப்பிக்கும்."

இவ்வாறு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நூறு வருஷங்களுக்கு முன் உபதேசித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அசோக மன்னர் எழுதி வைத்த கல் சாஸனத்திலும் இதையே காண்கிறோம்.

"தேவர்களின் அன்புக்குரிய பிரிய தரிசனன் சாஸனம்: அரசர் எல்லாத் துறவிகளையும் இல்லறம் நடத்தும் கிரஹஸ்தர்களையும் அவர்கள் எந்த மதத்தினராயினும் அவர்களுக்குத் தக்க தானங்களைத் தந்தும் மற்ற வழிகளில் கவுரவித்தும் சந்தோஷப் படுத்துகிறார். மகா ராஜாவுக்கு அதிக மகிழ்ச்சி தருவது எது வென்றால் எல்லா மதத்தினரும் தத்தம் முறையில் தத்தம் ஆத்ம சக்தியை விருத்தி செய்து கொள்வதே. பல துறைகளின் மூலமாக ஒருவன் இந்த ஆத்ம சக்திப் பெருக்கத்தை அடையலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையான விஷயம் ஒன்று உண்டு. அது யாதெனில், தன் சமயத்தை மேம்படுத்துவதற்காகப் பிறர் சமயத்தைத் தூஷிக்கத் தோன்றும்; அவ்வாறு செய்யாமல் சமயம் வாய்ந்த



ளத்துக்குப் போயிருப்பதனால் எல்லாம் ஒழுங்காய் நடைபெறுகிறது. இல்லாவிட்டால், உருது பாஷைக்கு விரோதமாய்க் கிளர்ச்சி ஆரம்பித்தது போல் 'கிழக்கு வங்காளமும் மேற்கு வங்காளமும் ஒன்று' என்று கூட அவர்கள் ஆரம்பித்திருப்பார்கள்.''

''அப்படியானால் கிழக்கு வங்காளத்தில் எல்லாம் சரியாக நடைபெறுகிறது என்று சொல்லுங்கள். அங்கேயுள்ள ஹிந்துக்கள் எல்லாரையும் துரத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்......''

''யார் சொன்னது? ஹிந்துக்கள் இருந்தால் அல்லவா அவர்களைத் துரத்த வேண்டும்?''

''அப்படியானால் கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்களே இல்லையா?''

''ஹிந்துக்களும் இல்லை; முஸ்லிம்களும் இல்லை. பாகிஸ்தானில் வசிப்பவர்கள் எல்லாம் பாகிஸ்தானிகள். அப்படி நாங்கள் 'பாகிஸ்தானிகள் அல்ல; ஹிந்துக்கள்' என்று சொல்லிக்கொள்கிறவர்கள் ஓடிப்போக வேண்டியதுதானே?''

''அப்படியே வைத்துக் கொள்ளலாம். அவ்விதம் ஓடிப் போகிறவர்களை வழி மறித்து ரயிலை மறித்து அடித்துக் கொல்லுவானேன், ஐயா?''

''பொய்; சுத்தப் பொய்! வங்காளிகளே கற்பனை செய்வதில் சமர்த்தர்கள். அதிலும் வங்காளிப் பத்திரிகைக்காரர்கள்...அதெல்லாம் இருக்கட்டும்! ஏதேதோ கேட்டுக் கொண்டிருக்கிறாய், நானும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேனே? நீ யார்?'' என்று லியாகத் அலிகான் கேட்டபோது அவருடைய கண்களில் தீப்பொறி எழுந்தது.

மெள்ள மெள்ளத் தயங்கித் தயங்கி, ''நானும் ஒரு பத்திரிகை நிருபர்தான்!'' என்று சொன்னேன்.

''ஹா! ஹா! நீயும் பத்திரிகை நிருபனா? எங்கிருந்து வந்த பத்திரிகை நிருபன்?'' என்று பாகிஸ்தான் பிரதமர் கேட்டபோது அவர் மூக்கிலிருந்தும் ஜுவாலை எழும்பியது.

''மதராஸிலிருந்து வந்தேன் ஸார்!'' என்றேன்.

''ஆகா! மதராஸிப் பத்திரிகைக்காரர்கள் வங்காளிகளை விட மோசமானவர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் நிஜத்தைக் கூட நிஜம்போல் சொல்லி விடுவீர்கள்! பொய்யை என்ன மாதிரி சொல்ல மாட்டீர்கள்! என்னை ஏமாற்றி விட்டாயல்லவா? உன்னை என்ன செய்கிறேன், பார்! இருபது ஜெயிலில் உன்னைப் போடச் செய்கிறேன்.''

''இருபது ஜெயிலில் போட வேண்டாம், ஸார்! கான் அப்துல் கபூர்கான் இருக்கும் அந்த ஒரு ஜெயிலிலே போட்டால் போதும், ஸார்!''

''ஓஹோஹோ! இப்போது தெரிந்தது உன் அந்தரங்க நோக்கம். உன்னை இருபது ஜெயிலிலும் போட மாட்டேன்; ஒரு ஜெயிலிலும் போட மாட்டேன். ஒன்பது ஆகாச விமானங்களில் உடனே ஏற்றி அனுப்புவேன்!'' என்று சொல்லிவிட்டு, லியாகத் அலிகான் தம் நாற்காலியிலிருந்து எழுந்தார்.

உடனே நான் மூர்ச்சையடைந்தேன்; இல்லை, அவர் மூர்ச்சை உடைந்தார்; இல்லை, நான்தான் மூர்ச்சையடைந்தேன்; இல்லை, இல்லை, ... ஆண்டவனே! அல்லாவே! அப்போது எனக்கு ஏற்பட்ட பயத்தில் நான் மூர்ச்சையடைந்தேனா, அவர் மூர்ச்சையடைந்தாரா என்பதே தெரியாமல் போய்விட்டது.

பாகிஸ்தான் போனதின் பலன் இதுதான்! இனிமேல் அந்தப் பக்கம் தலை காட்டுகிறேனா, பாருங்கள்!

"எனக்குக் காரியதரிசியும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். போ!"

"நான் போகிறேன், ஸார்! நீங்கள் எப்போது போகப்போகிறீர்கள்?"

"எங்கே?"

"மாஸ்கோவுக்குத்தான்!"

"மாஸ்கோவுக்கு நான் ஏன் போக வேண்டும்? மாஸ்கோதான் நான் இருக்குமிடத்துக்கு வரட்டுமே?"

"அச்சா! பஹுத் அச்சா! அப்படித்தான் பாகிஸ்தான் சுயமரியாதையை நிலை நாட்டவேண்டும். அப்படியானால் நீங்கள் அமெரிக்காவுக்குக் கூடப் போகப் போவதில்லையோ?"

"ஒருநாளும் இல்லை."

"பிரஸிடெண்ட் ட்ரூமன் தங்களுக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேனே?"

"ட்ரூமன் அழைத்திருக்கிறார்; ட்ரூமனைப் போல் இன்னும் பதினாயிரம் பேர் அழைத்திருக்கிறார்கள். அழைத்தால் நான் போய் விடுவேனா?"

"கூடவே கூடாது! அழைத்த இடத்துக்குப் போகக்கூடாது. அழைக்காத இடத்துக்குத்தான் போக வேண்டும். மேலும் இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு அமெரிக்காவுக்குப் போய்விட்டு வந்திருக்கிறார். அவர் போன இடத்துக்குத் தாங்கள் போகவாவது?"

"என் மனதை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறாய்! அந்த மனிதர் மிதித்த இடத்தையே நான் மிதிக்கப் போவதில்லை. அவர்கூட என்னைக் கல்கத்தாவுக்குக் கூப்பிட்டார். நான் வர முடியாது என்று சொல்லிவிட்டேன்."

"கல்கத்தாவுக்குக் கூப்பிட்டது மட்டுமா? உங்களோடு டக்காவுக்கு வருவதாகவும் சொன்னார். நீங்கள் முடியாது என்று சொல்லி விட்டீர்கள். நீங்கள் மட்டும் தனியாக டக்காவுக்குப் போய் வந்தீர்கள். ஸார்! கிழக்கு வங்காளத்தில் நிலைமை எப்படியிருக்கிறது?"

"எப்படியிருக்கிறது? முழு முட்டாள்தனமாயிருக்கிறது. பஸ்லுல் ஹக் பிறந்த தேசம் பின் எப்படி இருக்கும்? இந்தக் கிழக்கு வங்காளம் எனக்குப் பெரிய தலைவலியாயிருக்கிறது. கிழக்கு வங்காளத்தைத் தொலைத்துத் தலை முழுகக்கூட எனக்குச் சம்மதந்தான். காஷ்மீரைக் கொடுத்து விடுவதாயிருந்தால்! ஆ! காஷ்மீர்! என்ன அழகான தேசம்! என்ன மலைகள்! என்ன காடுகள்! என்ன நீரோடைகள்! என்ன புஷ்பங்கள்!..."

"காஷ்மீர் அழகான தேசந்தான்! ஆனால் அது உங்களுடைய கைக்கு வருமா? வருவதற்கு வழி உண்டா?"

"வழி இல்லாவிட்டால் கண்டுபிடித்தாகவேண்டும். அதற்காகத்தான் ஸர் ஸபருல்லாகானை அமெரிக்காவிலேயே வைத்திருக்கிறேன். காஷ்மீரைக் கையில் வாங்கிக் கொள்ளாமல் திரும்பி வராதே" என்று சொல்லியிருக்கிறேன்.

"ஸர் ஸபருல்லாகானிடம் உங்களுக்கு அவ்வளவு அபாரமான நம்பிக்கை போலிருக்கிறது. எப்படியும் அவர் பலே கெட்டிக்காரர் தான்!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர் என்ன பிரமாத கெட்டிக்காரர்?, உண்மையைச் சொல்லப் போனால்..."

"ஓஹோ? அதுகூடச் சில சமயம் சொல்வது உண்டோ?"

"நடுவில் குறுக்கிடாதே! ... ... ஸர் ஸபருல்லாவிடம் நான் அவ்வளவாக நம்பிக்கை வைக்கவில்லை; அதைவிட அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில்தான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன்!"

"சரியான பேச்சு! இந்தியாவின் பலம் அதிகமாக ஓங்குவதில் அமெரிக்காவுக்குச் சிரத்தை இருக்க முடியாதுதானே?"

"'இந்தியா' 'இந்தியா' என்று உளறிக் கொண்டிராதே! இந்தியா என்று ஒரு தேசமே இனிமேல் கிடையாது. 1947-ம் வருஷம் ஆகஸ்டு 15-ந் தேதி இந்தியா மறைந்து விட்டது. இனிமேல் பாகிஸ்தான் ஒன்று; பாரத ஸ்தான் ஒன்று. பாரத ஸ்தானிடம் அமெரிக்கா அதிக சலுகை காட்ட முடியாது. ஜவாஹர்லால் நேரு ஆயிரம் தடவை அமெரிக்காவுக்குப் போனாலும் என்ன? நாளைக்கு ருஷியாவுடன் யுத்தம் என்றால், பாரதீயர்கள் 'அஹிம்சை' என்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விடுவார்கள்..."

"அந்த நம்பிக்கையின் பேரில்தான் கிழக்குப் பாகிஸ்தானில் அப்படியெல்லாம் நடக்கிறதாக்கும்!"

"எப்படியெல்லாம் நடக்கிறது? நீ என்னத்தைக் கண்டாய்?"

"நான் ஒன்றும் காணவில்லை, ஐயா! நான் அந்தப் பக்கம் போகவே இல்லை. நீங்கள் போய்க் கண்டு வந்திருக்கிறீர்களே, உங்களை நான் கண்டு கேட்கலாம் என்று வந்தேன்!"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"கிழக்குப் பாகிஸ்தானத்தில் பிரஜைகள் எல்லாரும் சௌக்கியமா?"

"சௌக்கியத்துக்கு என்ன குறைவு? எல்லோரும் சௌக்கியந்தான். ஆனால் பரம முட்டாள்கள்! இந்த வங்காளிகளைப் போல் மூடர்களை நான் எங்குமே பார்த்ததே யில்லை."

"வங்காளிகள் எல்லாரையும் சேர்த்துச் சொல்கிறீர்களே? வங்காளி முஸ்லிம்கள் கூட......"

"சந்தேகமேயில்லை; அவர்களும் பரம முட்டாள்கள்தான். பஞ்சாபிலிருந்து சில உத்தியோகஸ்தர்கள் கிழக்கு வங்கா

லியாகத் அலிகான் பேட்டி

(நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்)

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகான் பெயரைக் கேட்டாலே எனக்குப் பயமாயிருக்கும். அகில இந்திய ரேடியோவில் அவருடைய பெயரைச் சுத்த உருது உச்சரிப்புடன் 'லியாஹ்ஹ் ஹ்ஹ்க்கத் அலி காஹ்ஹ்ன்' என்று சொல்லக் கேட்டு நான் பல முறை மிரண்டு போனதுண்டு. ஆனாலும் அப்படிப்பட்ட பயங்கரமான பெயரையுடைய மனிதரை இப்போது நான் சென்று பார்த்தே தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

நல்ல வேளையாக நான் அவர் எதிரில் சென்று நின்றபோது லியாகத் அலி பத்திரிகை படிப்பதில் மூழ்கியிருந்தார். படிக்கும்போது அவர் முகம் எனக்குத் தெரியாவிட்டாலும் பல்லை நற நற வென்று கடிக்கும் சத்தம் கேட்டது. என்னுடைய பீதி இன்னும் அதிகமாயிற்று. "இப்படி யாரைப் பல்லிலே கொடுத்துக் கடிக்கிறாரோ? ஸ்டாலினையோ, ட்ருமனையோ, ஆட்லியையோ அல்லது நமது வல்லபாய் படேலைத்தானோ?" என்று நான் எண்ணிக் கொண்டே இன்னும் கொஞ்சம் தொடை நடுங்கினேன். தொடையிடம் அநுதாபத்தினால் முழங் கால்கள், முழங் கைகள், விரல்கள், விரல் நகங்கள் எல்லாம் நடுங்கின. சட்டைப்பையில் மாட்டியிருந்த பவுண்டன் பேனாவும் நடுங்கியது.

"போக்கிரிப் பயல்கள்! பத்மாஷ்கள்! அயோக்யர்கள்! நிஜம் சொல்லுகிற காவாலிகள்!" என்று லியாகத் அலிகான் முணு முணுத்தார்.

"இரும்புத்திரையாம்! இரும்புத்திரை! இரும்புத்திரை போடாமல் இவர்களுக்காக வெள்ளித் திரையும் தங்கத் திரையும் போடுவார்களோ!" என்றார்.

என் மனதில் அப்போது ஒரு மிகப் பீதிகரமான சந்தேகம் உதித்தது! அதாவது பத்திரிகை நிருபர்களைத்தான் இவர் இப்படிப் பல்லிலே போட்டு நற நற வென்று கடிக்கிறாரோ என்று!

பத்திரிகையைச் சுக்கு நூறாகக் கிழித்து கீழே போட்டுவிட்டு என்னைப் பார்த்தார்.

"பாகிஸ்தான் ஜிந்தாபாத்!" என்று நான் துள்ளிக் குதித்தேன்.

"பட்டாணிஸ்தான் முர்தாபாத்!" என்று அவர் குதித்துத் துள்ளினார்.

"சத்தியம் அஜயதே! பொய்யே வெற்றி தரும்!" என்றேன்.

"வஹ்வா! வஹ்வா! சரியான ஆசாமியாயிருக்கிறாயே! யார் நீ! எந்த ஊர்?" என்று கேட்டார்.

"ஹைதராபாத்துக்குத் தெற்கே...!"

"ஓஹோ! ஹைதராபாத்திலிருந்தா நீயும் வருகிறாய்?"

"ஜீ! ஹா(ம்)!" என்று ஒரு பாகிஸ்தான் நிஜத்தைச் சொன்னேன்.

"அப்படியானால் ரொம்ப சரி! உன்னோடு இன்னும் யார் யார் வந்திருக்கிறது? எத்தனை பீகங்கள்? எத்தனை பிள்ளை குட்டிகள்? எத்தனை யானைக் குட்டிகள்? எத்தனை பூனைக் குட்டிகள்?..."

"நஹீ(ம்)! நஹீ(ம்)! நான் மட்டுந்தான் வந்திருக்கிறேன்."

பாகிஸ்தான் பிரதம மந்திரியின் மனதில் சந்தேகம் ஏதோ தோன்றிவிட்டது. என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

"நீ மட்டும் எதற்காக வந்தாய்?" என்று கேட்டார்.

இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று ஒரு நிமிஷம் என் மனம் தத்தளித்தது. பிறகு சமாளித்துக் கொண்டேன்.

"சார்! போயும் போயும் என்னைக் கேட்கிறீர்களே? உங்களுக்குத் தெரியாத விஷயமா? உங்களுக்குத் தெரியாதது உலகத்தில் ஒன்றுமேயில்லையே? ட்ருமன் உங்களிடம் முதலாளி ராஜ்யம் நடத்துவது எப்படி என்று கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறாராம்! ஸ்டாலின் உங்களிடம் சர்வாதிகார அரசாங்கம் எப்படி நடத்துவது என்று உபதேசம் பெற விரும்புகிறாராம்! ஆட்லி உங்களிடம் பார்லிமெண்டு முறையைக் கற்றுக் கொள்ளப் போகிறாராம்! அப்புறம் மாசேதுங் உம்மிடம்......நான் சொல்வது சரியா, இல்லையா? தப்பாயிருந்தால் என்னைத் திருத்துங்கள். திருத்திக் கொள்வதற்கு நான் எப்போதும் தயார்! இந்த விஷயத்தில் உங்கள் 'டான்' பத்திரிகையும் நானும் ஒன்றுதான். 'பத்தாயிரம் முஸ்லிம்கள் கல்கத்தாவில் கொல்லப்பட்டார்கள்' என்று போட்டுவிட்டு பிறகு 'டான்' பத்திரிகை திருத்திக் கொள்ளவில்லையா? அந்த மாதிரி......"

"அதெல்லாம் இருக்கட்டும். நீ எங்கே வந்தாய்? அதைச்சொல்! உனக்கு என்ன வேண்டும்?"

"எனக்கா? எனக்கு ஒன்றும் வேண்டாம், ஸார்! ஆனால் உங்களுக்கு ஒரு காரியதரிசி வேண்டுமானால் சொல்லுங்கள்."

ளிக்கூடப் படிப்பு முடிந்த பின் ஜீவனத்துக்கு என்ன செய்வது என்று ஏங்காமல் தாங்கள் பயிற்சி பெற்ற தொழில் துறைகளில் ஈடுபடலாம்.

பள்ளிக் கூடங்களிலேயே தொழிற் படிப்பும் கற்றுக் கொடுப்பது பற்றிப் பேசுகிறார்கள். இது வீண் முயற்சியும் தண்டச் செலவுமேயாகும்.

பிள்ளைகள் எல்லாருக்கும் பள்ளிக்கூடப் படிப்புக்கே வழி செய்ய முடியாத சர்க்கார் தொழிற் கல்விக்கு எவ்வாறு வழி செய்ய முடியும்? ஆயிரம் பேர் பள்ளிக்கூடப் படிப்புப் பெறும் இடத்தில் நூறு பேர்தான் தொழில் பயிற்சி பெற முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆங்காங்கு ஆசிரமங்களும் குருகுலங்களும் சேவாலயங்களும் ஏற்படுத்திப் படிப்புடன் நல்ல முறையில் கைத்தொழிலும் சொல்லிக் கொடுக்கலாம். இந்த மாதிரி சிற்சில ஸ்தாபனங்கள் இருக்க முடியும். சில ஆயிரம் பிள்ளைகள்தான் நன்மையடைய முடியும். மாகாணத்திலுள்ள எழுபது லட்சம் குழந்தைகளுக்கும் கட்டாயமாகப் பள்ளிக்கூடங்களில் புத்தகக் கல்வியுடன் தொழிற் கல்வியும் புகட்ட இப்போதைக்கு ஏற்பாடு செய்வது அசாத்தியம்.

சாதாரணமாக ஒரு நாகரிக சுதந்திர தேசத்தில் உள்ள குழந்தைகள் 16 வயது வரையில் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கவேண்டும். இந்த முறையில் பார்த்தால் 68,000 பேர் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் போவது பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நியாயமாக 6 லட்சம் பிள்ளைகள் மேற்படி பரீட்சைக்குப் போக வேண்டும். ஏனெனில் சுமார் பதினாறு வயதுள்ள பிள்ளைகள் 6 லட்சம் பேர் சென்னை மாகாணத்தில் இருக்கிறார்கள். வருஷத்துக்கு 6 லட்சம் பிள்ளைகள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கோ அல்லது அதற்கு இணையான ஒரு பரீட்சைக்கோ போகவேண்டும் என்றால், இம் மாகாணத்தில் ஹைஸ்கூல்கள் எவ்வளவு பெருக வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இப்போதுள்ள கல்வி முறையை இப்படியே வைத்துக் கொண்டால் மேற் கண்டவாறு ஹைஸ்கூல்கள் பெருகுவது சாத்தியமா? ஒரு வேளைப் பள்ளிக்கூடம் என்று வைத்துக் கொண்டால் ஹைஸ்கூல் பிள்ளைகளின் தொகையை உடனே இரண்டு மடங்கு ஆக்கிக் கொள்ளலாம்.

1948-ம் வருஷத்திலிருந்து எஸ். எஸ். எல். ஸி. மாணவர்களுக்கு ஸெலெக்ஷன் பரீட்சையைச் சர்க்கார் ரத்து செய்தார்கள் அல்லவா?

சர்க்காரின் மேற்படி உத்தரவை மாற்றி மீண்டும் ஸெலெக்ஷன் பரீட்சைக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி பலமாக இருந்து வருகிறது. உபாத்தியாயர்களும் தலைமை ஆசிரியர்களும் கிளர்ச்சி செய்கிறார்கள்.

எல்லா மாணவர்களையும் பரீட்சைக்கு அனுப்பி விடுவது என்ற ஏற்பாடு வந்ததினால், பிள்ளைகளுக்குப் படிப்பில் சிரத்தை குறைந்து போய் விட்டதாம். அவர்கள் சரியாகப் படிக்கிறதில்லையாம்!

உபாத்தியாயர் சமூகத்திடம் நமக்கு மிகுந்த மதிப்பு உண்டு. இருந்தாலும் ஸெலெக்ஷன் பரீட்சை வேண்டும் என்கிற அவர்களுடைய கிளர்ச்சியை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அதற்கு ஆதாரமாக அவர்கள் கூறும் வாதம் முற்றிலும் தவறானது என்பதே நமது அபிப்பிராயம்.

படிப்பில் மாணவர்களுக்குச் சிரத்தையில்லை என்றால் அது யாருடைய குற்றம்? ஏன் அவர்களுக்குச் சிரத்தை ஏற்படவில்லை? சம்பளத்தைக் கொடுத்துப் பள்ளிக்கூடத்துக்குப்போய்ச் சிரத்தையாகப் படிக்காமல் காலத்தை வீணாக்குவதில் அவர்களுக்கு என்ன ஆசை இருக்க முடியும்?

டைப் ரைட்டிங், புக் கீப்பிங் போன்ற பரீட்சைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு ஸெலெக்ஷன் பரீட்சை நடத்துவதில்லை. அப்படியிருந்தும் அந்தப் பரீட்சைகளில் பிள்ளைகள் சிரத்தையாகப் படித்துத் தேறவில்லையா?

எனவே, படிப்பில் மாணவர்களுக்குச் சிரத்தையில்லை என்று கூறி ஸெலெக்ஷன் பரீட்சையை மறுபடியும் புகுத்துவது, தானாகக் கனியாத பழத்தைத் தடிகொண்டு அடித்துக் கனிய வைப்பதாக முடியும்!

இந்தியா சுதந்திரம் பெற்றும் நமது கல்வி முறை மட்டும் சிறிதும் மாறாமல் பழையபடியே யிருக்கிறது என்பதற்கே இது அறிகுறியாகும். முதலில் நம் ஆசிரியர்கள் கல்வி முறை விஷயமாகத் தங்களுடைய மனதை மாற்றிக் கொள்ள வேண்டும். பிறகு, எல்லாக் குறைகளும் நீங்கும்; எல்லா நன்மைகளும் பின் தொடர்ந்து வரும்.

ஜீவகாருண்ய சட்டப்படி குற்றம் என்று கருதப்படும் இடங்களில் குழந்தைகள் அடைக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் நினைத்த மாத்திரத்தில் இத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் தேடிவிட முடியுமா? பணக்கஷ்டத்தையும் மற்ற நிலைமைகளையும் மனதிற்கொண்டுதான் நாம் எந்தத் திட்டத்தையும் வகுக்க முடியும்'' என்று கல்வி மந்திரி கனம் கே. மாதவ மேனன் புகார்களுக்குப் பதில் அளித்தார்.

கனம் கல்வி மந்திரியின் பதில் எதைக் காட்டுகிறது? கல்வித் துறையில் சென்ற வருஷம் இருந்ததைக் காட்டிலும் சென்னை சர்க்கார் ஓர் அடிகூட முன்னேறவில்லை என்பதை அவருடைய பதில் நிரூபிக்கவில்லையா?

இந்த நிலைமையில் அடுத்த வருஷம் முன்னேற்றம் ஏற்படலாம் என்பதற்கான அறிகுறியும் தென்படவில்லை.

இப்போது பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கே போதிய கட்டிட வசதி இல்லையென்றால், மற்ற 37 லட்சம் குழந்தைகளுக்கு எந்த யுகத்தில் கதி மோட்சம் ஏற்படும்?

இவர்களைத் தவிர வருஷா வருஷம் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி ஆவது?

ஆரம்ப ஆசிரியர்கள் ''சம்பளம் போதவில்லை'' என்ற கிளர்ச்சியை மறுபடியும் தொடங்கியிருக்கிறார்கள்.

''இப்போதுள்ள உபாத்தியாயர்களுக்குத் தலா ஒரு ரூபாய் விதம் சம்பள உயர்வு கொடுத்தால்கூட பத்து லட்சம் ரூபாய் தேவையாக இருக்கும். தற்போதுள்ள நிலைமையில் அவ்வாறு கொடுப்பது சாத்தியமில்லாத காரியம்'' என்றும் கல்வி மந்திரி கூறுகிறார்.

இந்த நிலைமையில் அதிகமான குழந்தைகள் கல்வி பெறுவது எப்படி? அதிகக் கட்டிடங்களுக்கு வழி செய்வது எப்படி? அதிக உபாத்தியாயர்களை நியமிப்பது எப்படி?

மலை போன்ற இந்த மாபெரும் பிரச்னையைத் தீர்ப்பதற்குற்ற சுலபமான ஒரே வழி ''ஒரு வேளைப் பள்ளிக்கூடம்: இரண்டரை மணிப் படிப்பு'' என்று சென்ற வருஷம் நாம் குறிப்பிட்டிருந்தது ஞாபக மிருக்கலாம்.

இந்த முறையைக் கைக்கொண்டால் தற்போதுள்ள கட்டிடங்களிலேயே, தற்போதுள்ள உபாத்தியாயர்களைக் கொண்டே, 70 லட்சம் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கலாம்.

முழு நேரப் பள்ளிக்கூடங்களின் மூலமாகவே பாக்கியுள்ள 37 லட்சம் குழந்தைகளுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுப்பதென்றால், மேலும் வருஷத்துக்குப் பத்துக் கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும்.

பத்து லட்சம் ரூபாய் அதிகச் செலவைச் சமாளிக்க முடியாமலிருக்கும் போது பத்துக் கோடி ரூபாய்க்கு எங்கே போவது?

பணம் கிடைத்தாலும் உபாத்தியாயர்களுக்கு எங்கே போவது? கட்டிடங்களுக்கு எங்கே போவது?— போதிய பணமும் உபாத்தியாயர்களும் கட்டிடங்களும் தயாராக இன்னும் எத்தனை காலம் ஆகும்? அதற்குள்ளே லட்சக் கணக்கான குழந்தைகள் பெருகிப் பள்ளிக்கூடம் போகத் தயாராகி விடுவார்களே? அவர்கள் எல்லோரையும் என்ன செய்வது?

நம்முடைய யோசனையைக் கட்டாயம் சர்க்கார் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் வேறு எந்த வழியைக் கடைப்பிடித்து இந்த நாட்டில் உள்ள குழந்தைகள் எல்லாரையும் நமது சர்க்கார் படிக்க வைக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். வேறு வழி இருந்தால் அதைச் சொல்லட்டும்.

* * *

இந்த வருஷம் நமது மாகாணத்திலே மொத்தம் 68,000 மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு எழுதி யிருக்கிறார்கள்.

அவர்களில் பாதிப் பேர்களுக்கு மேல் 'பாஸ்' செய்யலாம். பாஸ் செய்தவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் கலாசாலைகளில் சேர்ந்து கொள்வார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் என்ன செய்யப் போகிறார்கள்? அந்த இருபதினாயிரம் பேருக்கும் உத்தியோகம் கிடைக்குமா? எந்தத் தொழில் துறையில் ஈடுபடுவதற்குற்ற யோக்கியதை அவர்களுக்கு இருக்கிறது? பாஸ் செய்யாத பதினாயிரக் கணக்கானவர்களின் கதி என்ன ஆவது?

ஒரு வேளைப் பள்ளிக்கூடம் என்ற முறை அமுலுக்கு வருமாயின், குழந்தைகளுக்குச் சிறுவயதிலிருந்தே பள்ளிக்கூடப் படிப்பைத் தவிர ஏதாவதொரு தொழிலிலும் பயிற்சியளிப்பது சாத்தியமாக இருக்கும். குழந்தைகள் அவரவருடைய பெற்றோரின் தொழிலிலோ அல்லது இஷ்டமான வேறு தொழிலிலோ பயிற்சி பெறலாம். பள்-

மனம் இருந்தால் வழி இருக்கிறது

வோட்டுரிமைக்கும் கல்விக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பதை மறுப்பவர்கள் யாருமில்லை.

அதாவது ஒரு நாட்டில் வாக்குரிமை பெருதவர்களே இருக்கக்கூடாதெனில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் இருக்கக் கூடாது.

இந்த நியதியை அனுசரித்தே, உலகத்தில் உள்ள சுதந்திர நாடுகளில் சிறுவர் சிறுமியர் யாவரும் கட்டாயக் கல்வி பெறவேண்டும் என்ற முறை அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. எல்லோருக்கும் வயது வந்த பின் வாக்குரிமையும் அளிக்கப் படுகிறது.

அத்தகைய நாடுகளில் இருக்கும் மக்களில் 95 சத விகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் 75 சத விகிதம் பேர் வாக்குரிமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஆனால், நேற்று வரையில் அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்த இந்தியாவிலே மாத்திரம் நிலைமை தலைகீழாக இருப்பதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

நமது நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை பத்து சத விகிதத்துக்கும் குறைவாகும். ஆனால், சுதந்திர அரசியல் திட்டத்தின்படி ஐம்பது சத விகிதத்துக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமை பெறுகிறார்கள்.

முன்னேற்றம் அடைந்துள்ள மற்ற நாடுகளில் இருப்பதுபோல் தொண்ணூற்றைந்து சத விகிதம் பேர் கல்வியறிவு உள்ளவர்களாக இராவிட்டாலும் குறைந்த பட்சம் நூற்றுக்கு ஐம்பது பேராவது கல்வியறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டாமா?

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வாக்குரிமை பெற்றவர்களாக இருப்பது இந்தியாவின் பெருமைக்கு இழுக்கு அல்லவா?

நமது நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை ஐம்பது சத விகிதமாவது உயர்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்ற கேள்விக்குப் பதில் அளிப்பது எளிதல்ல.

தற்போதைய நிலைமை நீடிக்குமாயின் கலியுகம் முடிவதற்குள்ளாவது கல்வித் துறையிலே கதிமோட்சம் ஏற்படுமா என்பது சந்தேகம்தான்!

சென்னை மாகாணத்திலே பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் வயதுள்ள 70 லட்சம் குழந்தைகள் இருக்கிறார்கள்; இவர்களில் 35 லட்சம் குழந்தைகள் இப்போது பள்ளிக்கூடம் போகிறார்கள்; பாக்கி 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூட வசதியில்லாமல் தத்தளிக்கிறார்கள் என்று சென்ற வருஷம் கூறப்பட்டது.

இந்த வருஷத்திலும் சென்னை சர்க்கார் அதே பல்லவியைத்தான் பாடித் தீர்த்திருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தின் 50 கோடி ரூபாய் வருமானத்தில் 11 கோடி கல்வி இலாகாவுக்காகச் செலவு செய்யப் படுகிறது. மேலும் பணம் செலவு செய்வது சமீபத்தில் இயலாத காரியம் என்று சென்ற வருஷத்தில் சென்னை சர்க்கார் கையை விரித்தார்கள்.


இந்த வருஷத்திலும் நிலைமை அன்றிருந்தது போலவே இருக்கிறது.

சென்னை சர்க்காரின் 1950-51ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தையொட்டி சட்டசபையில் விவாதம் நடந்த போது, "கட்டாயக் கல்வி முறையைப் பரப்ப சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள்?" என்று அங்கத்தினர்கள் வழக்கம் போல் கேட்டனர்.

அந்தக் கேள்விக்கு சர்க்காரும் வழக்கம்போல் பதில் கூறி விட்டார்கள்.

"அங்கத்தினர்கள் அனுஷ்டான சாத்தியமற்ற விஷயத்தைப் பற்றிப் பேசக் கூடாது. தற்போது பள்ளிக்கூடம் போகும் வயதுள்ள குழந்தைகள் சுமார் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 33 லட்சம் பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள். இவர்கள் வாசிப்பதற்கே போதிய கட்டிட வசதியில்லாமல் சர்க்கார் கஷ்டப்படுகிறார்கள். மிருகங்களை அடைத்துவைத்தால் கூட

சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம்!



சென்னை தண்ணீர்ச் சப்ளை ஸ்டேஷனில் சென்ற வாரம் நடந்த நிர்மாண வேலைகளை முன்னிட்டு சென்னையில் ஒரு நாள் - இருபத்தோரு மணி நேரம் தண்ணீர்ச் சப்ளை நிறுத்தப் பட்டது. இன்னும் ஒரு நாள் தண்ணீரை நிறுத்தியிருந்தால், மேலே குறிப்பிட்ட அச்

கொள்ளுங்கள்; இனிமேல் இப்படி எதுவும் நடக்காமல் ஜாக்கிரதை செய்கிறோம்" என்று பகிரங்கமாக உண்மையை ஒப்புக்கொண்டு பேசினால் எவ்வளவோ நன்றாயிருக்கும். காந்தி மகாத்மா தம்முடைய சிறு தவறைக் கூட "இமாலயத் தவறு" என்று சொல்லுவது வழக்கம். காந்திஜியின் வழிவந்தவர்கள் எதற்காகச் சுற்றி வளைத்து மூக்கைத் தொடவேண்டும்? ஹைதராபாத் தனி மாகாணமாயிருக்கலாம். ஆனால் அம் மாகாணத்தில் நடக்கும் காரியங்களுக்கு இந்திய அரசாங்கத்துக்குப் பொறுப்புக் கிடையாதா? ஹைதராபாத்தின் முதன் மந்திரி ஸ்ரீ வெள்ளோடி இந்திய சர்க்காரால் அனுப்பப்பட்டவர் தானே? நாளைக்கு நைஜாம் அவரைத் தள்ளிவிட்டு ஒரு ரஸாக்கரை முதன் மந்திரியாக்கிக் கொண்டால் இந்திய சர்க்கார் "எங்களுக்குப் பொறுப்பில்லை" என்று சும்மா இருந்து விடுவார்களா?

நாடகக் கழக நிகழ்ச்சிகள்

குறைந்த கட்டணத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நல்ல நாடகங்களைப் பார்க்கச் செய்வது நாடகக் கலைக்கு எவ்வளவு சிறந்த சேவை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நாடகக் கழகம் ஏற்பட்ட அதே காங்கிரஸ் மைதானத்தில் அதே மேடையில் வரிசையாகப் பல உயர்தர நாடகங்களை நாடகக் கழகத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மார்ச்சு மீ 25உ சனிக்கிழமை ஸ்ரீ டி. கே சண்முகம் அவர்களின் "ஔவையார்" நாடகத்துடன் இந்த நாடக வரிசை ஆரம்பமாகிறது. மறுநாள் 26உ "மனிதன்" நாடகம். பிறகு ஒவ்வொரு சனி, ஞாயிறுகளிலும் நாடகங்களோ, அல்லது நாடகக் கழகத்தின் ஆதரவில் சங்கீத-நடனக் கச்சேரிகளோ நடை பெறுகின்றன. நாடகக் கலையை வளர்ப்பதில் சிரத்தை கொண்ட அன்பர்கள் அனைவரும் மேற்படி நிகழ்ச்சிகளுக்குப் பூரண ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

தமாஷா வரி தொலையுமா?

சென்ற 18உ சனிக்கிழமை மாலை நாடகத்தின் நிர்வாகிகள் சென்னைப் பத்திரிகையாளரை அழைத்துச் சிற்றுண்டி விருந்து ஒன்று நடத்தினார்கள். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காரியதரிசி ஸ்ரீ கே. சுப்பிரமணியம் நாடகக்கழகத்தின் நிகழ்ச்சித் திட்டத்தை எடுத்துக் கூறிப் பத்திரிகையாளரின் உதவியைக் கோரினார். நாடகக் கழகத் தலைவர் ஸ்ரீ டி. கே. சண்முகம் மற்ற விஷயங்களோடு தமாஷா வரியினால் நாடகக் கலை அடைந்துவரும் கேட்டைக் குறிப்பிட்டார். அந்த வரியினால் ஏற்படும் தொல்லை பொருளாதார சம்பந்தமானது மட்டுமல்ல என்றும், வரி விதித்து வசூலிக்கும் சில்லறை அதிகாரிகளிடம் நாடக நிர்வாகிகள் போய் நின்று அவர்களுடைய தயவை எதிர்பார்த்துக் காரியத்தை முடித்துக் கொண்டு வருவதற்குள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல என்றும் எடுத்துக் கூறினார். "அரசாங்கம் மாறியிருக்கிறதே தவிர அதிகாரிகள் மாறவில்லை!" என்று ஸ்ரீ டி. கே. சண்முகம் கூறிய சொற்களில் சோகம் ததும்பியது. இந்த விஷயத்தை வைத்துக் கொண்டே ஒரு நாடகம் தயாரித்து நடத்தலாம் போலிருக்கிறதே என்று தோன்றியது.

மூர்ச்சை அடையாதீர்கள்!

தமிழ் நாட்டில் இன்று நாடகக் கலைத் துறையின் மாபெருங் கிழவராக விளங்கிவருபவர். ஸ்ரீ பி. சம்பந்த முதலியார் அவர்கள். அவருக்கு எண்பது வயது நிறைவதற்கு இன்னும் இரண்டே வருஷந்தான பாக்கியிருக்கிறது. ஸ்ரீ சம்பந்த முதலியார் இயற்றி அச்சிட்டு வெளியாகியிருக்கும் தமிழ் நாடகங்கள் எத்தனையென்று தெரியுமா? மூர்ச்சையடைந்து விடாதீர்கள்! மொத்தம் ஸ்ரீ சம்பந்த முதலியாரின் 93 நாடகங்கள் இதுவரை அச்சாகியிருக்கின்றன! அச்சிட வேண்டிய நூல்கள் இன்னும் மூன்று அவரிடம் கைவசம் இருக்கின்றன! புகழ் பெற்ற சுகுணவிலாச சபையை ஆரம்பித்து நடத்திய பிரமுகர்களில் ஸ்ரீ பி. சம்பந்த முதலியார் முக்கியமானவர் என்பதும், அவரே பல நாடகங்களில் வேஷந் தரித்து நடித்துப் பெயர் வாங்கியவர் என்பதும் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அப்படிப்பட்டவரை அன்று நாடகத்துக்கு ஆசி கூறும்படி கேட்டபோது அவர் என்ன கூறினார் தெரியுமா? "நான் ஆசி கூறுவதினால் என்ன பயன்? சர்க்கார் அல்லவா ஆசி கூற வேண்டும்? சர்க்கார் பெரிய மனது செய்து நாடகத்துக்குத் தமாஷா வரியை ரத்து செய்ய வேண்டும். இல்லாத வரையில் நாடகக் கலையை உயிர்ப்பிப்பது கஷ்டந்தான்!" என்று கூறினார். அமெச்சூர் நடிகர்களும் நாடக சபைகளும் நாடகம் நடத்த முடியாமற் போனதற்குத் தமாஷா வரி ஒரு முக்கிய காரணம் என்பதைக் குறிப்பிட்டார். தமது வாழ்வெல்லாம் நாடகக் கலைக்கே அர்ப்பணம் செய்த இந்த மாபெருங் கிழவரின் குரலுக்காவது சென்னை மந்திரிகள் செவி சாய்ப்பார்களாக.

கல்கி

மலர் 9 | இதழ் 34

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

என்ன சேதி?

பார்லிமெண்டு குதர்க்கம்

நியாயமோ, அநியாயமோ, எந்தக் கட்சியைக் கொடுத்தாலும் வக்கீல்கள் அந்தக் கட்சியை நிலை நாட்டுவதற்காக வாதம் செய்வார்கள் என்பது பிரசித்தம். ஆகையினாலேயே வெறும் குதர்க்கமான பேச்சைச் சில சமயம் 'வக்கீல் வாதம்' என்று குறிப்பிடுவதுண்டு. அத்தகைய வக்கீல் வாதத்தை நம்முடைய இந்தியப் பார்லிமெண்டில் நடக்கும் விவாதம் தூக்கி அடித்து விடும்போலிருக்கிறது. ஹைதராபாத்தில் போலீஸ் பாதுகாப்பிலிருந்து லெயிக் அலி தப்பித்துக்கொண்டு சென்றார் அல்லவா? அதைப் பற்றி விவாதிக்க இந்தியப் பார்லிமெண்டுக்கு உரிமை உண்டா, இல்லையா என்பதைப் பற்றி நாள் கணக்காக அந்தப் பார்லிமெண்டில் விவாதம் நடந்தது. "அது ஹைதராபாத் மாகாண நிர்வாகத்தைப் பற்றிய விஷயம். ஆகையால் இந்தியப் பார்லிமெண்டில் விவாதிக்க உரிமையில்லை" என்று ஒரு கட்சியார் வாதமிட்டார்கள். இன்னொரு கட்சியார் "ஹைதராபாத் மாகாணத்தில் சட்டசபை இல்லை; ஆகையால் இந்தியப் பார்லிமெண்டில் விவாதிக்காமல் வேறு எங்கே விவாதிப்பது?" என்றார்கள். இந்த அர்த்தமில்லாத விவாதத்தில் பல அங்கத்தினர் கலந்துகொண்டு வார்த்தைகளைக் கொட்டி அளந்தார்கள். ஆங்கிலத்தில் 'ஹேர் ஸ்பிலிட்டிங்' (ரோமத்தைப் பிளத்தல்) என்று ஒரு சொற்றொடர் உண்டு. அதற்கு இந்த விவாதத்தைக் காட்டிலும் சிறந்த உதாரணத்தைக் காண முடியாது. அவ்வளவு நுட்பமாகச் சட்டங்களையும் விதிகளையும் அணு அணுவளவாகப் பிளந்து விவாதம் செய்தார்கள். இந்தக் குதர்க்க வாதங்களையெல்லாம் "நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் காரியம்" என்றே சொல்ல வேண்டும்.

தவறை ஒப்புக்கொள்ளுங்கள்

பார்லிமெண்டில் நடந்த மேற்படி விவாதத்தைப் படிக்கும்போது "ஹைதராபாத் இந்தியாவைச் சேர்ந்ததுதானா, அல்லது தனிப்பட்ட சுதந்திர தேசமா?" என்றே சந்தேகம் தோன்றியிருக்கும். தனிச் சுதந்திர தேசம் என்று ஹைதராபாத்தில் சிலர் உரிமை கொண்டாடத் துணிந்ததினால்தான் இரண்டு வருஷத்துக்கு முன்பு இந்திய சர்க்கார் இராணுவத்தை அனுப்பிப் போலீஸ் நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. அச்சமயம் இந்திய சர்க்காருக்கு விரோதமாயிருந்தவர்களில் முதன்மையானவர் லெயிக் அலி. அப்படிப்பட்டவர் விஷயத்தில் சரியான நடவடிக்கை எடுக்காமல் இத்தனை காலம் விட்டு வைத்திருந்ததே பெருந் தவறு. அவரைப் பந்தோபஸ்து செய்யத் தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்யாமல் விட்டது இன்னும் பெரிய தவறு. குடும்பத்தாருடனும் பூனை நாய்களுடனும் அவர் தப்பியோடி மூன்று நாளைக்குப் பிறகுதான் ஹைதராபாத் அதிகாரிகள் விழித்துக் கொண்டார்கள் என்றால், அங்கே நிர்வாகத்திறமை என்பது எவ்வளவு சூனிய நிலையை அடைந்திருந்தது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. இதற்கெல்லாம் இந்திய சர்க்காரின் உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகாவும் சுதேச சமஸ்தான இலாகாவும் பொறுப்பு வகித்தே தீரவேண்டும். தம் கீழ் உள்ள இலாகா அதிகாரிகளின் தவறுகளைப் பூசி மெழுகுவதற்கு ஸர்தார் படேல் இவ்வளவு சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதில்லை. அவரைத் தாங்கி நிற்பதாக எண்ணிக்கொண்டு சில மந்திரிகளும் பார்லிமெண்டு அங்கத்தினர்களும் இவ்வளவு 'வக்கீல் வாதம்' செய்ய வேண்டியதுமில்லை. "எப்படியோ தவறு நேர்ந்துவிட்டது; இந்தத் தடவை பொறுத்துக்



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 34 | மார்ச் 26 | விரோதி ஞா பங்குனி 13

"எச். எம். வி." வெளியீடுகள்!

டி. கே. எஸ். சகோதரர்களின் அற்புதமான இசைத்தட்டுகள்!



ஸ்ரீ டி. கே. ஷண்முகம் & ஸ்ரீ டி. என். சிவதாணு

N. 28117

ஏழைக்கு ஏது இன்பம்

2 பாகங்கள்

○ ● ○



டி. கே. எஸ். சகோதரர்கள்

N. 28134

விறகு தலையன்

2 பாகங்கள்

("சிவலீலா" நாடகத்திலிருந்து)

○ ● ○



டி. கே. எஸ். சகோதரர்கள்

N. 28061 to N. 28065

ஒளவையார்

10 பாகங்கள்

(நாடக செட்டு)

○ ● ○



ஸ்ரீ கே. ராமசாமி & ஸ்ரீ டி. கே. ஷண்முகம்

(காமிக்)

N. 28157

லவ்வு

ஸ்ரீமதி எம். எஸ். திரௌபதி & ஸ்ரீ கே. ராமசாமி


ஆசை தான்

HIS MASTERS VOICE

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்

கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி


ZENITH
நேர்மையான
நேரங் காட்டும்
ஜெனித் கடிகாரங்கள்
சகாயமான
விலைகளில்
உலகத்தில் அற்
புதமான கடிகார
வகைகளில் ஜெனித்
கடிகாரங்களுக்கு எப்
போதும் ஒரு ஸ்தானம்
இருந்திருக்கிறது. நாணய
மதிப்புக் குறைவு இருந்தும்
அனேக அழகிய அமைப்புக
ளுடன் பல ரக புத்தம் புதிய
ஸ்டாக்குகளை வெகு சிலாக்கியமான
விலைக்கு நாம் அளிக்கிறோம்.
FAVRE-LEUBA
கைமேல் காட்டியதுபோல் (7¾''' × 10''' சைஸ்)
No. 1143. 7¾''' × 10''' சைஸ்
10½''' சைஸ்
ஸ்டீல் கேஸ் — ரூ. 225
பேவர்லுபா & கம்பெனி லிட்., பம்பாய் & கல்கத்தா
FAVRE-LEUBA



திருப்பூரிலே பிரபல பஞ்சு வியாபாரியான ஸ்ரீ வி. ஆறுமுகம் பிள்ளையின் மைத்துனர் **ஸ்ரீ ஞானசுந்தரத்திற்கும்,** அருப்புக்கோட்டை சொக்கநாதஸ்வாமி கோவில் ஹக்தார் ஸ்ரீ எம். எஸ். சோமசுந்தரம் பிள்ளையின் குமாரி சௌ. தெய்வயானையம்மாள் என்கிற **சாரதாம்பாளுக்கும்** திருப்பூரில் விவாகம் அதி விமரிசையாக நடந்தேறியது. குமாரி வனஜாவின் நடன விருந்து வெகு ஜோர். ஏராளமான விருந்தினர்களும், உறவினர்களும் வந்திருந்து மணமக்களுக்கு ஆசி கூறினர். வந்திருந்தவர்களுக்கும், ஆசி அனுப்பியவர்களுக்கும் ஸ்ரீ ஞானசுந்தரம் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

உணவின் சத்து இதோ!



Tushar

VANASPATI

சமையலுக்குச் சிறந்த சாதனம்

FOR EXTRA NOURISHMENT


துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்

பிரதம விநியோகஸ்தர்கள்:

தமிழ் நாடு, ஆந்திர தேசத்திற்கு: மெஸர்ஸ். கன்னா & கம்பெனி
35, மவுண்ட்ரோடு மதராஸ்

மைசூர் சமஸ்தானத்திற்கு: தோட்ட துன்னப்ப நாராயண ஸ்வாமி & கோ.,
200, கப்பான் பேட்டை, பெங்களூர் ஸிடி.

ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு: காசிராம்லால் அண்டு கோ.,
8568/1 & 2, ஜேம்ஸ் தெரு, செகந்திராபாத்



சேமித்து வைக்கவில்லையே என்று வருத்தப்படும் நாளும் வரும்.
முதலிடுங்கள்
நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்களில்
இவை தபாலாபீஸுகளிலும், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமும் (நியமிக்கப்பட்டிருக்கும் இடங்களில்), ஸேவிங்ஸ் பீரோக்களிலும் கிடைக்கும்.
புது டில்லி இந்திய சர்க்கார் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.
AC75TM


தமிழ் நாடெங்கும்
இப்பொழுது வெற்றிகரமாக
நடைபெறுகிறது
25-3-50 முதல்
★
சென்னை
பிரபாத்
கெயிட்டி
சரஸ்வதி
★
ஜூபிடரின்
விஜயகுமாரி


ஹெர்குலஸ்

இன்று உற்பத்தியாகும் சைகிள்களில் மிக நேர்த்தியானது



உலகிலேயே ஏராளமாக் உற்பத்தி செய்யப்படுவது

ஹெர்குலஸ் சைகிள் அன் மோட்டார் கம்பெனி லிமிடெட், பர்மிங்ஹாம், இங்கிலாந்து



'ஹெர்குலஸ்' மூன்று வேக

[redacted]